வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu வீர மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 31.10.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 330 | பக்கங்கள் : 20







**08** ‘மொட்டு’ கூட்டணிக் குள் நெருக்கடி; ‘யுகதனவி’ சிக்கலுக்கு தீர்வு என்ன?



**09** ‘ஒரே நாடு ஒரே சட்டம்” எழுப்பும் கேள்விகள்!



**13** அதிர்ச்சித் தோல்வி



**18** ஆளுங்கட்சி பங்காளிகள் பகிரங்க கூட்டம்

# மீண்டும் விக்கி முதல்வராக ஆதரவு இல்லை!

## சிவாஜிலிங்கம் அதிரடி அறிவிப்பு



*யாழ்ப்பாணம், ஒக். 31*

நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக மீண்டும் களமிறங்கினால் ஆதரவளிக்கப்போவதில்லை என, சி. வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான தமிழ்த் தேசியக் கட்சி தெரிவித் 19

# மாகாணதடை இன்று நீக்கம்!

*கொழும்பு, ஒக். 31*

நாட்டில் அமுலில் உள்ள மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாடு இன்று அதிகாலை 4 மணி முதல் தளர்த்தப்பட்டுள்ளது.

பயணத்தடை இவ்வாறு தளர்த்தப்பட்டாலும், அநாவசியமாக மாகாணம் தாண்டுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதார தரப்பி 19

# கிளாஸ்கோ நகரத்தை அடைந்தார் ஜனாதிபதி

*லண்டன், ஒக். 31*

ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரிட்டன் நோக்கிப் புறப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரைச் சென்றடைந்தார்.

ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர், அந்நாட்டு நேரப்படி நேற்று பிற்பகல் 12.40 19





# விகிதாசார முறைப்படியே அனைத்து தேர்தல்களும்!

## தமிழ், முஸ்லிம் கட்சிகள் நேற்று கொழும்பில் கூட்டாக தீர்மானம்

**கொழும்பு, ஒக்ரோபர் 31**

**பலமான நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, 20ஆவது திருத்தத்தின் மூலம் மேலும் பலமாக்கப்பட்ட பின்னணியில், பாராளுமன்ற, மாகாணசபை, உள்ளூராட்சி தேர்தல்கள், அனைத்து மாற்று அரசியல் கொள்கைகளை முன்னெடுக்கும் கட்சிகளினதும் மற்றும் அனைத்து சமூகக் குழுக்களினதும் பிரதிநிதித்துவங்களுக்கு வழிவகுக்கும் வகையில், முழுமையாக விகி தாசார முறைமையின்படியே நடத்தப்படவேண்டும் எனச் சிறுபான்மைக் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.** 19



# குடாநாட்டில் கடும் மழை பல பகுதிகளில் வெள்ளம்

*யாழ்ப்பாணம், ஒக். 31*

யாழ். குடாநாட்டில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நேற்றுக் காலை முதல் மாலை வரை கொட்டித்தீர்த்த கடும் மழையினால் பல பகுதிகள் வெள்ளக் காடாக காட்சியளித்தன.

யாழ்ப்பாணத்தில் பருவ மழை கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து 19

# பங்காளிகளுடனான உறவை முறிக்க தயாராகிறது மொட்டு!

*கொழும்பு, ஒக். 31*

“திருமண பந்தத்தில் விருப்பம் இல்லையெனில் விவாகரத்து பெறவேண்டும். அதேபோல அரசில் அங்கம் வகிக்க முடியாவிட் 19

# வன்முறைக்கு தயாராக இருந்த 13 பேர் வல்வெட்டித்துறையில் நேற்று சிக்கினர்

## போதைப்பொருள்கள், வாள்கள் கைப்பற்றல்

*யாழ்ப்பாணம், ஒக். 31*

வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதிக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த 13 பேர் பொலிஸாரினால் கைது 19




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் சேவையை பெற வசதி

யாழ்ப்பாணம், ஒக். 31

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் யாழ் மாவட்ட அலுவலகத்துக்கு செல்லும் சேவைபெறுபவர்களுக்கு, தற்போது காணப்படும் கோவிட் 19 நிலைமைகளின் கீழ், வினைத்திறனாகவும் சுகாதார பாதுகாப்புடனும் உரிய சேவைகளை தொடர்ச்சியாக வழங்குவதற்கு கடந்த 29ஆம் திகதி தொடக்கம், முன்னரே ஒரு திகதியையும் நேரத்தையும் ஒதுக்கிக்கொள்வதற்கு இயலுமான வகையில் தன்னியக்க தொடர்பு கட்டமைப்பு ஒன்றும் இணையத்தளம் ஒன்றும் தலைமை அலுவலகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து யாழ். மாவட்ட மோட்டார்வாகன போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் ய.பரந்தாமன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சேவைபெறுநர்களால் யாழ் மாவட்ட அலுவலகத்தில் சேவைகளைப் பெற்றுக் கொள்ள 021 211 7116 என்ற தன்னியக்க தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் ஊடாக அல்லது https://dntappointments.dmt.gov.lk என்ற இணையத்தளத்துக்கு பிரவேசிப்பதன் ஊடாக பொருத்தமான அலுவலக நாளில் திகதி ஒன்றையும் நேரத்தையும் நாளின் எந்த நேரத்திலும் ஒதுக்கிக்கொள்ள முடியும். அதன் அடிப்படையில் தற்போது காணப்படுகின்ற கொவிட் 19 நிலைமையின் கீழ், முன்னரே நேரத்தை ஒதுக்கிக்கொண்ட சேவைபெறுநர்களுக்கு மட்டுமே எமது அலுவலகத்தின் அனைத்து சேவைகளும் வழங்கப்படும்.

அவ்வாறே இதற்கு முன்னர் எமது அலுவலகத்தின் வாகன உரிமை மாற்ற சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் 070 635 4155 மற்றும் 070 635 4156 என்பன 2021.10.29 ஆந் திகதியின் பின்னர் செயற்படாது என்பதனையும், குறித்த கைத்தொலைபேசி இலக்கங்கள் ஊடாக செய்யப்பட்ட முற்பதிவுகளை மேற்கொண்டவர்கள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான சேவைகளைப்பெறுவதற்காக நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதத்திற்கான அடையாளச் சான்றுகளை (Token) பெற்றவர்கள் மேற்படி புதிதாக அறிமுகமான முற்பதிவு முறைகளைப் பயன்படுத்தி சேவைகளை 01.11.2021 முதல் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

மேற்படி விடயம் தொடர்பான விசாரணைகளுக்கு 021 222 3730 மற்றும் 021 222 7552 என்ற இலக்கங்களை அல்லது 070 659 9078 என்ற கைத் தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் - என்றுள்ளது. (அ)

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 10 - 01 - 1921



**மறைவு** 21 - 10 - 2021

### திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

(Retired Railway Head Guard)

யாழ். தெல்லிப்பழை, கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை மற்றும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட, திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் ( இளைப்பாறிய, தலைமை, புகையிரதப் பாதுகாவலர்) கடந்த 21.10.2021 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை – சாணப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான வட்டுக்கோட்டை ஆறுமுகம் – வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கையிலைநாயகியின் பாசமிகு கணவரும் ஜெயவதி (அமெரிக்கா), ஜெயராணி (கனடா), ஜெயந்தி (லண்டன்), ஜெயச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீதரன், ரபீந்திரநாத், கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வினி, விபுலன், ஹரன், நந்திகா, பிரியன், லோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சின்னப்பிள்ளை, மாப்பாணர், சேதுப்பிள்ளை, கந்தையா (இளைப்பாறிய மகாஜனக் கல்லூரி அதிபர்), செல்லமுத்து மற்றும் காலஞ்சென்ற செல்லத்துரை ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை லண்டனில் நாளை ( 01-11-2021) திங்கட்கிழமை மு.ப 06:30 மணிமுதல் மு.ப 08:00 மணிவரை நடைபெற்று, பின்னர் மு.ப 09:00 மணி முதல் மு.ப 09:30 மணிவரை Hither Green (VERDANT LANE, LONDON, SE6 1TP) மின் தகன மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
**திருமதி. அகிலவல்லி கிருபரட்ணம்**
(அமரர் கந்தையாவின் மகள்)

உடையார் வளவு,
சுன்னாகம்.

தொடர்புகளுக்கு:
**ஜெயவதி சிறீதரன் (மகள்) - 0013015911717**
**ஜெயராணி ரபீந்திரநாத் (மகள்) - 0014167470001**
**ஜெயந்தி சுப்பிரமணியம் (மகள்) - 00447551625941**
**ஜெயச்சந்திரன் சுப்பிரமணியம் (மகன்) - 00447886645825**

## கிளிநொச்சி விபத்தில் முதியவர் காயம்

கிளிநொச்சி, ஒக். 31

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தை அண்மித்து ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முதியவர் மேலதிக சிகிச்சைகளிற்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்து சம்பவம் நேற்றுக்காலை காலை 11.15 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தை அண்மித்த ஏ9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியை சேர்ந்த 75 வயதான பொன்னம்பலம் என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவர்.

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 31 பேர் கைது!

கொழும்பு, ஒக். 31

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில், நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 31 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதி முறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 480 ஆக அதிகரித்துள்ளது.

இதனிடையே நேற்றுமுன்தினம் மேல் மாகாணத்துக்கு உள்நுழைய முற்பட்ட 1,172 வாகனங்களில் வந்த 642 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை, மேல் மாகாணத்திலிருந்து வெளியேற முற்பட்ட 1,344 வாகனங்களில் வந்த 747 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிப் பயணிக்க முயன்ற 123 வாகனங்கள் 202 பேருடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (இ)

## மண் சரிவில் சிக்கி ஒருவர் பலி!

பதுளை, ஒக். 31

பதுளை, எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹல்பே தோட்டம் பகுதியில், வீதியின் மீது மண்சரிந்து விழுந்தில், வீதியில் பயணித்த 29 வயது நபர் மரணமடைந்தார்.

திவுல்கஸ்தென்ன, ஹேல ஹல்பே பிரதேசத்தை சேர்ந்த 29 வயது நபரே இவ்வாறு மரணமடைந்தார். (இ)

### 31.10.2021 ஞாயிற்றுக்கிழமை

கல்வி TV CHANNEL-1

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### 31.10.2021 ஞாயிற்றுக்கிழமை

கல்வி TV CHANNEL - 2

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு



# முன்னாள் வலய கல்வி பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் காலமானார்



யாழ்ப்பாணம், ஒக். 31

முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் வடம ராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய வலயங்களின் முன்னாள் கல்விப் பணிப்பாளரும் ஜி.ஐ. இசற்றின் முன்னாள் பணிப்பாளருமான வே.தி. செல்வரத்தினம் தனது 73 ஆவது வயதில் காலமானார்.

வல்வெட்டியைச் சேர்ந்த இவர் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக தனது அரச பணியை ஆரம்பித்து இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பு உத்தியோகத்தர் ஆக உயர்வு பெற்றவர்.

இடர் மிகுந்த காலத்தில் யாழ்ப்பாணத்தின் கல்வியை தளர்ந்து விடாமல் பேணியமையில் இவரது பங்கு அளப்பரியது என்று கல்வியாளர்கள் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர். (அ)

# மாகாணங்களுக்கு இடையிலான ரயில் சேவைகள் நவ.1 ஆரம்பம்

கொழும்பு, ஒக். 31

மாகாணங்களுக்கு இடையில் இடைநிறுத்தப்பட்டிருந்த ரயில் சேவையை மீளவும் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மாகாணங்களுக்கு இடையிலான ரயில் சேவை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைய, அலுவலக ரயில்கள் 152 தடவைகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

கண்டி பெலியத்த - மாத்தறை - காலி - மாஹோ - குருநாகல் - இறம்புக்கணை - புத்தளம் ஆகிய இடங்களில் இருந்து இந்த ரயில்கள் சேவையில் ஈடுபடவுள்ளன-என்றுள்ளது. (அ)

# பிரத்தியேக வகுப்புகளுக்கு அனுமதி

கொழும்பு, ஒக். 31

எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி தொடக்கம் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார்.

நவம்பர் முதலாம் திகதி முதல் கடைப்பிடிக்கவேண்டிய புதிய சுகாதார வழிகாட்டல்களும் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, 50 வீதமான மாணவர்களை உள்ளடக்கி பிரத்தியேக வகுப்புகளை முன்னெடுத்துச் செல்ல முடியுமெனவும் அவர் மேலும் கூறினார். (அ)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் யாழில் ஐ.நா. அலுவலகம் முன் போராட்டம்

## கொட்டும் மழைக்கு மத்தியிலும் முன்னெடுப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 31**

**காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் யாழ்ப்பாணம் கோயில் வீதியில் உள்ள ஐ.நா. அலுவலக முன்றலில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**




யாழ்ப்பாண மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் இந்த போராட் டம் நேற்று நடத்தப்பட்டது.

இந்த போராட்டத்தின்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், 'எமது பிள்ளை களை உலக நாடுகள் மீட்டுத்தர வேண்டும்', 'இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்', 'இந்த அரசாங்கத்தில் நம்பிக்கை யில்லை', 'சர்வதேசமே நமக்கு தீர்வை கொடு' போன்ற கோஷங்களை எழுப்பியவாறு கொட்டும் மழையிலும் குடை பிடித்தவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தின்போது புலனாய்வாளர்கள் அவ்விடத்தில் குவிந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

(அ-03)

# மோட்டார் போக்குவரத்து திணைக்கள சேவை பெற மாவட்ட அலுவலகங்களிலும் இணையவழி முற்பதிவு

கொழும்பு, ஒக். 31

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் சேவைகளைப் பெறுவதற்கு இணையவழி மற்றும் தொலைபேசி மூலம் திகதி மற்றும் நேரத்தை முற்பதிவு செய்யும் நடைமுறை அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நாரஹேன் பிட்டி மற்றும் வேரஹெர ஆகிய இரண்டு தலைமை அலுவலகங்களுக்கு மட்டுமே இந்த சேவை திறக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், நாட்டின் அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் இந்த முறை திறக்கப்பட்டுள்ளது என்றும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். (அ)



# யாழ். பல்கலையில் 6 விரிவுரையாளர்கள் பேராசிரியர்களாக பதவியுயர்வு பெற்றனர்

மருத்துவ பீடம்



கலைப் பீடம்



யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 6 சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாப் பதவியுயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்த கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. இதன்போது பேராசிரியர் பதவி உயர்வுக்கு விண்ணப்பித்து மதிப்பீடுகள் மற்றும் நேர்முகத் தேர்வுகளில் தகுதி பெற்ற 6 சிரேஷ்ட விரிவுரையாளர்களின் விவரங்கள் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நடைமுறைகளுக்கமைய அந்தந்த விண்ணப்ப தினங்களில் இருந்து பேராசிரியர்களின் பதவி உயர்வைப் பேரவை அங்கீகரித்துள்ளது.

அதன்படி, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து சத்திர சிகிச்சைத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணருமான வைத்திய கலாநிதி சி. ராஜேந்திரா, சத்திர சிகிச்சையில் பேராசிரியராகவும், மருத்துவத்துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளரும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி என். சுகந்தன், மருத்துவப் பேராசிரியராகவும், மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளரும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் நிபுணருமான வைத்திய கலாநிதி கே. முகுந்தன், மகப் பேற்றி யல் மற்றும் பெண்நோயியல் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்படுவதற்குப் பேரவை ஒப்புதலளித்துள்ளது.

இவர்களுடன், கலைப் பீடத்தில் இருந்து, பீடாதிபதியும், புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி கே. சுதாகர், தமிழ்த் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (செல்வி) எஸ்.சிவசுப்ரமணியம், பொருளியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.விஜயகுமார் ஆகியோரை முறையே புவியியல், தமிழ், பொருளியல் துறைகளில் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்கும் பேரவை ஒப்புதலளித்துள்ளது





# இந்தவார ராசிபலன் 31.10.2021 – 06.11.2021

**ஒக்.31 ஞாயிற்றுக்கிழமை**
**பிலவ வருடம் - ஐப்பசி 14**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | ஏகாதசி |

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மனதை மகிழ்விக்கும் செய்தி வரும். பணிகளைச் சரிவர முடித்து திருப்தி கொள்வீர்கள். விருது, பாராட்டு கிடைப்பதற்கான தகவல் வரும். குடும்பத்தாரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். விருந்தினர் வருகையால் வீடு களை கட்டும். எதிர்பார்த்த பணம் வாரக் கடைசியில் கிடைக்கும். இதுவரை பட்ட துயரம் தீரும். பயணங்களால் நன்மை கிடைக்கும். வேலையில் திருப்தியற்ற சூழ்நிலைக்காக அவசரப்பட்டு வேலையை விட்டு விடாதீர்கள்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ]

உற்சாக மிகுதியால் யாருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். வியாபாரத்தில் புதுதொடர்பு ஏற்படும். தைரியமான முயற்சி ஒன்றை மேற்கொள்வீர்கள். வெளியூர், வெளிநாடு செல்வதில் இருந்த தடைகள் விலகும். அதிர்ஷ்ட யோகம் கூடிவரும். புதிய விஷயங்களைக் கற்பதில் ஆர்வம் அதிகரிக்கும். பிள்ளைகளால் நன்மை விளையும். உழைப்புக்கேற்ற பாராட்டு அதிகமாகவே கிடைக்கும். நீண்டகாலமாக எதிர்பார்த்த விஷயங்கள் திடீரென நடக்கும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

கலைத்துறையினருக்கு நீண்ட காலத்திற்குப் பின் நன்மை நடக்க ஆரம்பிக்கும். பணி சம்பந்தப்பட்ட விஷயங்களை சவால்களாகக் கருதுவீர்கள். மற்றவர்களுக்கு நிம மதியளிப்பீர்கள். செயல்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். உடல் நலத்தில் கவனம் தேவை. தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்கவும். ரத்த அழுத்தம், சர்க்கரை நோயாளி களுக்கு மருத்துவ உதவி தேவைப்படும். நீங்கள் யார் என்பது மற்றவர்களுக்கு தெரிய வரும். பேச்சில் சாமர்த்தியம் கூடும். பணப் புழக்கம் அதிகரிக்கும். கடன் கொடுத்த பணம் கைக்கு வந்து சேரும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பக்தி உணர்வு அதிகரிக்கும். பழைய நிலம் அல்லது வீட்டை விற்று, புதிய வீடு அல்லது மனை வாங்க சிலருக்கு வாய்ப்பு அமையும். மாணவர்களுக்கு இது உற்சாக வாரம். குடும்பத்தில் புதிய நபர் வந்து சேருவதற்கான வாய்ப்பு உள்ளது. தாயாரின் அன்பும் ஆசியும் கிடைக்கும். வேலையில் இடமாற்றம், ஊர் மாற்றம் அமையும். சிலருக்கு பணி உயர்வு, ஊதிய உயர்வு கிட்டும். வேலை இல்லாமல் இருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும். சிலருக்கு சம்பள உயர்வு கிடைக்கும். சக ஊழியர்களின் ஆதரவால் நன்மை சேரும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

வண்டி, வாகனங்கள், வீட்டு உபயோக பொருட்கள் போன்ற ஏதோ ஒன்று வாங்கு வீர்கள். நெடுநாள் திட்டம் நிறைவேறுவதற்கு உழைப்பீர்கள். நீங்கள் அறிந்தவற்றை மற்றவர்களுக்குக் கற்பிப்பீர்கள். விட்டு கொடுத்து இறங்கிப்போய் சில வேலைகளை முடிப்பீர்கள். விலகி நின்றவர்கள் தானாக உங்களைத் தேடி வரும்வரை காத்திருப்பது நல்லது. வழக்கு போடுவதைத் தவிர்க்கவும். நகை, ஆடை சேர்க்கை ஏற்படும். புதிய தொழில்கள் தொடங்க சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அமையும். கூட்டுதொழில் சாதகமாக இருந்து வரும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

முன்னோர்கள் சொத்து கிடைக்கக் கூடும் அல்லது அவற்றின் மூலம் எதிர்பாராத வரவு அமையும். உடன்பிறந்த சகோதரிகளால் நன்மை ஏற்படும். மற்றவர் மகிழும் விதத்தில் செயல்படுவீர்கள். எதிரி தொல்லை மறையும். பிரச்னைகள் வந்தாலும் எளிதில் தீர்வு காண்பீர்கள். காதல் கனிந்து திருமணத்தில் முடியும். சுபநிகழ்வுகள் நடக்க வாய்ப்பு கிடைக்கும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். பல வழிகளில் வருமானம் வரும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

உடலை வருத்திக்கொண்டு உழைக்க வேண்டி வரும். சகோதரிக்கு நன்மை செய்வீர்கள். சிலர் உங்களைக் கலந்தாலோசித்து முடிவெடுப்பர். திருமண முயற்சி கைகூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி வார ஆரம்பத்தில் குறைந்தாலும் பிறகு உற்சாகம் அதிகரிக்கும். நண்பர்கள் மூலம் கூடுதல் நன்மையை எதிர்பார்க்கலாம். நல்லெண் ணம் கொண்டவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். கலகலப்பான செய்தி வந்து சேரும். பிள்ளைகளின் செயல்பாடு மகிழ்ச்சி அளிக்கும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

அரசியல் ஈடுபாடு அவசியமா என்று யோசித்து செயல்படுங்கள். நன்றி மறந்த உறவி னரை நினைத்து வருந்த வேண்டாம். நியாயவழியில் நடப்பீர்கள். பதவியில் இருப்ப வர்களின் நட்பு கிடைக்கும். பணியாளர்கள் அதிகாரிகளுக்கு வளைந்து கொடுத்து நன்மையடைவர். உறவினர்களால் இடர்பாடுகள் ஏற்பட்டாலும் பாதிக்காது. நேர்மறை எண்ணம் நிலவும். தைரியம், தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். அலுவலகத்தில் நிலவிய குழப்பம் தீரும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

கற்பனை பயம் காரணமாக மனச்சோர்வு ஏற்படலாம். எதிர்ப்பைக் கண்டு பயப்படா தீர்கள். புகழ் அந்தஸ்து அதிகரிக்கச் சிறிது காலம் ஆகும். சொத்து சேர்க்கை பற்றி இப் போதைக்கு அவசரப்பட வேண்டாம். நீங்கள் அறிந்த விஷயங்களை மற்றவர்களுக்குப் பொறுமையாகச் சொல்லிக் கொடுப்பீர்கள். கெட்ட வழி நோக்கி வழிநடத்தும் நண்பர்கள் சகவாசம் வேண்டாம். புது விஷயங்கள் கற்பதில் ஆர்வம் ஏற்படும். யாருக்கும் தேவையின்றி கடன் கொடுக்க வேண்டாம். தொட்டதெல்லாம் வெற்றியை நோக்கி அழைத்துச செல்லும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

குடும்பத்தினர் உங்களால் மகிழ்வர். வேலைப்பளு முன்பை விடக் கூடுதலாகும். எதிர்பார்த்த அளவு பாராட்டு கிடைக்கவில்லையே என ஏக்கம் வேண்டாம். விரைவில் அது தீரும். சிலருக்கு விருதுகள் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த தொகை வருவதில் சற்றுத் தாமதம் இருக்கும். பொறுமை ஒன்றுதான் உங்களின் இப்போதைய தேவை. வீடு, இடம் வாங்க மற்றும் விற்க எடுத்த முயற்சி வெற்றி பெறும். காதலில் ஈடுபட்டவருக்கு மகிழ்ச்சி அதிகரிக்கும் வாரம் இது. பேச்சினால் வம்பில் மாட்டிக்கொள்ளாமல் கவனமாக இருங்கள்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

வாக்கு வன்மையால் நன்மை கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் போக்கு மனத் திருப்தியை தரும். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். அவர்களிடம் மிகுந்த கவனமுடன் பழக வேண்டும். மற்றவர்கள் பிரச்னைகளைத் தீர்க்கும் நல்ல எண்ணத் துடன் நீங்கள் செய்யும் சில செயல்கள் அவர்களுக்கோ அல்லது உங்களுக்கோ வருத்தத்தில் முடியக்கூடும். பேச்சிலும் செயலிலும் கவனம் தேவை. மற்றவர்கள் வேலையை இழுத்துப்போட்டுக்கொண்டு செய்வீர்கள். அதற்கு நன்றியை எதிர்பார்க்க வேண்டாம்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

நீண்ட நாள் விருப்பம் நிறைவேறும். பங்குச் சந்தையில் பெரிய முதலீடு செய்வதை தவிர்க்கவும். பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். நிறையச் செலவு வந்தாலும் செலவால் வருத்தம் வராது. சகோதரர்களுக்கு வெளிநாட்டு வாய்ப்பு வரும். திடீர் வருமானம் வரலாம். மற்றவர்கள் மனம் புண்படப் பேசாதீர்கள். நீங்கள் உண்டு.. உங்கள் வேலை உண்டு என்று இருப்பது நல்லது. வாரக்கடைசியில் எந்த விதமான முயற்சியும் எடுக்க வேண்டாம். உங்கள் செயல் மற்றவர்களுக்கு நன்மையை ஏற்படுத்தும்.

# பகிர்வு - 1

**கணபதி சர்வானந்தா**

பகிர்வதில் சுக முண்டு. மகிழ்ச்சியைப் பகிர்வதன் மூலம் அதனை இரட்டிப்பாக்கிக் கொள்ளுகிறாம். அது போன்று துயரத்தைப் பகிர்வதன் மூலம் மனச் சுமையை மட்டுமல்ல அது வழி ஏற்படும் மனவலியையும் குறைத்துக் கொள்ளுகிறோம். அதனால் இவ்வாரம் தொட்டு பகிர்வு என்ற இப் பத்தி மூலம் உங்களைச் சந்திக்கலாம் என்றிருக்கிறேன். இதிலே பல விடயங்களை அதுவும் மன மகிழ்வைத் தரக் கூடியவைகளாக எனக்குத் தோன்றுவதை அதிகம் பகிர்ந்தாலும் வாழ்கையில் முன்னெச்சரிக்கையாக இருக்க எது உதவுமோ, அவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம் என்பது எனது எண்ணம்.

இதுவரை நாம் அனுபவிக்காததொன்றுமில்லை. ஒரு நீண்டகால யுத்த அனர்த்தத்தை கண்டவர்கள் மட்டுமல்ல கூடவே அனுபவித்த வர்கள். சினிமாவில் பார்ப்பதைப் போல மரணத்தையும் அது தரும் வலிகளையும் உணர்ந்து அறிந்தவர்கள் என்ற வகையில் பிறரின் மன வலிகள் பற்றி கேட்டும் தோறும் எம் உள்ளே ஒரு திரைப்படம் ஓடி மறைவது இயல்பு.

அண்மையில் தென்னிந்தியாவிலுள்ள கேரள மாநிலத்திலே ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பாக ஒரு பகிர்வு. இதுதான் வாழ்க்கை ! கேரள வெள்ளம் உணர்த்தும் பாடம் ! என்ற ஒரு பதிவி னூடாக எனது பத்தி ஆரம்பிக்கிறது. எனது நட்பு வட்டத்திலே கண்ட பதிவை உங்களோடு பகிர்வதன் நோக்கம் உங்களைப் பலவீனப்படுத்துவதாக இருக்காது. மாறாக உங்களை வலுப்படுத்தும் என நம்புகிறேன்.

“இந்தப் பகுதி இன்னும் அரைமணி நேரத்தில் மூழ்கிவிடும். முக்கியமானதை மட்டும் எடுத்துக்கொண்டு வெளியேறுங்கள்” இந்த அறிவிப்பைக் கேட்டபோது அவர்கள் முழங்கால் அளவு வெள்ளத்தில் நின்றுகொண்டிருந்தார்கள்.

இப்போது அவர்கள் பிரச்சினை எதையெல்லாம் எடுத்துக் கொள்வது என்பதல்ல, எதையெல்லாம் கைவிடுவது என்பதுதான். முதலில் கைகளில் எதையெல்லாம் தூக்கிக்கொள்ள முடியாதோ அதையெல்லாம் கைவிட்டார்கள். பிறகும் கைவிடுவதற்கு ஏராளமாக இருந்தன.

பரிசுப்பொருள்கள், தெய்வப்படங்கள், புகைப்பட ஆல்பங்கள், ஆடைகள், புத்தகங்கள் இசைக்கருவிகள், இசைப்பேழைகள், பரிசுப் பொருட்கள், கண்ணாடிக் கோப்பைகள் குழந்தைகளுக்குப் பிடித்த விளையாட்டுப் பொம்மைகள் என ஏராளம். கூடவே கண்ணீரின் உப்புப் படிந்த தலையணைகள், உடல் வாசனையுள்ள போர்வைகள், அழகு சாதனப்பொருள்கள் என கைவிடுவதற்கு முடிவேயில்லாமல் ஏராளமாக இருந்தன.

இது போன்ற தருணத்தில் , ஒன்றை இழக்க முயற்சிக்கும்போது, ஒன்றை கைவிட எண்ணும்போது முதலில் உங்கள் மனதை ஒரு பனிக்கட்டியைப்போல உறையச் செய்ய வேண்டும். எவ்வளவு கருணையற்றவராக மாறமுடியுமோ அவ்வளவு கருணயற்றவராக மாறவேண்டும். ஒரு தூக்கிலிடுபவனைப்போல உங்கள் கண்கள் மரத்துப் போக வேண்டும்.

ஒரு பொலித்தீன் பை அளவுக்கு மட்டுமே எதையும் எடுத்துக்கொள்ள அவர்களுக்கு அவகாசம் இருந்தது. அனுமதி இருந்தது. “எதனை எடுப்பது” என ஒரு பிரம்மாண்டமான விற்பனையகத்தின் முன்னால் நின்று சிந்திப்பதைப்போல- மனதில் ஒரு போராட்டம். அவர்கள் வாழ்வில் ஒரு போதும் அப்படித் திகைத்து நின்றதில்லை. எல்லாம் அவசியமானது. ஒன்றோடு என்று தொடர்புபட்டது. எதனைத் தெரிந்தெடுப்பது? எதனை விட்டுவிடுவது? அக் கணத்தில் தேர்வு என்பது அத்தனை கடினமான தாக இருந்தது. அத்தனை உணர்ச்சிகரமானதாக இருந்தது. எதுவுமே அவ்வளவு முக்கியமல்ல என்று தோன்றிய கணத்தில் அவர்கள் தோள் வரை வெள்ளம் வந்துவிட்டது தெரிந்தது.

கடவுச்சீட்டுகளை எடுத்துக்கொண்டார்கள்.வங்கிக் கணக்குப் புத்தகங்களை எடுத்துக் கொண்டார்கள்.சான்றிதழ்களை எடுத்துக் கொண்டார்கள். ஆயுள் காப்பீட்டுப் பத்திரங்களை எடுத்துக் கொண்டார்கள். ரேஷன் கார்டுகளை, வாக்காளர் அட்டைகளை, ஆதார் அட்டைகளை, கைவிட்ட வாகனங்களின் ஓட்டுனர் உரிமங்களை, கடன் பத்திரங்களை இன்னும் என்னென்னவோ!

முத்திரையிடப்பட்ட காகிதங்களை, ஆவணங்களைத் தவிர நம் வாழ்வை மீண்டும் நீடிக்கச் செய்வதற்கு வேறு எதுவுமே முக்கியமல்ல என்பது அவர்களை ஒரு கணம் அதிர்ச்சியடைய வைத்தது.

பிறகு வீடுகளை அப்படியே திறந்து விட்டபடி தலை நனைந்து போகாது பார்த்துக் கொள்ள ஒரு பொலீத்தின் பையைத் தலைக்கு மேலாகப் பிடித்துக் கொண்டவாறு மேட்டு நிலம் நோக்கி நடந்தார்கள். வெள்ளத்தில் எவ்வளவு வேகமாக நடக்க முடியுமோ, அத்தனை வேகமாக விரைந்து சென்றார்கள்...

இதுதான் வாழ்க்கை! இவ்வுலகில் நாம் அனைவரும் அனைத்தை யும் விட்டுத்தான் செல்ல போகிறோம்? எதை இங்கிருந்து எடுத்துச் செல்ல போகிறோம்? இருக்கும்வரை எவருக்கும் தீங்கிழைக்காமல் வாழ்வதே மேல் - என்றவாறு ஒரு வெள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்ட துயரின் பகிர்வைக் கண்டேன்.

இனக்கலவரங்களின்போதும், இடம்பெயர்வின்போதும் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் என்றும் மறக்க முடியாதவை. இன்றும் என்னால் இயல்புக்குத் திரும்ப முடிவதில்லை. அதனால்தான் கேரளத்தில் ஏற்பட்ட அந்த வெள்ள வலியையும் என்னால் உணர முடிகிறது. ஆப்கான் மக்கள் படும் அவலங்களும் எனக்கு வேதனையளிக்கிறது. பாலஸ்தீனத்தின் கோரிக்கையையும் நியாயமாகப்படுகிறது.

ஈழநாடு
Eelanadu
31.10.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 14

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளாவிட்டால்?

தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து கட்சிகளும் ஒரு புள்ளியில் இணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். இந்த அடிப்படையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ வின் முயற்சி குறிப்பிடத்தகு வெற்றியை கொடுத்திருக்கின்றது. தமிழர் பிரச்னையில் தீர்மானகரமான சக்தியான இந்தியா, தொடர்ந்தும் 13ஆவது திருத்தச்சட்டத்தை வலியுறுத்திவருகின்ற நிலையில், அது தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டியது அவசியமானது. இந்த அடிப்படையில் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கையை அனைத்து தரப்புக்களும் ஒன்றி ணைந்து முன்வைப்பதன் மூலம்தான், புதுடில்லியுடன் தமிழர் தரப்பு ஒரு ஊடாட்டத்தை மேற்கொள்ள முடியும்.

புதுடில்லியின் கொள்கை நிலைப்பாட்டை ஒரேயடியாக புறம்தள்ளி, தமிழர் தரப்பால் ஒருபோதுமே செயல்பட முடியாது. இந்த நிலைமைகளை சரியாக விளங்கிக் கொண்டதன் அடிப்படையில்தான் இந்த விடயத்தில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் (டி.பி.எல்.எப்) மற்றும் விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளான தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ் தேசிய கட்சி ஆகியவை ஓர் ஆரம்ப இணக் கப்பாட்டிற்கு வந்திருக்கின்றன. இந்தக் கலந்துரையாடல்களில் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மனோ கணேசன் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் போன்றவர்களும் விரைவில் இணைந்து கொள்ளக் கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் வெண்ணை திரண்டு வருகின்ற போது தாழியை உடைத்த கதையாக, ஆரம்பத்தில் இந்த முயற்சியுடன் இணைந்திருந்த இலங்கை தமிழரசு கட்சி, தற்போது இதிலிருந்து விலகிச் செல்வதாக தெரிகின்றது. 13ஆவது திருத்தச்சட்டத்தை இப்போது ஏற்றுக் கொண்டால், பின்னர் அதனை தாண்டி செல்ல முடியாதென்னும் ஒரு வாதம் தமிழரசு கட்சியினரால் கூறப்பட்டதாகவும் எம்மால் அறிய முடிகின்றது. இது அடிப்படையிலேயே தவறானதோர் அரசியல் புரிதல். எந்தவொரு கட்சியும் 13ஆவது திருத்தச்சட்டத்தை முற்றிலும் இறுதி யான அரசியல் தீர்வாக முன்வைக்கவில்லை. 13ஆவது திருத்தத்தை, ஓர் இடைக்கால ஏற்பாடாகவே முன்வைக்கின்றன. அது முற்றிலும் சரியானதொரு முடிவு. ஆனால் தமிழரசு கட்சியின் பின்வாங்கலுக்கு இதுதான் உண்மையான காரணம் என்றால், பதில் மிகவும் இலகுவானது. அதாவது சம்பந்தன் தலை மையிலான அணியினர் இன்னும் தங்களது தவறுகளிலிருந்து எதையும் கற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்கு கற்றுக்கொள்ளும் எண்ணமும் இல்லை. அதேவேளை மக்களின் நலன் தொடர்பிலும் எவ்வித கரிசனையும் இல்லை.

புதிய அரசியல் யாப்பு ஒன்று வருமென்று கூறியே, கடந்த ஆட்சிக் காலத்தில் ஐந்து வருடங்களை சம்பந்தன் தரப்பு வீணாக்கியது. உண்மையில் அன்றைய சூழலில் கிடைத்த வாய்ப்புக்களை பயன்படுத்தி, 13ஆவது திருத் தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் கணிசமான வெற்றியை பெற்றிருக்கலாம். இந்த நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் புதிய அரசியல் யாப்பின் மூலம் தீர்வு வருமென்று நம்புவது புத்திசாலித்தனமான ஒன்றாக இருக்க முடியுமா? தமிழ் மக்களின் ஆதரவுடன் ஆட்சியமைத்தவர்களாலேயே முடியாமல் போனதொரு விடயம், முற்றிலும் சிங்கள மக்களின் ஆதரவுடன் ஆட்சியமைத்திருக்கின்ற, அதிலும் தன்னை யொரு சிங்கள பௌத்த தலைவராக பிரகடனம் செய்திருக்கின்ற கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், தமிழ் மக்களுக்கு சமஷ்டி தீர்வை வழங்குமா? தமிழர் தரப்பு இதனை நம்பி மீளவும் காலத்தை விரயம் செய்யலாமா?

உண்மையில் இந்த பின்னணியில் ஒரு புதிய அரசியல் யாப்பு வருமாக இருந்தால் - அது நிச்சயம் தற்போது இருப்பதை விடவும் பாரதூரமான சிக்கல்கள் நிறைந்ததாகவே இருக்கும். இந்த நிலையில் புதுடில்லி வலியுறுத்திவரும் 13ஆவது திருத்தச்சட்ட விடயத்தில், அனைத்து கட்சிகளும் ஓரணியில் நிற்பதன் மூலம் மட்டும்தான் இன்றைய சவாலை எதிர்கொள்ள முடியும். 13ஆவதை தாண்டிச் செல்லப் போகின்றோம் என்று கூறுவது முற்றிலும் அறியாமையின் விளைவு. தமிழரசு கட்சியில் இருக்கும் பலர் - குறிப்பாக மாவை சேனாதிசாரா, சீ.வீ.கே.சிவஞானம் போன்றவர்கள் நீண்ட அரசியல் அனுபவங்களை கொண்டிருப்பவர்கள். அப்படியிருந்தும் கூட, இன்றைய இக்கட்டான நிலைமைகளை விளங்கிக்கொண்டு செயல்பட முன்வராமல் இருப்பது பாரதூரமான தவறாகும்.

# நல்லாட்சித் தத்துவத்தை வெளிப்படுத்தும் தீபாவளி

**த. மனோகரன்**



மனிதப் பண்புகளைக் கட்டியெழுப்பி நேரிய வழியில் வாழ்க்கையை அமைத்து உயர்நிலையை அடைவதற்கு மனிதனைப் பக்கு வப்படுத்துவதே சமய நெறிகள். இந்த வகையிலே இந்து சமயம் பல்வேறு நெறி முறை களை முன்வைத்துள்ளது. அவை விரதங் களென்றும், பண்டிகை களென்றும் வகைப் படுத்தப்பட் டுள்ளன. இவற்றின் தத்துவங்கள் மனிதனின் சிந்தனையைத் தூண்டி தூய வழியில் செல்ல வழிகாட்டி நிற்கின்றன.

சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, விநாயகர் சதுர்த்தி போன்றவை விரதங்களில் அடங்கு கின்றன. விரதங்கள் மனதைப் பக்கு வப்படுத்தி நேரிய வழியில் வாழ்ந்து நாம் பெற்ற பிறவிப் பயனை அடைவதற்கான வழி யென்பது நமது நம்பிக்கையாகும்.


பண்டிகைகள் என்பவை விரதங் களிலிருந்து மாறுபட்ட வழிமுறைகளைக் கொண்டவை. விரதங்கள் தனிமனிதனைச் சார்ந்த வழிபாட்டு முறைகளை உள்ளடக்கிய வையாயுள்ள போது பண்டிகைகள் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டவையாக விளங்கு கின்றன. அந்த வகையிலே தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு, தீபாவளி, கார்த்திகை தீபம் போன்றவை பண்டிகைகள் சார்ந்தவையாயுள்ளன. தனி மனித சிந்தனையை ஒழுங்குபடுத்தி வளப் படுத்துவது விரதங் களின் தனிச்சிறப்பு. பண்டி கைகள் சமுதாய நலனை நோக்காகக் கொண்டவையாயுள் ளன. சமூக நலன், உறவு போன்றவற்றை மேம் படுத்துவதுடன் பண்டு தொட்டு வரும் பண் பாடுகள், கலை கலா சாரங்களைக் கட்டிக் காத்துப் பேணி வளர்க் கவும், மேம் படுத்தவும் சமூகத்திற்கு வழிகாட்டி புரிந்து ணர்வு ஏற்படுத்தவும் பண்டிகைகள் வழிசெய் கின்றன.

> **இந்துக்களின் சமய முக்கியத்துவம் கொண்ட அனைத்துத் தினங்களும் மனித குலத்திற்கு அறிவூட்டி, வழிகாட்டி பக்குவப்படுத்தும் சிறப்புமிகு நன்னாட்களாகும். தீபாவளித் திருநாள் பற்றிய பல கதைகளுள்ளன.**

தைப்பொங்கல் உழவின் சிறப்பை வெளிப் படுத்துவதை முக்கிய நோக்காகக் கொண்டுள் ளது. சித்திரை வருடப் பிறப்பு உலக இயக் கத்தை, காலக்கணிப்பீட்டை அடிப்படை யாகக் கொண்டது. அதேபோல் ஆண்டு தோறும் ஐப்பசி மாத அமாவாசை தினத்தில் கொண்டாடப்படும் தீபாவளிப் பண்டிகை நல்லாட்சித் தத்துவத்தை உலகிற்கு வெளிப் படுத்தும் தினமாக விளங்குகின்றது. தனி மனித ஒழுக்க விழுமியங்களைக் கட்டி யெழுப்புபவை விரதங்களாக அமையும் போது பண்டிகைகள் சமூக ஒழுக்க நெறிகளை கட்டிக் காக்க வழிகாட்டுபவையாகவுள்ளது, தீபாவளிப் பண்டிகையானது ஆட்சியாளரின் ஆளுமை எவ்வாறமைய வேண்டுமென்பதை வெளிப்படுத்துகின்றது எனலாம். தான் என்ற அகங்காரம் தலைக்கேறி, தறிகெட்டு நெறி யற்ற ஆட்சி செய்ய முற்பட்ட நரகாசுரன் என்ற அரசனை, அசுரனாக்கி அவனது அழிவை எடுத்துக்கூறி நல்லாட்சித் தத்துவத்தை வெளிப்படுத்துகின்றது தீபாவளி. தவறான முறையில் நெறிகெட்ட ஆட்சியை செய்து தான் கட்டிக்காத்து பாதுகாக்க வேண்டிய நாட்டு மக்களின் நிம்மதியான வாழ்வை எந்தவொரு ஆட்சியாளன் சீரழிக்கின்றானோ அவனை இறைசக்தி வெளிப்பட்டு அழித்து விடும் என்ற தத்துவத்தை, உண்மையை இத்தீபாவளித் திருநாள் மனித குலத்திற்கு உணர்த்துகின்றது.

நரகாசுரன் என்ற ஆட்சியாளன் தன் கீழுள்ள மக்களுக்குத் துன்பமிழைத்த போது அதைத் தடுத்து நிறுத்த இறைசக்தி வெளிப் பட்டது அன்று. அதுவே தீபாவளியாகின் றது. இந்துக்களின் சமய முக்கியத்தவம் கொண்ட அனைத்துத் தினங்களும் மனித குலத்திற்கு அறிவூட்டி, வழிகாட்டி பக்குவப் படுத்தும் சிறப்புமிகு நன்னாட்களாகும். தீபாவளித் திருநாள் பற்றிய பல கதைகளுள் ளன. ஆனால், அதில் பொதிந்துள்ள தத்துவம் நல்லாட்சி நடைபெற வேண்டும் என்பதே தவிர தீய ஆட்சி நடைபெற்றால் இறை சக்தியால் அவ்வாட்சி அழிக்கப்படும் என்பது உறுதியென்பதாகும். உலகில் நல்லாட்சி நிலைபெற இந்நாளில் பிரார்த்திப்போம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# மக்களுக்கு நன்மை பயக்கும் வரவு - செலவு திட்டம் தயார்

## நீதி அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, ஒக். 31

**"நாட்டுக்கும், மக்களுக்கும் நன்மை பயக்ககூடிய வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படும்." - என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.**

2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் அதற்கு முன்னர் மகாநாயக்க தேரர்களிடம் ஆசி பெறுவதற்காக நிதி அமைச்சர் நேற்று கண்டிக்கு சென்றார்.

தலதாமாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்றார்.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே பஸில் இவ்வாறு கூறினார். (அ)

# கொரோனா தடுப்பூசி பெற்றுக்கொண்ட சிறுவர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை

## சுகாதார அமைச்சு அறிவிப்பு



கொழும்பு, ஒக். 31

இலங்கையில் கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட சிறுவர்களுக்கு, இதுவரை எந்தவித கடுமையான பாதிப்புக்களும் இல்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை, 15 முதல் 18 வயதுக்குட்பட்ட 3லட்சத்து 40ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ரஞ்சித் படுவன்துடாவ தெரிவித்தார்.

இதேவேளை, 12 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட, நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட சுமார் 20 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்கள் கொரோனா தடுப்பூசியைப் பெற்றிருக்கின்றார்கள் என்றும் அவர் மேலும் கூறினார்.(அ)

# யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் குருதி தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் எல்லா வகை குருதிகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக இரத்த வங்கி அறிவித்துள்ளது.

எனவே குருதி கொடையாளர்கள் 0772105375 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்பு கொண்டு இரத்ததானம் செய்ய முன்வருமாறு இரத்த வங்கி கோரியுள்ளது .

இது தொடர்பில் இரத்த வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கையில்-

ஏற்கனவே இரத்ததானம் செய்து நான்கு மாதங்கள் பூர்த்தியானவர் மற்றும் புதிதாக இரத்ததானம் செய்யக் கூடியவர்கள் உங்களுக்கு அருகிலுள்ள இரத்த வங்கிக்குச் சென்று இரத்ததானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கோவிட்- 19 தடுப்பூசி போட்டிருந்தால், போட்ட தினத்திலிருந்து ஒரு கிழமையின் பின்பு இரத்ததானம் செய்யலாம்.

கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தால் அது சுகமடைந்து தொற்று இல்லையென உறுதிப்படுத்திய தினத்திலிருந்து ஒரு மாதத்தின் பின்பு நீங்கள் இரத்ததானம் செய்யலாம்.

சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இரத்ததான முகாம்களையும் நடத்தலாம்-என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-3)





# யாழ்ப்பாண பொலிஸாரினால் பண்ணையில் சிரமதானப் பணி

யாழ்ப்பாணம், ஒக். 31

பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டுதலில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் நெறிப்படுத்தலில் யாழ்ப்பாண பொலிஸாரினால் பண்ணை கடற்கரைப் பகுதியில் சிரமதானப்பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரான்சிஸ் தலைமையிலான யாழ்ப்பாண பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் ஏனைய தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் நேற்று பண்ணை கடற்கரை பகுதி மற்றும் யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான வீதியின் இரு மருங்கிலும் சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டதோடு வீதிகளில் காணப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டு யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினரின் உதவியுடன் அகற்றப்பட்டன.

இந்த வேலைத்திட்டம் தொடர்பில் கருத்துரைத்த யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் பிரான்சிஸ், பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைய யாழ். மாவட்டம் முழுவதிலும் சிரமதானப் பணி பொதுமக்களுடன் இணைந்து பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றது. அதன் ஓர் அங்கமாக யாழ்ப்பாண பொலிஸாரினால் நேற்று பண்ணை கடற்கரைப்பகுதி மற்றும் யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான வீதியின் இரு பகுதியிலும் காணப்படும் கழிவுகளை அகற்றும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தின் போது பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் வீதிகளில் வீசப்பட்டுள்ள கழிவுப் பொருட்கள் அனைத்தும் அகற்றப்பட்டு தூய்மையாக்கப்பட்டது.

தூய்மையாக்கப்பட்ட பகுதியை தொடர்ந்தும் தூய்மையாகப் பேணுவதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்றார். (அ-03)

# ஓ.எல்., ஏ.எல். மாணவர்களுக்கு நவ.8 முதல் கல்விச் செயற்பாடு

கொழும்பு, ஒக். 31

இலங்கையிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் தரம் 10, 11, 12 மற்றும் 13 ஆம் வகுப்புகளுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

முன்னதாக, நவம்பர் 16 முதல் க.பொ.த சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களுக்கு 50 சதவீத மாணவர் கொள்ளளவுடன் பிரத்தியேக வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியது.

இந்நிலையில் தரம் 10 முதல் 13 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ)

# சீனி தட்டுப்பாட்டுக்கு தீர்வு

கொழும்பு, ஒக். 31

துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 80 சீனி கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதன் காரணமாக, எதிர்வரும் நாட்களில் ஒரு கிலோ சீனியை 122 ரூபாவுக்கு பொது மக்களுக்கு வழங்கமுடியுமென லங்கா சதொச தலைவர் ரியல் அட்மிரல் ஆனந்த பீரிஸ் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஒரு கிலோ சீனி 145 ரூபா தொடக்கம் 160 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாக சுட்டிக்காட்டிய அவர், விரைவில் சதொச ஊடாக பொதுமக்கள் தட்டுப்பாடின்றி சீனியை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் குறிப்பிட்டார். (அ)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியிலும் நேற்று போராட்டம்



கிளிநொச்சி, ஒக். 31

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று கிளிநொச்சியிலும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க அலுவலகம் முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இறுதி யுத்தத்தின்போது காணாமல் போனவர்கள், கடத்தப்பட்டவர்கள், இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி 1711ஆவது நாளாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மாதம் தோறும் 30ஆம் திகதி வீதியில் கவனவீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு, ஒக். 31

ராஜகிரிய, பொல்வத்த பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸ் பரிசோதகர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் ஒருதொகை கேரளக் கஞ்சாவுடன் 42 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வழங்கிய வாக்குமூலத்துக்கு அமைய, அவரின் கைத்தொலைபேசியில் பதிவான அழைப்புகளை ஆராய்ந்தபோது, குறித்த போதைப்பொருள், வெலிக்கடை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருடையது என கண்டறியப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் சீருடை அணிந்திருந்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் இருந்து சுமார் 10 கிராம் ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.(அ)




# ‘இல்லம் தேடி கல்வி’ முதல்வர் ஸ்டாலினின் சாதனைத் திட்டம்!



- பகவான் சிங் -
தமிழகத்தின் சிரேஷ்ட பத்திரிகையாளர்

ஒக்ரோபர் 27ஆம் திகதியன்று முதல்வர் மு. க. ஸ்டாலின் ஒரு சமூக புரட்சியைத் தமிழகத்தில் தொடங்கி வைத்தார். சென்னையில் இருந்து 90 கிலோமீட்டர் தொலைவில் கடலூரைச் சேர்ந்த முதலியார்குப்பத்தில் புதன்கிழமை நடந்த விழா, ‘இல்லம் தேடிக் கல்வித் திட்டம்’ என்று பொருத்தமாகப் பெயரிடப்பட்டிருந்தது. மோசமான கோவிட்-19 கொள்ளைநோயால் 19 மாதங்கள் பள்ளிகள் மூடப்பட்டிருந்த நிலையில், அந்தக் காலத்தில் ஏற்பட்ட கல்வி இழப்பை ஈடுசெய்யும் வகையில் பள்ளி வேலை நேரங்களுக்குப் பிறகு நடத்தப்படும் இலவச வகுப்புகளுக்கான திட்டம் இது.

“கல்வியின் மிக்கதாம் செல்வமொன்று இல்லையே
கண்மணி கேளடா நீ என்றன் சொல்லை!
செல்வம் பிறக்கும் நாம் தந்திடில் தீர்ந்திடும்! கல்வி
தருந்தொறும் மிகச் சேர்ந்திடும்!”

என்று பாடினார் பாவேந்தர் பாரதிதாசன். அவரது பாடலுக்கேற்ற செயலை இன்றைய நாள் இந்தப் பள்ளிக்கல்வித் துறை செய்துள்ளது” என்று கூறி, இந்தத் திட்டத்தை முதல்வர் தொடங்கி வைத்தார். அதோடு, அவர் பாரதியாரின் பொன்மொழிகளையும் நினைவுபடுத்தினார். “கல்வி என்பதுதான் மிகப்பெரிய பரிசு. கொடுக்கக் கொடுக்க கல்வி சேரும், பயன்படுத்தும் போது குறையாத முதலீடு அது” என்றார் மகாகவி.

இந்தத் திட்டத்தின் தனித்துவத்தைப் பற்றியும் தேவையைப் பற்றியும் விரிவாக விளக்கிய முதல்வர் ஸ்டாலின், உலகையே தலைகீழாக மாற்றி எல்லோரையும் பாதித்த கோவிட் 19 கொள்ளைநோயால் குழந்தைகளே மிக அதிகமாக பாதிக்கப்பட்டிப்பதாகத் தெரிவித்தார். கற்றல் மட்டுமல்லாமல், பள்ளி வளாகங்களில் ஏற்படும் நட்புறவுகள், பிணைப்புகள், விளையாட்டு உள்ளிட்ட போட்டிகளையும் குழந்தைகள் இழந்திருப்பதால், இளமைக் காலத்தில் இவ்வாறு நடந்தால் ஒருவரின் தனிப்பட்ட குணநலன்களின் மேம்பாட்டை பாதிக்கும் என்றும் கூறினார். “பள்ளிக்கு வந்து கல்வி கற்றுவந்த அவர்களை வீட்டுக்குள் முடக்கிவிட்டது கொரோனா என்ற பெருந்தொற்றுக் காலம். பள்ளிக்கூடம் என்ற பரந்த வெளியைப் பயன்படுத்த முடியாமல் வீட்டுக்குள் இருந்ததே குழந்தைகளின் மனதைப் பாதித்துவிட்டது. அது அவர்களது படிப்பை - படிக்கும் முறையை - படிப்பில் இருக்கக்கூடிய ஆர்வத்தைக் குறைத்துவிட்டது என்றே சொல்லலாம்” என்று கூறிய அவர், “இந்தப் பாதிப்பை எப்படி சரிசெய்வது என்று பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் சிந்தித்தார்கள். பள்ளிக்கு வந்து படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மேலும் கூடுதல் நேரத்தை பள்ளி நேரம் போலவே படிப்பில் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதுதான் இந்த ‘இல்லம் தேடிக் கல்வி திட்டம்” என்று தெரிவித்தார்.

பதிவு செய்துள்ள தன்னார்வலர்கள், பள்ளி ஆசிரியர்கள், கல்வி நிர்வாகிகள், பெற்றோர்கள் ஆகியோரின் சேவைகளை அடிப்படையாக்கொண்டு இந்தத் திட்டம் செயல்படும். முதற்கட்டமாக விழுப்புரம், கடலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மதுரை, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி ஆகிய 12 மாவட்டங்களில் இரு வார காலத்திற்கு முன்னோட்ட அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு, அதன் வாயிலாகக் கிடைக்கப்பெறும் சிறந்த கற்றல் விளைவுகளை அடிப்படையாகக்கொண்டு, நவம்பர் 15ஆம் தேதிக்குப் பின்னர் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் படிப்படியாகவும் தொடர் பணியாகவும் நடைபெறும்.

பதிவு செய்துள்ள தன்னார்வலர்கள் கிராம அளவில் பள்ளி மேலாண்மைக் குழு மூலமாகத் தேர்வு செய்யப்படுவர். தன்னார்வலர்களுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கியபின் இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தில் இணைக்கப்படுவர். இதுவரை 67 ஆயிரத்து 961 பெண்களும், 18 ஆயிரத்து 557 ஆண்களும், 32 திருநங்கையரும் என மொத்தம் 86 ஆயிரத்து 550 நபர்கள் இத்திட்டத்தில் சேவையாற்ற பதிவு செய்துள்ளனர். ‘ப்ளஸ் டூ’ படிப்பை முடித்தவர்கள் (ஏ லெவல்) ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கும், பட்டப்படிப்பு முடித்தவர்கள் பன்னிரெண்டாம் வகுப்புவரை உள்ள மேல்நிலை மாணவர்களுக்கும் கற்பிப்பார்கள். ஆர்வமும் ஊக்கமும் இருந்தால் ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் இதில் பங்குபெறலாம் என்ற நோக்கத்தோடு இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

கொரோனா பேரிடர் காலத்தில் ஆன்லைனில் கல்வி கற்க முடியாத ஏழை மாணவர்களுக்குப் பலன் அளிக்கும் இப்படியொரு திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்துக்காக ரூ.200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமல்ல; இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வோர் இல்லத்திற்கும் நேரடியாகச் சென்று பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகள் அனைவரும் தொடர்ந்து பள்ளிக்கு வருவது உறுதி செய்யப்படும். மேலும், வருகிற கல்வியாண்டில் குறைந்தபட்சம் ஓர் இலட்சம் மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்படவேண்டும் என்பதையும் இலக்காகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

“உங்கள் வீட்டுக்கு அருகிலேயே இதற்காக தனியாக இடங்கள் தேர்வு செய்யப்படும். நாள்தோறும், ஒவ்வொரு நாளும் மாலையில் ஒரு மணி நேரமோ - இரண்டு மணி நேரமோ வசதிக்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப ஆசிரியர்கள் வந்து உங்களை படிக்க வைப்பார்கள். தலைமை ஆசிரியர்களின் மேற்பார்வையில் - தன்னார்வலர்களின் ஒத்துழைப்போடு இந்தத் திட்டம் தொடங்கப்போகிறது. பள்ளியோடு எங்கள் கடமை முடிந்துவிட்டது என்று கருதாமல், வீட்டுக்கும் வந்து உங்களுக்குக் கற்றுத் தரக்கூடிய கடமையின் தொடர்ச்சிதான் இந்த திட்டமாகும்” என்றார் ஸ்டாலின்.



“எப்போதுமே ஏதாவது ஒரு நெருக்கடி ஏற்பட்டால் தான் புதிய பாதை அதன் மூலமாகத் திறக்கும். அப்படி, கொரோனா என்ற நெருக்கடியில் உதயமானதுதான் இந்த ‘இல்லம் தேடிக் கல்வி’ என்ற திட்டமாகும்”என்று ஸ்டாலின் எடுத்துக் கூறினார்.

இதுபோன்ற ஒரு திட்டம் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் அறிமுகப்படுத்தப்படவில்லை என்பதையும் அவர் பெருமிதத்தோடு கூறினார். “பள்ளிகள் பல மாதங்களாக மூடப்பட்டிருந்த நிலையில் ஏற்பட்டுள்ள கற்றல் பாதிப்பினைக் குறைக்கவும், சரிசெய்யவும், வேறு எந்த மாநிலமும், எந்தவொரு திட்டத்தினையும் செயல்படுத்தாத நிலையில், ஒரு முன்னோடித் திட்டமாக மாணவச் செல்வங்களும், அவர் தம் பெற்றோர்களும் எளிதில் அணுகிப் பெறும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது” என்று ஸ்டாலின் கூறினார்.

நல்ல விஷயங்கள் அவ்வளவு எளிதாக நடப்பதில்லை. பல குறுக்கீடுகளும் இன்னல்களும் வரும். முதல்வரின் இந்தக் கல்வித்திட்டத்துக்கும் அதுதான் நடந்தது. “இந்தத் திட்டத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் தன்னார்வலர்கள் ஆர்.எஸ்.எஸ் மற்றும் பாஜகவின் மனுதர்ம எண்ணங்களைக் குழந்தைகளுக்கு சொல்லித்தரக்கூடும்’’ என்று சில விமர்சகர்கள் குற்றம் சாட்டினர். இந்த விமர்சகர்களில் முக்கியமானவர், திராவிட தலைவர்களின் ‘ராஜகுரு’வான திராவிடக் கழகத் தலைவர் கி. வீரமணி. தந்தை ஈ. வெ. ரா பெரியாரின் திராவிட கழகத்திலிருந்து திமுக பிறந்தது என்பதை நமது வாசகர்களுக்கு நான் நினைவுபடுத்தத் தேவையில்லை.

“குலக்கல்வித் திட்டத்தின் மறுபதிப்பாகவும் சமூகநீதியை அறவே ஒழிக்கும் வகையில் அதுபற்றிய முக்கியத்துவத்தையே தராமலும், ஆர்.எஸ்.எஸ். கொள்கைப்படி உருவாக்கப்பட்ட மத்திய அரசின் கல்வித் திட்டத்தை தமிழ்நாடு ஏற்காது என்று கொள்கை முடிவாக முன்பே தி.மு.க அரசு அறிவித்துள்ளது. இல்லம் தேடி கல்வி திட்டம் இந்தநிலையில், நமது பள்ளிக் கல்வித் துறை அதனை தெரிந்தோ, தெரியா மலோ ‘பழைய கள் புதிய மொந்தை’ என்பதுபோல் பல தனித்தனி அம்சங்களை நடைமுறைப்படுத்துவது போன்ற சில ஆணைகளைப் பிறப்பித்திருப்பது என்பது, மனுதர்ம சனாதனக் கல்வியை ஒட்டகம் நுழைவது போல் நுழைய இடம் கொடுத்துவிடக் கூடாது என்று உறுதியாக உள்ள பலருக்கும் இந்தப் போக்கு மிகுந்த வேதனையைத் தருவதாக உள்ளது, அதிர்ச்சியாகவும் உள்ளது. இல்லம் தேடி கல்வித் திட்டம் என்பது ஆர்.எஸ்.எஸ். பாராட்டும் கல்விக் கொள்கையின் நுழைவுதான்’’ என்று வீரமணி விமர்சித்தார்.

ஆனால், வீரமணியின் எதிர்ப்பிற்கு அவர் வைத்த காரணங்கள் சிறிது வியப்பாகவே இருந்தது. மிகவும் வருத்தத்தைத் தரக்கூடியவையாகவே தெரிந்தது. இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கமே பள்ளிக் குழந்தைகளுக்கு அவர்கள் கோவிட் ஊரடங்கால் இழந்த கல்வியைப் படிப்படியாகக் கொண்டு சேர்ப்பதுதானே. இதில், ‘மனுதர்ம சனாதனக் கல்வியை ஒட்டகம் நுழைவதுபோல் நுழைய இடம் கொடுத்துவிடக் கூடாது’ என்கிற அச்சம் எப்படி வந்தது என்று புரியவில்லை.

எதிலும் காவியைக் கண்டு அலறும் மார்க்சிஸ்ட் கம்ப்யூனிஸ்ட் கட்சியும் இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. மேலும், பள்ளி ஆசிரிய, ஆசிரியைகளும் கூடத் தாங்கள் கற்றுக்கொடுக் காத எதை இல்லம் தேடி கல்வித் திட்டத்தில் கற்றுக் கொடுக்கப் போகிறார்கள் என்றும் கேள்வி எழுப்பி வருகின்றனர். அவர்களின் புலம்பல் புரிகிறது. இத்திட்டத்தினால் அவர்களுக்குக் கிடைக்கும் டியூஷன் கட்டண வசூல் காணாமல் போய்விடும்!

இந்த விசித்திரமான எதிர்ப்புகளுக்கு முதல்வர் சரியான பதில் அளித்துள்ளார். ஒரு நீண்ட அறிக்கையின் மூலம் அவர் இத்திட்டத்தின் தேவையையும் சிறப்பையும் மீண்டும் எடுத்துவைத்தார். போதுமான

## குழந்தைகளுக்கு உதவ அரசியல் தலைமைக்கு காத்திருக்கவேண்டாம்

சோதனைகளுக்குப் பிறகே கல்வி அதிகாரிகள், இந்த திட்டத்தில் பங்கேற்கும் தொண்டு நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று கூறிய அவர், அவர்களது செயல்பாடுகளும் மாணவர்களின் மேம்பாடும் தொடர்ந்து கண்காணிக்கப்படும் என்றார். ஒன்றிய அரசின் கல்வித்திட்டம் பின்வாசல் வழியாக நுழைவதற்கு இந்தத் திட்டம் வழிவகுக்கும் என்று எண்ண எந்த முகாந்திரமும் இல்லை என்று கூறினார். இதுதவிர, தமிழக மாணவர்களுக்கான சிறப்பான கல்வித்திட்டம் ஒன்றை அமைப்பதற்காகத் தனது அரசு விரைவில் ஓர் உயர்மட்டக் குழுவை அமைக்கும் என்று முதல்வர் தெரிவித்தார்.

தமிழக மாணவர்களுக்காகப் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தைப் பற்றி இங்கு விரிவாகப் பேசியுள்ளேன். ஈழத்தில் கோவிட் ஊரடங்கால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் இதேபோன்ற ஒரு திட்டத்தை உடனடியாக உருவாக்க வேண்டியதன் அவசரத்தைக் குறிப்பிடவே இதை விவரித்தேன். தனது மக்களுக்கு நல்வாழ்வை அளிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிற ஒரு தீர்க்கதரிசி முதல்வர் தமிழகத்துக்கு அதிர்ஷ்டவசமாகக் கிடைத்துள்ளார். ஆனால், உங்களது இளைஞர்களையும் குழந்தைகளையும் மனதில்வைத்து, நல்வாழ்வுத் திட்டங்களை உருவாக்குகிற அரசியல் தலைமைக்காக நீங்கள் காத்திருக்கவேண்டியதில்லை. ஏனெனில், அவர்கள் ‘மற்ற’ விஷயங்களில் மூழ்கி இருக்கக்கூடும். சுய உதவிக் குழுக்கள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர் நிறுவனங்கள் ஆகியவற்றை நீங்களே அமைத்து, இது போன்ற திட்டங்களின்மூலம் குழந்தைகளுக்கு உதவ முடியும்.

‘ஈழநாடு’ வாசகர்களுக்கு எனது அன்பிற்குரிய தீபாவளி வாழ்த்துக்கள், கடவுள் உங்களுக்கு அருள் புரியட்டும்.

நன்றி, மீண்டும் சந்திப்போம். ●



# 'மொட்டு' கூட்டணிக்குள் நெருக்கடி; 'யுகதனவி' சிக்கலுக்கு தீர்வு என்ன?

**“பங்காளிகளை பகைத்துக் கொண்டு அரசால் முன்னோக்கி பயணிப்பது கடினம். சிங்கள, பௌத்த வாக்குகளை வேட்டையாடக்கூடிய வல்லமை விமல் வீர சன்ச, கம்மன்பில உள்ளிட்ட தரப்பின ருக்கும், தேசியவாத அமைப்பினருக்குமே உள்ளது.**

ஆர். சனத்

கெரவலப்பிட்டிய “யுகதனவி” மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவன மொன்றுக்கு வழங்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான “மொட்டு” அரசியல் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகள் போர்க்கொடி தூக்கி யுள்ளன.

“யுகதனவி” திட்டத்தின் ஊடாக இலங்கையில் எரிவாயு விநியோகத்தை மேற்கொள்வதற்கான “நிறைவேற்று அதிகாரம்” அமெரிக்க நிறுவனத்தின் கைகளுக்குள் சென்றுவிடும் எனவும், அது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கே அச்சுறுத்தலாக அமைந்துவிடும் எனவும் பங்காளிக்கட்சிகள் அபாய சங்கு ஊதியுள்ளன.

மறுபுறத்தில் மின்சார சபை ஊழியர் சங்கம் உட்பட மேலும் பல தொழிற்சங் கங்களும் இத்திட்டம் அரசு வசமே இருக்க வேண்டும் எனவும், அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் முயற்சி தோற் கடிக்கப்படும் எனவும் சூளுரைத்துள்ளன.

அமெரிக்க நிறுவனத்துடன் கைச்சாத் திடப்பட்டுள்ள உடன்படிக்கைக்கு தடை உத்தரவுகோரி சில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், சிவில் அமைப்பினரும், மதத் தலைவர்களும் உயர் நீதிமன்றத்தில் மனுக்களை சமர்ப்பித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

“யுகதனவி” தொடர்பில் அமெரிக்க நிறுவனத்துடன் ஆரம்பகட்ட உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ள நிலை யில், இது தொடர்பில் அமைச்சரவை யில் கலந்துரையாடப்படவில்லை என அமைச்சர் விமல் வீரவன்ஸ சுட்டிக்காட் டியுள்ளதுடன், திருட்டுத்தனமாகவே இதற்கான நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளதாகவும் விமர்சித்துள்ளார்.

“ஆரம்ப உடன்படிக்கை மட்டுமே தற்போது கைச்சாத்திடப்பட்டுள்ளது. அடுத்து கைச்சாத்திடப்பட்டுள்ள இரு உடன்படிக்கைகளே முக்கியமானவை. எம்மிடமிருந்தும் யோசனைகள் கோரப் பட்டுள்ளன” என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர அறிவித்துள்ளார்.

ஆரம்பக்கட்ட ஒப்பந்தத்தின் பிர காரம் இலங்கையின் மின்கட்டமைப் புக்கு தேவையான எரிவாயு உட்பட எரிவாயுவை விநியோகிக்கும் அதிகாரம் ஆயுள் முழுதும் அமெரிக்க நிறுவனம் வசம் சென்றுவிடும் என்பதால், இத் திட்டத்தை தோற்கடிக்க வேண்டும். அதற்காக மக்களும் அணிதிரள வேண் டும் என அமைச்சர் உதய கம்மன்பில அறைகூவல் விடுத்துள்ளார்.

“மக்கள் சபை” எனும் தலைப்பின்கீழ் பங்காளிக்கட்சிகளின் ஏற்பாட்டில் கொழும்பில் இரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற கருத்தரங்கானது, மொட்டு அரசுக்கு விடுக்கப்பட்டுள்ள “சிவப்பு” எச்சரிக்கையாகவே பார்க்கப்படுகின்றது.

“யுகதனவி” மின் உற்பத்தி நிலையம் அமெரிக்க நிறுவனத்திடம் ஒப்படைக்



கப்பட்டால் அரசிலிருந்து வெளியேறு வது உறுதி என்பதை பங்காளிக்கட்சி களின் தலைவர்கள் தமது உரைகள் மூலம் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் உணர்த்தி இருந்தனர்.

“அமைச்சு பதவிக்காக, மனசாட்சியை அடகுவைக்கமுடியாது. நாட்டுக்காக அமைச்சு பதவியை அல்ல, எந்தவொரு தியாகத்தையும் செய்வதற்கு தயார்” என்று அறிவிப்பின்மூலம் இது உறுதி யாகின்றது.

2020 இல் நடைபெற்ற பொதுத்தேர்த லில் சிறிலங்கா பொதுஜன பெரமுன வானது, கூட்டணி அமைத்து மொட்டு சின்னத்தில் போட்டியிட்டது. அக்கட்சி 17 போனஸ் ஆசனங்கள் உட்பட 145 ஆசனங்களைப் பெற்றது.

பொதுத் தேர்தலில் தனித்து போட்டி யிட்டிருந்தாலும், தேர்தலின் பின்னர் ஈபிடிபி, தேசிய காங்கிரஸ், எமது மக்கள் சக்தி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆகியன மொட்டு அரசுக்கு ஆத ரவு வழங்கின. சில மாவட்டங்களில் மட்டும் தனித்து போட்டியிட்ட சுதந் திரக்கட்சி, யாழ். மாவட்டத்தில் ஒரு ஆசனத்தைக் கைப்பபறியது. இதன் பிரகாரம் 151 ஆசனங்கள் (அதாவது நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன்) ஆட்சி சகிதம் மொட்டு கட்சி ஆட்சி அமைத்தது.

அத்துடன், புத்தளம் மாவட்டத்தில் தனித்து போட்டியிட்ட முஸ்லிம் தேசிய கூட்டணியும் (ஒரு ஆசனம்) அரசுக்கு ஆதரவு வழங்கிவருகின்றது. எதிரணியில் இருந்தாலும் முக்கியமான சட்டமூலங் கள் வரும்போது ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ரவூப் ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன அரசுக்கு ஆதரவாக வாக்களித்துவருகின் றன. (இரு கட்சிகளின் தலைவர்களைத் தவிர ஏனைய எம்.பிக்கள் ஆதரவளிக் கின்றனர்)

ஆக பாராளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவாக 158 பேர் செயற்படுகின்றனர். எனவே, மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை பெறுவதென்பது சவாலுக்குரிய விடயமாக இருக்கவில்லை.

ஆனால் “யுகதனவி” விவகாரத்தில் (தற்போதைய நிலையில்) அரசு மூன்றி லிரண்டு பெரும்பான்மை பலத்தை இழந்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி (14 எம். பிக்கள்), தேசிய சுதந்திர முன்னணி ( 4 எம். பிக்கள்), லங்கா சமசமாஜக்கட்சி (தேசியப் பட்டியல்), இலங்கை கம்யூனிஸ் கட்சி (ஒரு ஆசனம்), தூய ஹெல உறுமய கட்சி (ஒரு ஆசனம்), தேசிய காங்கிரஸ் (ஒரு ஆசனம்), எமது மக்கள் சக்தி (ஒரு ஆசனம்) ஆகியன அரசின் திட்டத்தை எதிர்த்துள்ளன. “செய் கடமை” எனும் அமைப்பின் கெவிந்துகுமார துங்கவும். எதிர்ப்பு,

தினேஸ் குணவர்தனவின் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈபிடிபி ஆகியன தமது நிலைப்பாடு களை இன்னும் வெளிப்படையாக அறி விக்கவில்லை. அக்கட்சிகள் அரசுக்கு ஆதரவு வழங்கினால்கூட மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லை (யுகதனவி விவ காரத்தில்).

சிலவேளை, எதிரணியை பிளவு படுத்தி, எம்.பிக்களை விலைக்கு வாங்கி வேண்டுமானால் மூன்றிலிரண்டு பெரும் பான்மையை ஆளுந்தரப்பு உருவாக்கிக் கொள்ளமுடியும்.

பங்காளிகளை பகைத்துக்கொண்டு அரசால் முன்னோக்கி பயணிப்பது கடினம். சிங்கள, பௌத்த வாக்குகளை வேட்டையாடக்கூடிய வல்லமை விமல் வீரசன்ச, கம்மன்பில உள்ளிட்ட தரப்பின ருக்கும், தேசியவாத அமைப்பினருக் குமே உள்ளது. எனவே, இத்தரப்புகளை பகைத்துக்கொள்வதற்கு மொட்டு கட்சி முற்படாது என்பதே என் கருத்து.

“யுகதனவி”ஒப்பந்தத்தை இலங் கைக்கு சாதகமான விதத்தில் மாற்றி யமைத்தால் முதலீடுகள் மேற்கொள்ள அமெரிக்க நிறுவனம் பின்வாங்கும். ஆக இது விடயத்தில் அரசு என்ன செய்யப் போகின்றது? ■



# "ஒரே நாடு ஒரே சட்டம்" எழுப்பும் கேள்விகள்!

**பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசமைப்பின் சட்டங்களை நீதி தீர்த்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலும் பாதுகாத்தலும் என்பதன் பிரகாரம் இனம், மதம், சாதியம் அல்லது வேறேதும் காரணத்தால் எந்தவொரு நபரும் சட்டத்தின் பாகுபடுத்தலுக்கு அல்லது விசேட கவனத்துக்கு ஆளாகக்கூடாது என்பதை முன்னிறுத்தி "ஒரே நாடு ஒரே சட்டம்" என்பதை உருவாக்க ஜனாதிபதி செயலணி வர்த்தமானி பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கையினுள் ஒரே நாடு ஒரே சட்டம் என்பதை செயல்படுத்தல் தொடர்பாக கற்று ஆராய்ந்து அதற்கானதொரு சட்ட வரைவை தயாரிக்கவும் நீதி அமைச்சால் இதுவரை தயாரிக்கப்பட்ட சட்ட வரைவுகள் மற்றும் திருத்தங்களை கற்று ஆராய்ந்து அவற்றின் பொருத்தம் மற்றும் தகுந்த திருத்தங்கள் இருப்பின் அவற்றுக்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு ஏற்றவாறு உரிய வரைவை தயாரிக்க இந்தக் குழுவிற்கு பணிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இக்கட்டுரை ஒரே நாடு ஒரே சட்டம் என்பதனால் ஏற்படக்கூடிய தாக்கங்களையும் அரசியலையும் தேடுவதாக அமைய உள்ளது.

கலகொடை அத்தே ஞானசார தேரர் தலைமையில் ஒரு நாடு ஒரு சட்டம் ஜனாதிபதி செயலணி உருவாக்க வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. குறித்த குழுவில் தமிழர்கள் இடம்பெறாமை தமிழ் சமூகத்திடையே அதிருப்தியையும் சந்தேகங்களையும் உருவாக்கியுள்ளது. குறித்த செயலணி தொடர்பாக கருத்துரைத்துள்ள தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன், "தமிழர்களைப் பொறுத்த வரையிலே அவர்களுக்கு எதிராக 1948ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும், இனப்படுகொலையின் இன்னுமொரு பரிமாணமே இந்தச் செயலணி" என்று குறிப்பிட்டுள்ளார். அவ்வாறே சிறுபான்மை சமூகங்கள்மீது அதிகம் முரண்பாடான கருத்துக்களையும் செயல்பாடுகளையும் முன்னெடுக்கும் ஞானசார தேரரின் தலைமை என்பது சந்தேகங்களை மேலும் மேலும் வலுப்படுத்துவதாக அமைகின்றது. அத்துடன் புதிதாக ஒரு நாடு ஒரு சட்ட அமுலாக்க முயற்சிகள், இலங்கையில் இதுவரை இரு நாடு இரு சட்டங்கள் இருந்தனவா என்ற கேள்விகளையும் எழுப்பவே செய்கின்றது.

எனவே, இலங்கையில் நடைமுறைப்படுத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள ஒரு நாடு ஒரு சட்டத்தின் அரசியல் பின்புலங்களை நுணுக்கமாக அவதானிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது.

முதலாவது, இலங்கை பல இன, மொழி மற்றும் பல கலாசார சமூகங்களை கொண்ட தேசமாகும். ஒரே மரபணுவில் தோன்றினாலும் அவர்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறைகள் தனித்துவமானவை. ஒவ்வொரு சமூகங்களும் தங்கள் மகிழ்ச்சி மற்றும் சோகங்களை வெளிப்படுத்தும் முறைமைகளும் வேறுபட்டே காணப்படுகின்றன. இத்தகைய பல்தேசிய சமூகங்களை கொண்ட இலங்கை தேசத்தில் ஒரு நாடு ஒரு சட்டம் எனும் அமுலாக்க முயற்சிகள் நாட்டின் பல்லின தேசிய கட்டமைப்பை நிராகரிக்கும் செயல்பாடுகளா என்ற சந்தேகம் பொது வெளியில் எழுப்பப்படுகிறது. இது இலங்கையின் இன, மத மொழிகளுக்கிடையில் ஏற்கனவே வலுவடைந்துள்ள வேறுபாடுகள் இன்னும் தீவிரம் பெறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் என்ற எண்ணமும் காணப்படுகிறது. இன நல்லிணக்கத்திற்கு பதில் இன முரண்பாட்டின் கூர்மைப்படுத்தல் ஏற்படுத்தப்பட வாய்ப்புள்ளது என்று அதிகம் விமர்சிக்கப்படுகிறது.

இரண்டாவது, தற்போது நடைமுறைப்படுத்த பிரயத்தனம் மேற்கொள்ளப்படும் ஒரு நாடு ஒரு சட்ட மூலம் என்பது பிரதானமாக இஸ்லாமிய சட்டங்களை குறிவைத்து அதனை நீக்குவதற்கான முயற்சி என்பதே பலரின் எண்ணங்களாகவும் உள்ளன. குறித்த சட்ட மூல முன்மொழிவுகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியில் பரவலாக இஸ்லாமிய சமூகப் பிரதிநிதிகளை உள்ளீர்த்துள்ளமை இஸ்லாமிய சட்டங்களை புறக்கணிப்பதற்கான உத்தியா என்ற சந்தேகம் நியாயமானது. அதுமட்டுமின்றி இது இஸ்லாமிய நாடுகளிலிருந்தும், மேற்கு நாடுகளிலிருந்தும் எழுகின்ற விமர்சனங்களை சீர்செய்வதற்கான உத்தியாகக் காணப்படுகிறது. முன்னைய நாட்களில் இஸ்லாமிய மக்களின் புர்கா ஆடை தொடர்பான நெருக்கடிகள் ஏற்பட்ட போது இஸ்லாமிய சமூகத்தை சேர்ந்த அரசாங்க தரப்பினர் அரசாங்க செயல்பாடுகளை நியாயப்படுத்திக் கொண்டிருந்தனர். இதனால், இஸ்லாமிய சட்டங்களும் அதற்கான நியாயப்பாடுகளும் ஒரே நாடு ஒரே சட்டத்தின் மூலம் தகர்ந்து போய்விடுமா எனற சந்தேகம் வலுவடைந்து வருகின்றது. இலங்கைத் தீவை பொறுத்தவரை இஸ்லாமிய சமூகம் தனித்துவமான தேசிய அடையாளங்களுடன் செயல்படவும் இயங்கவும் முனைகிறது. இதனால், ஒரே நாடு ஒரே சட்டம் என்பது இஸ்லாமியரின் உள்ளார்ந்த இருப்பையும் வாழ்க்கை முறையையும் பழக்கவழக்கங்களையும் முற்றாகக் கைவிட வேண்டிய நிலையை ஏற்படுத்துமா என்ற சந்தேகம் நியாயமானதாக உள்ளது.

மூன்றாவது, ஒரு நாடு ஒரு சட்டத்தின் மூலம் இலங்கையின் பல்லின மக்களின் பல்லின மரபுகள் சிதைக்கப்பட வாய்ப்புள்ளது. மரபுகளை சிதைப்பது குறித்த இனங்களின் கலாசாரம் சிதைக்கப்படுவதுடன் அதன்வழி தேசிய சிந்தனைகளும் அழிக்கப்படுவதற்கான ஆபத்துக்களே அதிகமாக உள்ளது. இது இலங்கையின் ஏனைய தேசிய இனங்களின் தேசிய சிந்தனை கருத்துக்கள் இல்லாதொழிக்கப்பட்டு பெருந்தேசியவாதத்தின் தேசிய சித்தாந்தம் பெரும் விருட்சமாக வளர்வதற்கான சூழலை உருவாக்கக்கூடியதாகும். அதனூடாக இலங்கை தீவை பெருந்தேசியத்தின் தீவாக மாற்றுகின்ற நடைமுறை முன்னெடுக்கப்படும் அபாயம் உள்ளது. ஒரே நாடு ஒரே சட்டம் என்பது இலங்கை தீவின் ஒரே தேசிய இனத்தை அடையாளப்படுத்துவதாகவே புரிந்து கொள்ளப்படுகின்றது. அது ஏனைய தேசிய இனங்களையும் அவற்றின் இருப்புக்களையும் கேள்விக்குறியாக்கும். அத்தகைய செய்முறை தேசியங்களின் இருப்பில் சந்தேகத்தையும் அச்சத்தையும் உருவாக்குவதோடு நம்பிக்கையீனத்தை அதிகரித்து அவற்றின் இருப்பு பலவீனப்படுவதற்கான அபாயம் உள்ளது.

நான்காவது, ஒரே நாடு ஒரே சட்டம் என்பதன் மூலம் தேசவழமைச்சட்டம் நிர்மூலமாவதற்கான சூழலும் காணப்படுகின்றது. இலங்கையில் காலனித்தவ காலத்திலிருந்தே ஒவ்வொரு பிரதேசத்துக்குமான மரபுவழி தேசவழமை சட்டங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஒல்லாந்தர் காலத்தில் சட்டங்கள் நிறுவனமயப்படுத்தப்பட்டு உருவாக்கப்பட்ட காலங்களில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் பின்பற்றப்பட்ட வந்த சட்டங்கள் தேசவழமை சட்டங்களாக எழுத்துருவாக்கப்பட்டு அரச சட்ட அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது. அந்தவகையில் இலங்கையில் யாழ்ப்பாண தேசவழமைச்சட்டம், கண்டி தேச வழமைச்சட்டம் மற்றும் மட்டக்களப்பு தேச வழமைச்சட்டங்கள் என்பன அந்தப் பிரதேசங்களின் தனித்துவ சட்டங்களாக காணப்படுகின்றன. அவை ஒரு நாடு ஒரு சட்டத்தின் மூலம் முழுமையாக இல்லாதொழிக்கப்படுவதனூடாக பிரதேசங்களின் தனித்தன்மை பலவீனமுற்று போகக்கூடிய சூழல் காணப்படுகிறது. இதுமட்டுமன்றி நீதிமன்றங்களிலும் ஏனைய நியாயாதிக்க பொறிமுறைகளிலும் தேசவழமைகள் உத்தரவாதப்படுத்தப்பட்ட முடிவுகளுக்கு உதவுகின்றது. தேசவழமை சார்ந்து நீதிமன்ற தீர்ப்புக்களும் நியாயாதிக்கங்களும் சுதேச பண்பாட்டின் கூறுகளை மீள மீள உத்தரவாதப்படுத்தி வருகின்றது. ஆனால், ஒரே நாடு ஒரே சட்டம் இதன் மீதான இருப்பை நெருக்கடிக்குள்ளாக்கும் சூழலை ஏற்படுத்தும் என்ற சந்தேகம் வலுவானதாகக் காணப்படுகின்றது.

ஐந்தாவது, தென்னிலங்கையில் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை ஒத்திப்போடுவதற்காக குறுகிய பெருந்தேசியவாத அலையை உருவாக்கும் செயல்பாடாகவும் ஒரு நாடு ஒரு சட்டம் முன்முயற்சிகள் அவதானிக்கப்படுகின்றது. தென்னிலங்கை அரசாங்கங்கள் அதிகமாக நெருக்கடிகள் வரும் சூழல்களில் கடந்த காலங்களில் பெருந்தேசியவாத அலைகளை உருவாக்கியே தமது நெருக்கடிகளை ஒத்திப்போகச் செய்து வந்துள்ளார்கள். 1956ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அத்தகைய பெருமுயற்சியையே முன்னெடுத்திருந்தார். தனிச்சிங்கள சட்டம் என்று அழைக்கப்பட்ட அந்த அம்சம் இன்று வரை இலங்கை தீவின் அரசியல் பொருளாதார இருப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது. இதேபோன்றதொரு குழப்பத்தை உருவாக்கும் உத்தியுடனேயே ஒரு நாடு ஒரு சட்ட மூல முயற்சி மேற்கொள்ளப்படுகின்றதா என்பது வலுவான சந்தேகமாகவே தென்படுகிறது.

எனவே, ஒரே நாடு ஒரே சட்டம் என்பது அதிகம் முரண்பட்ட சூழலை வெளிப்படுத்த முயல்கிறது. காரணம், இலங்கை தீவு இறைமை படைத்த ஒரே நாடு ஒரே சட்டத்துக்குள் கடந்த பல தசாப்தங்களாக செயல்பட்டு வருகிறது. அவ்வப்போது நெருக்கடி ஏற்பட்டாலும் அதிலிருந்து விடுபட்டு கொண்டதோடு இறைமை படைத்த ஒரு நாடு ஒரு தேசம் என்ற எண்ணத்தோடு இயங்குவதற்கு பல போர்களையும் சமாதான உடன்பாடுகளையும் மேற்கொண்டிருந்தது. ஆனால், திடீரென தற்போதைய தென்னிலங்கை ஆட்சி ஒரே நாடு ஒரே சட்டம் என அழைப்பது உள்நாட்டு மரபுகளிலிருந்தும் வழக்காறுகளிலிருந்தும் தேசவழமைகளிலிருந்தும் இஸ்லாமிய சட்ங்களிலிருந்து மட்டும் விலகியிருக்கவா அல்லது பிராந்திய சர்வதேச சட்டங்களிலிருந்தும் அதன் சமவாயங்களிலிருந்தும் பிரகடனங்களிலிருந்தும் விலகியிருக்கவா? என்ற சந்தேகத்தை தருகிறது. டச்சு சட்டத்தை முன்னிறுத்திய நியாயாதிக்கங்களும் நியாயாதிக்க மன்றுகளும் ஆங்கில சட்டத்தின் மூலங்களை மையப்படுத்திய நிறுவனங்களும் எத்தகைய நிலைக்கு தள்ளப்படும் என்ற கேள்வி நியாயமானதாகும்.

■

-நன்றி - அருவி




# மாவிட்டபுரத்தில் சிவபூமி திருக்குறள் வளாகம்



**செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன்**

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் சிவபூமி அறக்கட்டளையினரால் அமைக்கப்படவிருக்கும் திருக்குறள் வளாகத்திற்கான அடிக்கல் கடந்த 25.10.2021 திங்கள்கிழமை நாட்டப்பட்டது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனின் சிந்தனையில் உதயமான இந்தத் திருப்பணி அவுஸ்திரேலியாவில் வாழும் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த டாக்டர் கமலாகரன் வழங்கிய நிலத்தில் அவரது பெரும் பங்கு நிதி உபயத்துடன் அமைக்கப்படவிருக்கின்றது.

தமிழகத்தில் கலைஞர் கருணாநிதியின் முயற்சியில் வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அது திருக்குறளுக்கான கம்பீரமான அடையாளமாக எழுந்து நிற்கின்றது. இலங்கையில் திருக்குறள் சார்ந்து பல உணர்வாளர்கள் காலத்திற்குக் காலம் வாழ்ந்துள்ளனரெனினும் அவர்கள் திருக்குறள் மாநாடுகளை முன்னெடுப்பதிலும் வள்ளுவத்தைப் போதிப்பதிலுமே அதிக கவனத்தைச் செலுத்தியுள்ளனர்.

இலங்கையில் திருக்குறளுக்கென வளாகம் என்ற அமைப்பில் ஒரு கட்டடம் இதுவே முதலாவது சந்தர்ப்பமாக அமையும்.

மாவிட்டபுரம் தமிழறிஞர்களால் பொலிவு பெற்ற மண். மாவை சின்னக்குட்டி புலவர், மாவை பண்டிதர் சச்சிதானந்தம், நவநீதகிருஸ்ண பாரதியார் (அல்லது மாவை கவுணியன்), இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர் எனப் பல தமிழறி ஞர்களால் பொலிவு பெற்ற மண். இங்கு தமிழ்க் கடவுள் முருகனுக்கு அணித்தா கத் தமிழ் அடையாளமாகத் திகழும் வள்ளுவத்திற்கு வளாகம் அமைவது சாலச் சிறந்ததே.

இலங்கையில் பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்களுடைய காலத்தில் திருக்குறளைப் பெருமைப்படுத்தும் விழாக்கள் கிராமங்கள் தோறும் முன்னெடுக்கப்பட்டன. கோப்பாயைச் சேர்ந்த தமிழறிஞர் வேலுப்பிள்ளை எழுதிய முப்பானூற் சருக்கம் என்ற நூலே இலங்கையில் திருக்குறள் தொடர்பாக வெளிவந்த முதலாவது நூலாகக் கொள்ளப்படுகின்றது. தற்காலத்தில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் திருக்குறள் குறித்த விரிவுரைகளை பல்வேறு இடங்களில் மேற்கொண்டு வருகின்றார்.

புலமை சார்ந்த வளவாளர்கள் இலங்கையில் உள்ளனரெனினும் நிதியுடைமை சார்ந்து வளத்திற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படாமை காரணமாக திருக்குறளுக்கென நிலைபேறான அடையாளங்களை ஏற்படுத்தும் முயற்சிகள் இதுவரை கைகூடாமலே போயின. இந்நிலையில் செஞ்



சொற்செல்வர் கலாநிதி ஆறு. திரு முருகன் அவர்களின் முயற்சியும் அதை செயல்வடிவமாக்கும் வேட்கையும் கூடிய விரைவில் திருக்குறள் வளாகமாக கைகூடவிருக்கின்றது.

ஏறத்தாழ இரண்டு பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணியில் ஐந்து கோடிக்கும் அதிக மதிப்புள்ள எதிர்ப்பார்க்கைச் செலவுடன் அமையவுள்ள இந்த வளா கத்தில் இரண்டு தளங்களில் அமைந்த கட்டடங்கள் அமையவுள்ளன.

அடித்தளத்தில் 1330 திருக்குறள் பாக்களும் கருங்கல்லில் செதுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படவுள்ளன. அத்துடன் திருக்குறளுக்கான மொழிபெயர்ப்புக்கான மாதிரிகளும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. மேற்தளத்தில் திருக்குறள் ஆராய்ச்சி நூலகம். ஆராய்ச்சி செய்பவர்கள் தங்கியிருப்பதற்கான அறைகள் என்பன அமையவுள்ளன. கட்டடக் கலைஞர் சாரங்கன்



இந்தக் கட்டுமாணப் பணிகளை மேற்கொள்கின்றார். அவுஸ்திரேலியாவில் உள்ள புகழ்புத்த படவரைஞர் குணசிங்கம் இதற்கான கட்டுமாணப் படத்தை வரைந்து உதவியுள்ளார்.

திருக்குறள் வளாகம் அமைவது வெறும் அடையாள முன்னெடுப்பாக நோக்கப்படக் கூடாது. திருக்குறள் என்பது அறநூல் எனவும் வாழ்வியல் போதனை நூல் எனவும் கொள்ளப்படும் நிலையில் எங்கள் மண்ணில் அறம் தளைப்பதற்கான திறவுகோலாக இந்த வளாகம் அமைய வேண்டும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பாக அமைந்திருக்கிறது.

# பயணங்கள்!

- மாலி -

8

# எதுவோ, இனி வாழ்வோம்!

## 'வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது வாழ்வுக்கு நேராமோ'?

யுத்தம் முடிந்த ஓராண்டில் 2010இல், 1995 போலல்லாமல், பயணம் விரைவானதாகவும், 'சுகமா'னதாகவும் இருந்தது உண்மைதான். முன்னர், தாண்டிக்குளத்தில் இராணுவத்தினரும், பின்னர் சிறிது தூரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும் அடையாளத்தைச் சோதனையிட்டனர். இம்முறை இராணுவத்தினர் மட்டுமே.

அப்போது, அங்கு ஒரு சூனிய பிரதேசம். அதன் தென் எல்லையில் இலங்கை இராணுவத்தினர். வட எல்லையில் விடுதலைப் புலிகள். முற்றிலும் தனியொரு இராஜ்யத்தை இலங்கை அரசின் செலவில் விடுதலைப் புலிகள் அப்போது அங்கு நிர்வகித்துக்கொண்டிருந்தனர்.

ஆக, அந்த இராஜ்யமும் விடுதலைப் புலிகளும் இப்போது இல்லை. ஆனாலும், அங்கு செல்வதற்கு முன்னரைப்போலவே பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவையாகவிருந்தது. இலங்கையில் பிறந்திராதவர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றிருந்தாலும், 'ஏ-9 பாதையூடாக' என்பது குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, தரைவழியாக யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப்படாமல், ஓமந்தையில் தடுத்து திருப்பியனுப்பப்படுவதாக பலர் சொல்கிறார்கள். இவர்கள் விமானமூலம் யாழ்ப்பாணம் செல்லலாம்.

இடையிடையே புத்தளத்துக்கும் அநுராதபுரத்துக்குமிடையில் புதிய வீதி நிர்மாணத்தில் சற்று தாமதங்கள் இருந்தாலும், கொழும்பிலிருந்து வவுனியாவரை பாதையும் பயணமும் பரவாயில்லை.

'வான்' ஒன்றில் காலை ஆறு மணியளவில் கொழும்பிலிருந்து புறப்பட்டு, அநுராதபுரத்து பசுமையின் ரம்மிய வனப்பில் சற்று இளைப்பாறி புறப்பட்டபோது, புதர்களுள் ஒளித்திருந்து வந்த பொலிஸ்காரர் ஒருவர் வானை மறித்தார்.

'ஓவர் ஸ்பீட்'.

இன்னொரு பொலிஸ்காரர் வேகத்தைக் கணிக்கும் கமெராவுடன் மோட்டார் சைக்கிள் அருகே நின்றார்.

இருநூறு ரூபா அபராதம்.

வவுனியா, பார்ப்பதற்கு அழகாக தெரிந்தது. சற்று கூடுதல் நேரம் அங்கு தரித்தாயிற்று.

அப்பாலே செல்ல, வீதியே நமக்கு விழிப்பூட்டி, எழுப்பி உசார்கொள்ளவைத்து சொல்கிறது: "கண்ணுக்கெட்டும் தூரம்வரை அனைத்தையும் பார்த்துக்கொண்டு வாருங்கள்."

வீதியோரத்திலேயே அடர்ந்து ஓங்கி வளர்ந்த காட்டு மரங்களும், வீதிகளில் குந்தியிருந்து அந்த மரங்களில் தாவிப் பாயும் குரங்குகளும் முன்னரெல்லாம் இந்தப் பயணத்தில் களிப்பூட்டும். இப்போது அங்கு அந்த மரங்கள், குரங்குகள் இல்லை.

இருமருங்கும் நீண்டதூரம் வெட்டவெளியாக்கப்பட்டிருக்கிறது. இடையிடையே பாதுகாப்பு அரண்களில் இராணுவ சிப்பாய்கள்.

சிற்சில இடங்களில் சிப்பாய்கள் சிலர் வீதியோரம் தனித்தும் நடந்து திரிகிறார்கள்.

நிர்மாணிக்கப்படவுள்ள வீதியின் எல்லைக் கற்கள் இருமருங்கும் ஆங்காங்கே நாட்டப்பட்டிருக்கின்றன. அதன்படி நிர்மாணிக்கப்பட்டால், ஜேர்மன் நாட்டு வீதிகளுக்கு அது ஒப்பாகும்.

கிணறுகள் கூட்டங்கூட்டமாக மாடுகள். குடிமனைகள் இருந்த இடங்கள் அவை என்பதைச் சொல்கின்றன.

புதிதான சிறுசிறு கூடாரங்களில் ஓரிரு குடும்பங்கள். முன்னர் அவர்களுடைய வீடுகள் இருந்த இடங்களாக இருக்கவேண்டும். அருகே, இராணுவ அரண்கள்.

சில இடங்களில் காட்டுப் பகுதிகளுள் செல்கின்ற வழிகள் தெரிகின்றன. காடுகளுள் முகாம்கள் அமைக்கப்பட்டு, இராணுவத்தினர் அம் முகாம்களுக்கு இடம்மாறுவதாக கொழும்பில் விஷயமறிந்த அரசியல்வாதி ஒருவர் கூறியது நினைவில் வந்தது.

வீதியின் மருங்கில் பஸ்களை நிறுத்திவிட்டு, அவ்விடங்களில் சமையலில் ஈடுபடும் சிங்கள மக்கள். இராணுவம் முகாமிட்டிருக்கும் இடங்களில் கவனத்தை ஈர்த்து பௌத்த மத அடையாளங்கள்.

மாங்குளம் இருந்த அடையாளம் தெரிகிறது. முறிகண்டியில் தரித்து புறப்பட்டால், அப்பால் யுத்தத்தில் சிதைக்கப்பட்ட பூமிதானே... மனது அதை எதிர்கொள்கிறது.

திடீரென்று, ஓர் அசாத்திய பராக்கிரமம் படைத்த ஒன்றை வெட்டிச் சரித்து வீழ்த்தியதில், அது குற்றுயிராய்க் கிடப்பதுபோலக் கண்டு, மனது துணுக்குற்றது. கிளிநொச்சியில், வீதியின் வலது பக்கம் தரையில் கிடக்கும் இராட்சத தண்ணீர்த் தாங்கி அது.

"... பொரு தடக்கைச் செயல் அடங்க, மயல் அடங்க, ஆற்றல் தேய ... சாய்த்த நாளில்... '' - இராவணன் இப்படித்தான் மடிந்து, சாய்ந்து கிடந்திருப்பானோ...?

புலிகள் பயன்படுத்திய சில விந்தையூட்டும் மோட்டார் எந்திர சாதனங்களுடன் ஒரு 'மினி' கண்காட்சி இடமாக ஆனையிறவு நுழைவாயில் ஆக்கப்பட்டிருக்கிறது. சிங்களவர்கள் பலர் பார்வையிட்டுக்கொண்டிருந்தார்கள்.

'எப்படித்தான் முடிந்திருந்தாலும், புலிகளின் தீரமும் திறனும்' என்று, தமிழ் மக்களுக்கு அது தோன்றக்கூடும். அப்படித்தான் அந்த சிங்கள மக்களுக்கும் தோன்றுமா? அதைத்தான் அவர்க ளுக்கும் ஊட்டி, அந்த உணர்வோடு அவர்கள் யாழ்ப்பாண தீபகற்பத்துள் பிரவேசிக்கட்டும் பிரவேசிப்பார்கள் என்பதற்காகத்தான் இது அமைக்கப்பட்டதா... ? ஏன் இருக்காது?

'இத்துணை அக்கிரமமும், இத்துணை ஆற்றலும் கொண்டிருந்தவர்களையல்லவா கொன்றொழித்து வென்றோம்' என்ற உணர்வையா அவர்களுக்கு அது தூண்டப்போகிறது...?



வெற்றி நினைவுச் சின்னம் ஒன்றும் அங்கு நிறுத்தப் பட்டிருக்கிறது.

ஆனையிறவிலிருந்து புறப்பட்டால் நிச்சயம் ஓர் எச்ச ரிக்கை. கார் அல்லது வானாக இருந்தால் அங்கிருந்து தொடரும் பயணம் அலைமோதும் ஆழ்கடல் பயணம். பல மைல் தூரம் அந்த வீதி அப்படித்தானிருக்கிறது.

வீதியோரங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மாலை சுமார் 6 மணி. 'எல்லாம் முடிந்துவிட்ட' நிம்மதிப் பெருமூச்சுடன், கலகலப்பாய் யாழ்ப்பாணம். மூன்று தசாப்தங்களின் பின்னர் எழும் மூச்சு.

எங்கோ ஓரிடத்தில், எப்படியோ ஏற்படுத்தப்பட்ட சமரசம் அதில் தெரிகிறது. அதைப் புரிந்துகொள்வதும் ஒன்றும் கடினமானதல்ல.

எதையுமே நினைத்துப்பார்க்க அவர்கள் தயாரில்லை. 'பட்டது போதும் எதுவோ, இனி வாழ்வோம்'.

நகர் நெரிசலாக, ஆரவாரமாக, சுறுசுறுப்பாக இருக்கிறது.

வாகனங்கள் நிறைத்த வீதிகள். விபத்துகள் தினமும் நிகழ்வதாக சொல்கிறார்கள்.

முக்கிய இடங்களில் வீதிகளில் இராணுவத்தினர் நின்றாலும், பொதுமக்கள் விவகாரங்களில் அவர்கள் தலையிடுவதில்லை.

ஏராளமான வார்த்தக நிலையங்கள் வங்கிகள். கொழும்பிலுள்ள அத்தனை நிதி நிறுவனங்களின் கிளைகளும் உள்ளன.

மக்களுக்கு நிதி உதவிக்காக இந் நிறுவனங்கள் தம் கிளைகளைத் திறந்தபோது, நிதி வைப்பீடுகளில் அவை 'பிஸி'யாவதாக ஒருவர் கூறினார்.

வீதி நிர்மாணங்கள், சில இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இவ் விஸ்தரிப்பு நிர்மாணங்கள் சில ஆலயங்கள், கல்லூரிகள் தொடர்பில் சில சர்ச்சைகளை தோற்றுவித்திருப்பதாகவும் சொல்கிறார்கள். இதுதவிர, நிர்மாண வேலைகள் என்று எதுவும் பெரிதாக தென்படவில்லை. ஆனால், ஒன்று எங்குமே நிறைந்த சிங்கள மக்கள் அவர்களது வாகனங்கள். இவர்கள் பெருமளவில் வந்தாலும், இவர்களால் பொருளாதார வருமானம் பெருமளவில் இல்லை என்கிறார்கள். செல்லும் இடங்களில் சமைத்து, சாப்பிட்டுச் செல்கிறார்கள்.

நயினாதீவுக்கு செல்பவர்கள் நெடுந்தீவுக்கும்கூட செல்கிறார்கள். இந்த சுற்றுலா செலவினம் இவர்களுக்கு ஏதோவிதமாக வழங்கப்படுவதாக பலரும் பேசிக்கொள்கிறார்கள்.

கொழும்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 'புளொட்' தலைவர் சித்தார்த்தன், பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோரைச் சந்தித்தபோது, யாழ்ப்பாணத்தில் எழுத்தாளர்கள் செங்கை ஆழியான், அ. யேசுராசா, பல்கலைக்கழக விரிவுரையாளர் சிவச்சந்திரன் ஆகியோரோடு, 'உதயன்' பத்திரிகை அலுவலகத்தில் ஆசிரியர் கானமயில்நாதன், எஸ். பெருமாள் ஆகியோர் நிலைமைகளையும், தமது கருத்துக்களையும் சொன்னார்கள். 'ருத்திர தாண்டவம்' என்றொரு நாவலை செங்கை ஆழியான் வெளியிட்டிருக்கிறார்.

துறைசார்ந்த தீவிர புலி ஆதரவாளர்கள், 'தற்போதைய நிலை எப்படியோ ஆனால், சில தவறுகள் இருந்தாலும், இறுதிவரையிலும் புலிகள் சரி' என்கிறார்கள். அரசின் நடவடிக்கைகளில் அவர்கள் குறையைக் காண்கிறார்கள். விடுதலைப் புலிகள் ஒத்துப்போயிருந்தாலும், அரசு எதையுமே வழங்கியிருக்காது என்கிறார்கள்.

மற்றையவர்கள், நியாயமானவிதத்தில் கடுமையாகவும் மென்மையாகவும் புலிகளை விமர்சிக்கிறார்கள். முடிந்த விதத்தில் அநுசரணையாகவும் சாமர்த்தியமாகவும் சிலவற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

மக்கள் சலனமற்று இருக்கிறார்கள். வஞ்சிக்கப்பட்ட உணர்வு அவர்களிடம் இருக்கிறது. அதில் ஆத்திரம், விரக்தி இருக்கிறது.

சற்றுநேரம் பேசிக்கொண்டி ருந்தால், இலேசான சிரிப்புடன் ஒரு கேள்வி பொதுவாக எழும் "என்ன நினைக்கிறீர்கள் - 'அவர்' இருக்கிறாரா? ..."

பெரும்பாலும் அவர்களுக்கு அந்தக் கேள்வியின் பதில் தெரியும். ஆனாால், அதில் ஆர்வம் இல்லை. அந்த நிலைக்கு அவர்கள் தாமாக வந்திருக் கிறார்கள் அல்லது, அரசு அவர்களை அப்படி ஆக்கியிருக்கிறது.

வெளிக்காட்சிகள் வெளிப்படுத்தும் சுவடுகளைத் தவிர, இந்த மக்களில் அந்த முப்பது ஆண்டுகால துயரச் சுவடு கள் தென்படவில்லை. அவர்கள் அதைச் சுதாகரித்து விட்டார்கள். ஆனால், அந்த சுதாகரிப்பு - அதன் வெறுமை துல்லியமாக தெரிகிறத் உணர்வில் நெருடுகிறது.

'... நகரின் மகுடமாக அழகொளிர்ந்த முற்றவெளியையடுத்த மாநகர சபை சூழ்ந்த பிரதேசம், இடிபாடுகளுடன் புதர்கள் அடர்ந்து, யாழ்ப்பாணத்தின் அதி பாழடைந்த காட்டுப் பிரதேசமாக காட்சியளிக்கிறது. திக்குத் தெரியாத அக் காட்டில் நிஜமாகவே சிறிது நேரம் தவித்துப்போனேன்.

மாநகரசபைக் கட்டடமோ, சுப்பிரமணியம் பூங் காவோ எங்கே என்பது தெரியவில்லை. பாதைகளைக் கண்டுகொள்ள முடியவில்லை.

அந்தப் பற்றைப் புதர்கள் நடுவே, காலத்தின் வடுக்க ளோடு ஞாலத்துக்கு சாட்சிசொல்ல வானுயர்ந்து நிற்கும் இரண்டு நினைவுச் சின்னங்கள்.

ஈழத் தமிழர்களின் அரசியல் நேர்மையைச் சாற்றி, தந்தை செல்வநாயகத்தின் நினைவுத் தூபி ஒன்று.

'... நம் முன்னோர்கள்போல நமக்கென்றொரு தனி நாட்டை நாம் உருவாக்க வேண்டும். அது, சுலபமான தல்ல என்பது எமக்குத் தெரியும். ஆனால், அதைத்தவிர எமக்கு வேறு வழி இல்லை. ஒன்றில், சிங்கள அதிகாரத் திலிருந்து நாம் விடுபட வேண்டும் அல்லது செத்து மடியவேண்டும்...' என்று, சமரசத் தீர்வுக்கான முயற்சி களின் தோல்விகள்



அளித்த விரக்தியில், தன்னுடைய நீண்ட அரசியல் வாழ்வின் இறுதி உரையாய் அமைந்த பாராளுமன்ற உரையில் செல்வநாயகம் கூறிய அந்த வார்த்தைகள் - அந்த உரையின் அந்தக் காட்சி - அதன் பின்னணி அப்போது நினைவில் எழுந்தன.'

95 பயணத்தில் பார்த்த யாழ்ப்பாணம் இது.

அப்போதும் இப்போதும் இலங்கைத் தமிழ் மக்களை அடையாளப்படுத்தும் அசல் யதார்த்தம்.

ஆனல், அப்போதும் இப்போதும் அது சாற்றுவது ஒன்றுதானா?

இதுவரை காலமும் தங்களுக்கிருந்த தங்களது உரிமைக்காக போராடும் உரிமையையும் இழந்துவிட்ட ஓர் உணர்வில் மக்கள் மௌனிக்கிறார்கள். வெல்வதற்காக இருந்த ஒன்று இல்லாமல் போய்விட்டதாக உணர்கிறார்கள்.

உரிமையின் உந்தல் கனமாய் முனகுகிறது.

ஏன், எப்படி?

தாண்டிக் குளத்தில் உடம்பையும் உடைமைகளையும் சோதனையிட்டாலும், இரவு சொகுசு பஸ்ஸில் கொழும்பு திரும்பிய பயணம் உடம்புக்கு சொகுசாகவே இருந்தது. ஆனால், மனது அதனை உணரவில்லை.

"... மழை வானம் வெளுத்திருந்தது. அகலும் பகலோடு, 'படகுகள் சிலசமயம் ஓடுமோ' என்று மனதிலிருந்த அசட்டு நம்பிக்கையும் அகல ஆரம்பிக்க, பெட்டியைத் தூக்கிக்கொண்டு, ஆள்கள் சற்று குறைவாக தெரிந்த கொட்டகை ஒன்றைநோக்கி நடந்தேன். அங்கு ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டேன்.

"சற்றுத் தள்ளி ஒருவர் அறிமுகமானவர் போலிருந்தார். ஸ்கந்தாவில் படித்தீரா என்றார். ஆம், என்றேன். கொழும்பில் வேலைபார்க்கும் அவர், முதல் நாள் வந்ததாகத் தெரிவித்தார். இரண்டு குழந்தைகளுடன் ஒரு பெற்றோர் மூன்று நாள்களாக தங்கியிருப்பதாகவும் தெரிந்தது. இவை, தெம்பூட்டின. அத்துடன், அவர்களின் கஷ்டங்களை கொஞ்சம் அநுபவித்து, அறிந்துகொள்வது நல்லதேயென்ற தேற்றமும் உண்டாயிற்று.

"இரவு சுமார் ஒரு மணியிருக்கும் பக்கத்து கொட்டகையில் 'பாம்பு' என்று சத்தம் கேட்டது. அதனை அடிப்பதும் அடுத்து கேட்டது. புடையன் பாம்பு என்றார்கள். வயதான ஒருவர் ஆஸ்த்மாவினால் சற்று அவதியுற்றுக்கொண்டிருந்தார்..."

95இல், கிளாலி பாதையூடாக யாழ்ப்பாணத்துக்குச் சென்ற 48 மணிநேர பயணம் இது. அப்போது அங்கிருந்து திரும்புகையில் இல்லாத ஓர் உணர்வு இப்போது.

"வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது
வாழ்வுக்கு நேராமோ - நன்னெஞ்சே
வாழ்வுக்கு நேராமோ" - பாரதி உரைத்தது.

இனவாத உணர்வு இல்லை. தீவிர இன உணர்வும் இல்லை. உந்துதல் இல்லாத, இயல்பான தன்மான, மனித உணர்வுதான்.

அந்த உணர்வில், பாரதியின் இந்த வரிகள் ஜீவனற்றவை.

**(அடுத்த வாரம்)**



இன்ஸ்ட்ராகிராமில் 200 இலட்சம் பின்தொடர்பவர்களை பெற்றுள்ளார் காஜல் அகர்வால். பல இளம் - முன்னணி நாயகிகளுக்கு மத்தியில் திருமணமான காஜல் அகர்வாலுக்கு தொடர்ந்தும் ரசிகர்கள் கிடைப்பது பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது.

தென்னிந்திய அளவில் இன்ஸ்ட்ராகிராமில் அதிக பின்தொடர்பவர்களை பெற்றிருப்பவர் ராஷ்மிகா மந்தனா. இவருக்கு 230 இலட்சம் பின்தொடர்பவர்கள் உள்ளனர். இவருக்கு அடுத்து இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார் காஜல் அகர்வால். 194 இலட்சம் பின்தொடர்பவர்களுடன் சமந்தா மூன்றாவது இடத்தில் இருக்கிறார்.



'நந்தா' படம் மூலம் நடிகர் சூரியாவுக்கு திருப்புமுனை தந்தவர் இயக்குநர் பாலா. அதன்பின் இருவரும் பிதாமகன் படத்திலும் இணைந்தனர். தொடர்ந்து பாலாவின் அவன் இவன் படத்தில் சிறப்பு வேடத்திலும் தோன்றினார். இந்நிலையில் மீண்டும் இந்த கூட்டணி இணையவுள்ளனர். இதனை சூரியா உறுதி செய்துள்ளார்.

அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் "என்னைவிட என் மீது அதிக நம்பிக்கை வைத்தவர். ஒரு புதிய உலகை எனக்கு அறிமுகம் செய்து அடையாளம் தந்தவர். 20 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் அதே ஆர்வத்துடன் அவர் முன் நான், அப்பா ஆசீர்வதிக்க மீண்டும் ஓர் அழகிய பயணம் என் பாலா அண்ணனுடன்... அனைவரின் அன்பும் ஆதரவும் தொடர வேண்டுகிறேன்"" என பதிவிட்டுள்ளார் சூர்யா.

இவர்கள் இணையும் படம் குறித்து விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று அறியவருகின்றது.



இறுதிச் சுற்று படம் மூலம் அறிமுகமானவர் ரித்திகா சிங். தொடர்ச்சியாக சில படங்களில் நடித்தார். ஆனால், அவை வெற்றிபெறவில்லை.

இந்த நிலையில், அவர் நடித்த ஓ மை கடவுளே படத்தில் அவரின் நடிப்பு பெரும் வரவேற்பை பெற்றது. தற்போது பாக்சர், பிச்சைக்காரன்-2 போன்ற படங்களில் நடித்து வருகிறார்.

ஆனால், முன்னணி நாயகர்களுடன் இணைந்து நடிக்க வேண்டும் என்றால் வர்த்தக ரீதியாக அவரின் படங்கள் பெரு வெற்றி பெற வேண்டும் என்பதை புரிந்துகொண்ட அவர் தற்போது கவர்ச்சி வேடங்களில் நடிக்கவும் சம்மதம் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் தனது கவர்ச்சிப் படங்களை தனது சமூக வலைத்தளங்களில் பரவ விட்டுள்ளார் அவர்.

அமலாபால் தயாரித்து, நடிக்கும், 'கடாவர்' படத்தை அனுாப் எஸ். பணிக்கர் இயக்கியுள்ளார். இதன் முதல் பார்வை கடந்த செவ்வாய்க்கிழமை மொத்த படத்தையுமே முதல் பார்வையிலேயே சொல்லியுள்ளனர். தடயவியல் அறுவை சிகிச்சை நிபுணராக நடிக்கும் அமலாபால், ஒரு வாரம் மருத்துவமனைக்கு சென்று துறை சார்ந்த மருத்துவர்களிடமும் பயிற்சி பெற்றார்.

அதுல்யாரவி, ஹரிஷ் உத்தமன், ரித்விகா, முனிஸ்காந்த் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். "அசல் தடயவியல் அறுவை சிகிச்சை நிபுணராகவே அமலாபால் மாறிவிட்டார்" என இயக்குநர் கூறியுள்ளார்.






எழுத்தாளர் ஜெயமோகன் எழுதி வெளிவந்த 'துணைவன்' சிறுகதையை மையமாக வைத்து உருவாகிறது "விடுதலை" திரைப்படம். இந்தப் படத்தை வெற்றி மாறன் இயக்குகிறார்.

இந்தப் படத்தில் சூரியுடன் இணைந்து விஜய் சேதுபதியும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். சூரிக்கு ஜோடியாக பவானி ஸ்ரீ நடிக்கிறார்.

இந்தப் படத்திற்கு இசைஞானி இளையராஜா இசையமைக்கிறார். இந்தப் படத்தில் நடிகர் தனுஷ் பாடல் ஒன்றை பாடியுள்ளார்.



சமந்தா - நாகசைதன்யா திருமண வாழ்வு முறிந்துவிட்டது. இந்த நிலையில், அவர் தனது சமூகவலைத் தளத்தில் பெண் பிள்ளைகளின் பெற்றோருக்கு ஒரு வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

அதில், "உங்கள் மகள் யாரை திருமணம் செய்து கொள்ள போகிறார் என்பதை பற்றி கவலைப்படுவதை விட்டுவிட்டு, உங்கள் மகளை வலிமையானவளாக தயார் செய்யுங்கள். அவளது திருமணத்திற்காக பணம் சேர்த்து வைப்பதற்கு பதிலாக அவளது கல்விக்கு செலவிடுங்கள். முக்கியமாக அவளை திருமணத்திற்கு தயார் செய்வதற்கு பதிலாக அவளை அவளாகவே தயார் செய்து கொள்ளும்படி உருவாக்குங்கள். அவளுக்கு தன்னைத்தானே நேசிக்கவும் தன்னம்பிகையை வளர்த்துக் கொள்ளவும் கற்றுக் கொடுங்கள்" என்று கூறியுள்ளார்.

## திரை விமர்சனம்

திரைப்படம் : ஓ மணப்பெண்ணே
இயக்கம் : கார்த்திக் சுந்தர்
இசை : விஷால் சந்திரசேகர்
நடிப்பு : ஹரிஷ் கல்யாண், பிரியா பவானி சங்கர்




தெலுங்கில் விஜய் தேவரகொன்டா, ரிதுவர்மா நடித்து வெளிவந்த பெல்லி சூப்புலு படம்தான் தமிழில் ஓ மணப் பெண்ணேவாக மீளுருவாகியது.

தெலுங்கு பெல்லி சூப்புலு படத்திற்குக்கூட தமிழில் பாண்டியராஜன், பாண்டியன், ரேவதி, சீதா நடித்து 1985இல் வெளிவந்த ஆண் பாவம் படம்தான் ஈர்ப்பாக இருந்திருக்க வேண்டும்.

பல இழுத்தடிப்புகளுக்கு பின்னர் சித்தியடைந்து பொறியியலாளரானவர் ஹரிஷ் கல்யாண். எந்த ஒரு பொறுப்பும் இல்லாமல் நண்பர்களுடன் ஊர் சுற்றுபவர். அவருக்கு திருமணத்திற்குப் பிறகுதான் நல்ல வேலை அமையும் என அப்பா ஜோசியம் பார்த்து, பிரியா பவானி சங்கரைப் பெண் பார்க்கச் செல்கிறார்கள். அங்கு ஹரிஷும், பிரியாவும் அவர்களின் முந்தைய காதல் பற்றியும் பேசுகின்றனர்.

தனக்கு இப்போது திருமணத்தில் விருப்பமில்லை, அவுஸ்திரேலியா செல்ல வேண்டும் என்கிறார் பிரியா. ஆனால், ஹரிஷ் குடும்பத்தினர் பார்க்க வந்த பெண் பிரியா அல்ல என்பது தெரியவருகிறது. அதன்பின் ஹரிக்கு வேறு இடத்தில் பெண் பார்த்து முடிவு செய்கிறார்கள். ஆனால், ஹரிஷின் வருங்கால மாமனார், ஹரிஷ் தனது திறமையை நிரூபிக்க வேண்டும் என்கிறார். இதனிடையே, பிரியா, ஹரிஷுடன் இணைந்து நடமாடும் உணவகம் ஒன்றை ஆரம்பிக்கிறார். இருவருக்குள்ளும் காதல் எட்டிப் பார்த்ததா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

5 வருடங்களுக்கு முன்னர் வந்த படம் என்றாலும், 2021சூழலுக்கு ஏற்றபடி மீளுருவாக்கம் செய்துள்ளார் அறிமுக இயக்குநர் கார்த்திக் சுந்தர்.

பொறுப்பில்லாத இளைஞர் கார்த்திக் ஆக ஹரிஷ் கல்யாண். இன்றைய சில இளைஞர்களை கண்முன் நிறுத்துகிறார். இந்த மாதிரி கதாபாத்திரங்களில் எல்லாம் நடிக்கவே வேண்டாம், அப்படியே இயல்பாக இருந்தால் போதும். அதையே ஹரிஷ் இயல்பாக செய்திருக்கிறார்.

பிரியா பவானி சங்கருக்கும் பொருத்தமான ஒரு கதாபாத்திரம். அமைதியாக நடித்திருக்கிறார். அவரின் நடிப்பு பேச வைக்கிறது.

ஹரிஷ், பிரியா பவானி இருவருமே காதல் காட்சிகள் இல்லாமல் தங்கள் காதலை முகபாவத்தில் வெளிப்படுத்த வேண்டும். அவர்களிடையேயான அந்த பரபஸ்பர காதல் பாவங்கள் ரசிக்க வைக்கின்றன.

மற்ற கதாபாத்திரங்களில் ஹரிஷ் அப்பாவாக வேணு அரவிந்த், நண்பர்களாக அன்புதாசன், அபிஷேக்குமார் , பிரியா அப்பாவாக கேஎஸ்ஜி வெங்கடேஷ் அவரவர் கதாபாத்திரங்களில் முத்திரை பதிக்கிறார்கள்.

வளர்ந்து வரும் இசையமைப்பாளர்களில் விஷால் சந்திரசேகர் கவனிக்க வேண்டிய ஒருவர். பாடல்கள் ஒரு சில பழைய பாடல்களை ஞாபகப்படுத்தினாலும், பின்னணி இசையில் எப்போது, எங்கு இசைக்க வேண்டுமோ அங்கு இசைத்து படத்தின் உணர்வை நம்முள் கூடுதலாகக் கடத்துகிறார்.

ஒளிப்பதிவாளர்கள் என்றாலே பொதுவாக கதாநாயகிகளை தனியாகக் கவனித்து ஒளிப்பதிவு செய்வார்கள். ஆனால், ஒளிப்பதிவாளர் கிருஷ்ணன் வசந்த் சில இடங்களில் கவனிக்கவேயில்லை.

படத்தில் அனைவரும் பேசிக் கொண்டே இருப்பது போன்ற ஒரு உணர்வு. ஒரு காட்சியில் கூட யாரும் அமைதியாக இல்லை. சில காட்சிகளின் நீளம் அதிகம், அவற்றை வெட்டியிருந்தால் இன்னும் விறுவிறுப்பாக இருந்திருக்கும்.

# மாற்றம் ஏன்?

கிரிக்கெட் உலகின் தற்போதைய சூடான விவாதம் குயின்ரன் டி கொக்கை பற்றியதுதான்.

இருபது - 20 உலகக்கிண்ணத்தின் சுப்பர் 12 சுற்றில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் திடீரென டி கொக் விலகினார். தனிப்பட்ட காரணங்களுக்காக போட்டியிலிருந்து விலகியிருக்கிறார் என முதலில் தகவல் சொல்லப்பட்டது. ஆனால், சற்று நேரத்தில் நிறவெறிக்கு எதிராக முழந்தாளிட்டு கையை உயர்த்த டி கொக் மறுத்தே இந்த போட்டியிலிருந்து விலகினார் என தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையே உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

இதைத் தொடர்ந்து டி கொக்கிற்கு எதிராகவும், ஆதரவாகவும் பலரும் தங்கள் கருத்துகளை தெரிவித்தனர். இன்னும் சிலர் டி கொக் இந்த உலகக் கிண்ணத்தில் ஆடுவதும், ஏன் இனி அவர் தென்னாபிரிக்க அணிக்கு ஆடுவதுமேகூட சந்தேகம்தான் எனக் கருத்துகளை வெளியிட்டனர். இந்த நிலையில், இந்தப் பிரச்னை தொடர்பில் டி கொக்கே ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் தன்னுடைய செயலுக்கு வருத்தம் தெரிவித்திருக்கும் டி கொக், "நான் முழந்தாளிடுவதால் மக்கள் விழிப்புணர்வு அடைவார்கள் எனில் அதை செய்யவும் தயாராக இருக்கிறேன்"" என்று கூறியிருக்கிறார்.

"நிறவெறிக்கு எதிராக நிற்கவேண்டியதன் தேவையை நான் உணர்ந்திருக்கிறேன். மேலும், கிரிக்கெட் வீரர்கள் எல்லாவற்றுக்கும் முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்பதையும் அறிந்திருக்கிறேன். நான் முழந்தாளிடுவது மற்றவர்களுக்கு விழிப்புணர்வை கொடுத்து அவர்களின் வாழ்க்கை மேம்பட காரணமாக இருக்குமாயின் நான் மிக்க மகிழ்ச்சியோடு அதை செய்யத் தயாராக இருக்கிறேன். நான் யாரையும் அவமதிக்க வேண்டுமென அப்படி செய்திருக்க வில்லை. குறிப்பாக, மேற்கிந்தியத்தீவு வீரர்களை அவமதிக்க நினைக்கவில்லை.




வெளியி லிருந்து பார்ப்பவர்களுக்கு சில விடயங்கள் புரியவில்லை. எனது குடும்பம் முழுக்க முழுக்க வெள்ளையினத்தை சார்ந்ததில்லை. எனது குடும்பத்தின் முக்கியமான நபர்கள் கறுப்பினத்தை சேர்ந்தவர்களே. இப்போதில்லை நான் பிறந்ததில் இருந்தே என் வாழ்வில் கறுப்பினத்தவர்களின் சம உரிமை முக்கியமான தாகவே இருந்திருக்கிறது. என்னுடன் வளர்ந்தவர்களுக்கும் என்னுடன் கிரிக்கெட் ஆடியவர்களுக்கும் நான் யார் என தெரியும். நான் நிறவெறிமிக்கவனாக இருந்திருந்தால் அதை உள்ளுக்குள் வைத்துக் கொண்டு அமைதியாக முழந்தாளிட்டு விட்டு சென்றிருப்பேன். ஆனால், அதனால் யாருக்கும் பிரயோசனமில்லை. அனைவருக்குமான சமநிலையும் உரிமையும் உறுதி செய்யப்பட வேண்டும்.




இந்த விடயத்தில் என்னுடைய உரிமைகள் பறிக்கப்பட்டனவாக உணர்கிறேன். ஏனெனில், கடைசி நிமிடத்தில் மைதானத்திற்கு விளையாட கிளம்பும்போதே இப்படி ஒரு விடயத்தை செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார்கள். எங்களிடம் கலந்தாலோசிக்கக்கூட இல்லை.

நான் யார் என்பது எனக்கு தெரியும். அதை இதுபோன்ற செயல்பாடுகள் மூலம்தான் நிரூபிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. நீங்கள் இதை செய்தே ஆக வேண்டும் என சிறிய கலந்தாலோசனைகூட இல்லாமல் சொல்லப்படும்போது, இந்த இயக்கத்தின் அடிப்படையே பொருளற்றதாக போய்விடுவதாக நினைக்கிறேன்.

என்னுடைய அணியின் ஒவ்வொரு வீரரையும் விரும்புகிறேன். தென்னாபிரிக்க அணிக்காக கிரிக்கெட் ஆடுவதைவிட வேறெதுவும் எனக்கு மகிழ்ச்சியை அளிக்காது. இந்த விடயங்களெல்லாம் உலகக்கிண்ணத்துக்கு முன்பாகவே பேசி முடிக்கப்பட்டிருக்க வேண்டும். உலகக்கிண்ணத்தின்போது இதேமாதிரியான சச்சரவுகள் ஏற்படுவது சரியாக இல்லை. என்னுடன் நின்ற அணி வீரர்களுக்கும் அணித் தலைவர்களுக்கம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் என்னை சரியாக புரிந்துக்கொள்ளவில்லை. ஆனால், என்னுடைய அணித் தலைவர் என்னை புரிந்துக்கொண்டார். அவர் ஓர் அற்புதமான தலைவர் - என்று கூறியிருக்கிறார்.

# அதிர்ச்சித் தோல்வி

கிரிக்கெட் உலகில் இந்திய அணி பாகிஸ்தானிடம் மிக மோசமாக தோல்வியடைந்த அதே நாளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உதைபந்தாட்ட உலகில் மன்செஸ்டர் யுனைற்றெட் அணி லிவர்பூலிடம் மிக மோசமாகத் தோற்றது.

"இன்றைய போட்டியில் என்ன நடக்குமோ?" என ஒவ்வொரு போட்டியையும் எதிர்கொள்ளும் மன்செஸ்டர் யுனைற்றெட் ரசிகர்களுக்கு லிவர்பூல் அணிக்கு எதிரானத் தோல்வி உச்சபட்ச கோபத்தை உருவாக்கியிருக்கிறது. அந்த கோபம் எந்தளவுக்கு என்றால் போட்டி நடந்து கொண்டிருந்தபோதே "Theatre of Dreams" என்று வர்ணிக்கப்படும் ஓல்ட் டிராபோர்ட் மைதானத்தில் தங்களின் அணியின் ஆட்டத்தை காண சகிக்காமல் ஆயிரக் கணக்கான ரசிகர்கள் போட்டியின் முதல் பாதியிலே வெளியேறினர். மன்செஸ்டர் யுனைற்றெட் அணி தன்னுடைய உதைபந்தாட்ட வரலாற்றில் படுமோசமான தோல்விகளில் ஒன்றை அன்றைய நாளில் பதிந்தது.

2021-2022 இற்கான பிறீமியர் தொடரில் முதல் சுற்றுப் போட்டியில் நீண்டகால எதிரிகளான மன்செஸ்டர் யுனைற்றெட் அணியும் லிவர்பூல் அணியும் மன்செஸ்டர் நகரில் மோதின. இரு அணி ரசிகர்கள் மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த உதைபந்தாட்ட ரசிகர்களுமே மிகுந்த ஆர்வமாக போட்டியை காணக்காத்திருந்தனர். இரு அணிகளிலும் நட்சத்திர வீரர்கள் அதிகம் இடம்பெற்று இருப்பதால், போட்டி கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்த்தனர். ஆனால், கிறிஸ்ரியனோ றொனால்டோ, புரூனோ பெர்னாண்டஸ் போன்ற நட்சத்திர வீரர்கள் இருந்தும் ஒரு கோல் கூட அடிக்காமல் போட்டி ஒருதலைபட்சமாக 5-0 என்ற கோல் கணக்கில் முடிந்துவிட்டது.

போட்டி தொடங்கிய சிறிது நேரத்திலேயே லிவர்பூல் அணி அடுத்தடுத்து கோல்கள் அடிக்க, மன்செஸ்டர் யுனைற்றெட் அணி வீரர்கள் என்ன செய்வது எனத்தெரியாமல் விழி பிதுங்கி நின்றனர். இவ்வளவு மோசமான தடுப்பாட்டத்தை மூன்றாம் தர அணிகள்கூட ஆடுமா என்பதே சந்தேகமே.



நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ போட்டியின் முதல் பாதியில் கோபம் அடைந்து லிவர்பூல் வீரர் ஒருவரை எட்டி காலால் உதைத்தார். அவரின் செயல் போட்டியை பார்த்த ஒட்டுமொத்த மன்செஸ்டர் யுனைற்றெட் ரசிகர்களின் மனநிலையை பிரதிபலித்தது. முதல் பாதியில் 0-4 என்ற கோல் கணக்கில் பின் தங்கி கிட்டத்தட்ட தோல்வி உறுதியானவுடன், ஆயிரக்கணக்கான மன்செஸ்டர் யுனைற்றெட் ரசிகர்கள் மைதானத்தை விட்டு வெளியேறினர்.

கடந்த தொடரில் மன்செஸ்டர் யுனைற்றெட் அணி 1-6 என்ற கணக்கில் றொட்டனாம் ஹாட்ஸ்பார் அணியிடம் தோல்வியடைந்தது. ஆனால், அதைவிட இந்த போட்டி படுமோசமான விமர்சனங்களுக்கு உள்ளானது. போட்டி முடிந்ததும் மன்செஸ்டர் யுனைற்றெட் கோல் காப்பாளர் டேவிட் டி கியா "குழந்தைகள் போல நாங்கள் இந்த ஆட்டத்தில் ஆடினோம்" என்றார். அவ்வளவு மோசமான ஆட்டம்.


கிறிஸ்ரியனோ றொனால்டோ, ஜேடன் சான்சோ, ரபேல் வரன் வருகைக்கு பிறகு பிறிமீயர் லீக்கை வெல்லும் அணியாக மன்செஸ்டர் யுனைற்றெட் வலம் வரும் என ரசிகர்கள் கணித்தார்கள். ஆனால், இப்போது வெல்வோமா, தோற்போமா என ஒவ்வொரு போட்டியையும் சந்தேகத்துடன் எதிர்கொள்ளும் அவல நிலையில் மன்செஸ்டர் யுனைற்றெட் அணியின் ஆட்டம் இருக்கிறது.

தோல்விக்கான முழு பொறுப்பும் மன்செஸ்டர் யுனைற்றெட் அணி பயிற்றுவிப்பாளர் ஓலே குன்னர் சோல்ஜெர் மீது சுமத்தப்படுகிறது. நன்றாக விளையாடும் வீரர்களை தவிர்த்து விடுவது, போட்டி உத்தி ஒன்றும் இல்லாமல் களமிறங்குவது எனப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அவர் மீது வைக்கப்படுகிறது.

தோல்வியின் விரக்தியில் # Oleout என மன்செஸ்டர் யுனைற்றெட் அணி ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் தங்கள் கோபத்தை கொட்டி வருகின்றனர். இந்த தோல்விக்குப்பிறகு ஓலே குன்னர் சோல்ஜெர் பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் என்கிறார்கள். அவருக்கு பதிலாக ஜினடேன் ஜிடேன் அல்லது அன்ரனியோ கான்டே புதிய பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

உடனடியாக சரியான பயிற்சியாளரை நியமிக்கவில்லை என்றால், மன்செஸ்டர் யுனைற்றெட் அணி பல அவமானகரமான தோல்விகளை சந்திக்கும் என்பது மட்டும் உறுதி!

# செ.வே.காசிநாதனின் “விற்கன்ஸ்ரைன்: மொழி, அர்த்தம்,மனம்” சில அறிமுகக்குறிப்புகள்



**மு. நித்தியானந்தன்**

“**பொய்** சொல்வது உங்களுக்கு அனுகூலமாயிருந்தால், ஏன் ஒருவர் உண்மை பேச வேண்டும்?”

தனது வீட்டு விறாந்தையில் நின்றுகொண்டு, இந்தக் கேள்வியைத் தனது எட்டு அல்லது ஒன்பது வயதில் யோசித்துப் பார்த்தவன்தான் விற்கன்ஸ்ரைன் (Wittgenstein).

இருபதாம் நூற்றாண்டின் மெய்யியலாளர்களின் மெய்யியலாளராகப் போற்றப்பட்ட விற்கன்ஸ்ரைன் பெரும் புதிராகவே திகழ்ந்தார். புகைமூட்டத்தின் நடுவே வெள்ளிப்பிழம்பாகத் தெரிந்தார். அவரின் மேதைமையை மெய்யியல் உலகு வியப்போடு பார்த்தது. பரபரப்பை, பிரபல்யத்தை நாடாத ரிஷியாக உலவினார். தனக்கு உவப்பில்லாத சூழலிருந்து வெகுவேகமாக வெளியேறினார். “தனிமை கண்டதுண்டு, அதிலே சாரமிருக்குதம்மா” என்றே வாழ்ந்துதீர்க்கப் பார்த்தவர். தன்னைப் பெரும் மெய்யியலாளராக விளித்து எழுதிய தன் சகோதரிக்கு, “இல்லை, என்னை “உண்மையைத் தேடுபவன்“ என்று சொல், அது போதும்“ என்று பதில் எழுதியவர் அவர். மெய்யியலை நாடி அவர் செல்லவில்லை என்றும், மெய்யியல்தான் அவரை நாடிச் சென்றது என்பார்கள்.



அவரின் எழுத்துகளும் சிந்தனையும் உலகளாவியரீதியில் விவாதிக்கப்பட்டபோது, விற்கன்ஸ்ரைன் அதில் எதுவும் கலந்துகொள்ளாமல் ஒரு விச்ராந்தியாகத் திரிந்தார். நோர்வேயில் அவர் இரண்டு ஆண்டுகள் முற்றாகத் தனிமையில் வாழத் திட்டமிட்டிருக்கிறார் என்று அறிந்த மெய்யியல் அறிஞர் பேட்றன்ட் றசெல், “இது தான்தோன்றித்தனமான, விசர்த்தனமான வேலை” என்று சொல்லிய எதனையும் விற்கன்ஸ்ரைன் பொருட்படுத்தியதில்லை. “நீங்கள் இருளில் நிற்கிறீர்கள் என்றேன் நான் பகல் வெளிச்சத்தை வெறுக்கிறேன் என்றார் அவர் அங்கிருப்பது பெரும் தனிமையைத் தோற்றுவிக்கும் என்றேன் புத்திசாலித்தனமானவர்களுடன் பேசி எனது மனதை மிக மிக மலினப்படுத்திக்கொண்டு விட்டேன் என்றார் அவர் உங்களுக்குப் பைத்தியம் என்றேன் நான் கடவுள் எனது மனநலத்தைப் பாதுகாப்பார் என்றார் அவர்.” என்று எழுதுகிறார் பேட்றண்ட் றசெல்.

விற்கன்ஸ்ரைனின் இரண்டு சகோதரர்கள் தற்கொலை செய்து கொண்டு மரணித்தமை, றசெலுக்கு சற்று அச்சத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். நோர்வேயின் தனிமை வாசத்தில் விற்கன்ஸ்ரைன் பூரணமாகப் பைத்தியமாகப் போகிறார் அல்லது தற்கொலை செய்துகொண்டு விடக்கூடும் என்று றசெல் கருதியிருக்கிறார்.

ஆனால், Skjolden என்ற நோர்வேயின் மலைப்பாங்கான, நீர்வீழ்ச்சியும், நதியும் கொண்ட ஒதுக்குப்புறமான சின்னஞ்சிறு கிராமமொன்றில் அங்குள்ள கிராம மக்களோடு மிகுந்த நட்புறவோடு வாழ்ந்திருக்கிறார். இப்போது அந்தக் கிராமத்தின் தனிப்பெருமையே விற்கன்ஸ்ரைன் அக்கிராமத்தில் சிலகாலம் வாழ்ந்தார் என்பதுதான்!

*1929*இல் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்திற்கு, பேராசிரியராக விற்கன்ஸ்ரைன் இரண்டாவது தடவை சென்றிருந்தபோது, அங்கிருந்த அதிபுலமையாளர் வட்டம் அவருக்கு உகந்ததாகவிருக்கவில்லை.

விரிவுரைகளின்போது அவர் சிந்தனையில் மூழ்கி, அமைதியாய் இருந்திருக்கிறார். அவரது மாணவர்கள் மிகப் பொறுமையோடு அவரது விளக்கத்திற்காகக் காத்திருந்திருக்கிறார்கள். தான் எழுதியவற்றை எல்லோரும் புரிந்துகொண்டுவிட வேண்டும் என்று விற்கன்ஸ்ரைன் ஒருபோதும் கருதியது கிடையாது.

“எனது எழுத்துகள் பிறருக்குச் சிந்திக்கும் வேலையை எளிதாக்குவது என் விருப்பமல்ல. இயலுமாயின் இந்நூல் யாரையாவது சுயமாகச் சிந்திக்கத் தூண்ட வேண்டும்” என்று விற்கன்ஸ்ரைன் குறித்திருக்கிறார்.

அவரது சிஷ்யர்கள் என்று சொல்லப்படுபவர்களாலேயே, அவரது கருத்துகள் புரிந்துகொள்ளப்படாமலும் திரித்தும் விளக்கப்படலாம் என்று விற்கன்ஸ்ரைன் கருதியதில் நியாயம் இருந்தது. தனது பிந்தைய சிந்தனைகளை, எழுத்துகளைப் பிரசுரிக்கவோ, வெளிப்படுத்தவோ அவர் அக்கறை காட்டவில்லை. மேலைத்தேய மெய்யியலின் சிந்தனைத்தடத்தையே மாற்றிப்போட்ட அவரது “மெய்யியல் ஆய்வுகள்“ (Philosophical Investigations) *1953*ஆம் ஆண்டு வெளியானபோது, விற்கன்ஸ்ரைன் இறந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டிருந்தன.

விற்கன்ஸ்ரைன் இரண்டு முக்கிய சிந்தனைப் போக்குகளுக்கு வித்திட்டிருக்கிறார் என்றும், இரண்டையுமே அவர் மறுதலித்தும் இருக்கிறார் என்றும், G.H. Von Wright தான் எழுதிய விற்கன்ஸ்ரைனின் வாழ்க்கைக் குறிப்பிலே கூறுகிறார். ஒன்று, இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்னரான பத்தாண்டு காலப்பகுதியில் மவுசு பெற்றிருந்த தருக்கப்புலனறிவுவாத சிந்தனை முறையாகும். மற்ற சிந்தனைப் போக்கு ஒற்றைப் பெயரால் சுட்டக்கூடிய சிந்தனை முறைமை அன்று. இச்சிந்தனையின் ஆரம்ப கட்டத்தை கேம்பிரிஜ் பகுப்பாய்வுப் பள்ளி எனலாம் என்றும், யுத்தத்திற்குப் பின் இச்சிந்தனை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மேலாதிக்கம் பெற்று, ஓரியக்கமாக விரிவுபெற்று, மொழிசார் மெய்யியல் (linguistic philosophy) அல்லது ஒக்ஸ்போர்ட் சிந்தனைப்பள்ளி என்று குறிக்கப்பட்டது என்று ஜி.எச். பொன் றைட் எழுதுகிறார்.

பிந்தைய விற்கன்ஸ்ரைனின் மொழி, அர்த்தம், மனம் என்பன குறித்த விசாரணையே, கலாநிதி செ.வே. காசிநாதன் அவர்களின் நூலாகும்.

தமிழில் மேற்கத்தைய மெய்யியலில் இதுகாலவரை வெளியான நூல்கள், மெய்யியல் வளர்ந்த வரலாறு கூறும் நூல்களேயாகும். அவை, மெய்யியல் பயிலும் மாணவர்களுக்கு உதவும் துணை நூல்களாக அமையும் நோக்கிலேயே எழுதப்பட்டுள்ளன. கலாநிதி. செ.வே. காசிநாதன் அவர்கள் எழுதியுள்ள இந்நூலில் விற்கன்ஸ்ரைன் என்ற மெய்யியல் சிந்தனையாளரின் பின்னைய சிந்தனையில் மொழி, அர்த்தம், மனம் என்பன குறித்த விளக்கங்களும், அவை பற்றி மேற்குலகில் நிகழ்ந்த நுட்பமான வாதங்களும் சீரான பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. இவ்வகையில், மெய்யியலில் ஆழமான – தீர்க்கமான பிரச்சினை பற்றி ஆராயும் முதல் நூல் இதுவெனலாம். மேற்கத்தைய மெய்யியலாளர்களில் நீட்ஷே, பிளேட்டோ, சோக்ரடீஸ், அரிஸ்டோடில், பிராய்ட் ஆகிய அறிஞர்களின் பெயர்கள் அறியப்பட்ட அளவிற்கு விற்கன்ஸ்ரைன் அத்துணை அறியப்பட்ட பெயரல்ல. மெய்யியலாளர்களின் மெய்யியலாளர் எனப்படும் சிந்தனையாளரை அறிமுகப்படுத்தி, அவரைத் தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயப்படுத்தும் பணி, இதுவரை யாரும் பயணப்பட்டிராத பிராந்தியத்திற்குள் நுழையும் பிரயத்தனம்.




தமிழில் இப்பணியை ஆற்றவல்ல பெரும் சிந்தனையாளனாக செ.வே. காசிநாதன் அவர்கள் நமக்குக் கிடைத்திருப்பது, நம் பெரும் பேறு. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பசில் மெண்டிஸ் என்ற பேராசானின் வழிநடத்தலில், மெய்யியலைச் சிறப்புப் பாடமாகக் கற்ற காசிநாதன் அவர்கள் புலமைப் பரிசில் பெற்று, லண்டனில் மெய்யியல் பேராசிரியர் டீ.டபிள்யூ. ஹம்லின் அவர்களின் கீழ் தனது உயர் கல்வியைத் தொடந்தார். அவரோடு நீண்டு ஆய்வுரையாடக் கிடைத்த வாய்ப்பு, சமகால ஆங்கில மெய்யியலில், குறிப்பாக மனமெய்யியலில் எழுந்த புதிய சிந்தனைமுறையிற் பயிலப் பெரிதும் உதவியது என்கிறார் காசிநாதன்.

பேராதனையில் இருபது ஆண்டு காலம் காசிநாதன் மெய்யியல் போதித்த காலம், அத்துறையின் பொற்காலம் எனலாம். ஈழத்தில் தமிழில் மெய்யியல் துறையின் தளத்தை கற்பாறையில் நிர்மாணித்த பெருஞ் சிற்பி அவராவார். மெய்யியல் துறையில் இன்று புழக்கத்தில் உள்ள அனைத்துச் சொற்களும் காசிநாதன் அவர்கள் வனைந்த, பிரயோகித்த சொற்களாகும். மறைந்த பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா, பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ், க. ஆதவன் ஆகியோர் காசிநாதன் அவர்களிடம் பாடம் கேட்கும் பாக்கியம் பெற்றோர். பேராதனைப் பல்கலைக்கழகக் கருத்தரங்குகள், விரிவுரை மண்டபங்கள் காசிநாதனின் பிரசன்னத்தால் களைகட்டிய மகோன்னதமான காலம் ஒன்றிருந்தது. மெய்யியல் மாணவர்களுக்கு அப்பால், மருத்துவ பீட மாணவர்களும், பொறியியல், விஞ்ஞான பீட மாணவர்களும் என்று ஒரு மாணவர் பட்டாளம் எப்போதும் இவரைச் சூழ்ந்து நின்றது. கருத்தரங்குகளில் இவர் எழுப்பிய கேள்விகள் ராமபாணங்களாகத் துழைத்துச் செல்பவை. இனவன்முறையினை அடுத்து, காசிநாதன் அவர்கள் தன் துணைவி நளினியோடு இலங்கையை விட்டு, அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்தமை இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்ட பெரும் நஷ்டம். எனினும், அப்பெரும் நஷ்டத்தை இந்நூலின் மூலம் அவர் ஈடு செய்திருக்கிறார் எனல் வேண்டும்.

விற்கன்ஸ்ரைனைத் தன் சுவாசத்தில் கொண்டுதிரிபவர் காசிநாதன் அவர்கள்.

எத்தகைய நுட்பமான சிந்தனை அவருடையது என்று மாய்ந்து போபவர். விற்கன்ஸ்ரைனை இன்னும் வாசிக்கும் இவர், எல்லாம் விளங்குவதற்குத் தன்னுடைய தவம் போதாது என்கிறார்.

மெய்யியல் உலகில் தனக்கு ஞான ஒளி வீசியவர் விற்கன்ஸ்ரைன் என்றே கருதுகிறார். விற்கன்ஸ்ரைனின் “மெய்யியல் ஆய்வுகள்“ நூலின் ஒவ்வொரு பக்கமும் அவருக்கு அத்துபடி. அவரின் கருத்துகளைப் பிழையாக விளங்கி, விளக்கம் தர முயல்வோரை, காசிநாதன் சடுதியாக இனங்கண்டு கொள்வார். லண்டன் பல்கலைக்கழக மெய்யியல் துறைப் பேராசிரியரும், பல மெய்யியல் நூல்களை ஆக்கியவருமான A.C. Grayling எழுதிய Wittgenstein: A Very Short Introduction என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்துத் தருமாறு காசி அவர்களிடம் கேட்டு, அவர் அந்நூலை வாசித்துவிட்டு, ஏ.சி.கிரேலிங் பிழையாக விற்கன்ஸ்ரைனைப் புரிந்துகொண்டிருக்கிறார் என்று அந்நூலைக் கிடப்பிலே போட்டிருக்கிறார். விற்கன்ஸ்ரைனை சரியாகவே புரிந்து, அந்த மெய்யியல் ஞானியின் சிந்தனைப்பரப்பில் தோய்ந்து, அதனைத் தமிழில் தரவல்ல பெருமகன் காசிநாதன் அவர்களாவார். இந்நூல் தமிழருக்குக் கிடைத்திருக்கும் பெரும் பொக்கிஷம். “ஆதி கிரேக்க மெய்யியல்” என்ற அரும்பெரும் நூலைத் தமிழில் தந்தவர் காசிநாதன் ஆவார். விற்கன்ஸ்ரைனைத் தமிழுக்குக் கொண்டுவருவதில் காசிநாதன் அவர்களின் தமிழ் இலக்கியப் புலமையும், கம்பீரமான மொழிநடையும் நிறையவே கைகொடுத்திருக்கின்றன.

இந்நூல் மெய்யியலின் அடிப்படையான அம்சங்களை நோக்கித் தன் கவனத்தைக் குவித்திருக்கிறது.

மொழி, அர்த்தம், மனம் என்பன பற்றிய ஆழ்ந்த விசாரம் நூல் முழுதும் இழையோடுகிறது. **(16 ஆம் பக்கம் பார்க்க...)**

# சித்திரத்தில் பெண் எழுதி

இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்

ஏழைப் பெண்களை எரித்தழிக்க வசதியான ஆண்கள் ஒருநாளும் தயங்குவதில்லை.

உடம்பெல்லாம் தாங்கமுடியாமல் எரிகின்றது.அக்கினிக்குள் குளிப்பவள்போல அவள் துடிக்கின்றாள். பொன்னுடல் என்று வர்ணிக்கத் தக்க அவள் உடல் எரிந்த கருகிய அடையாளத்தில் பார்ப்பதற்குக் பயங்கரமாகவிருக்கிறது.

உடம்பின் கீழ்ப்பாகம் முழுதும் கருகிவிட்டது.மேற்பாகத்தில் பெரியதாக்கம் எதுவுமில்லை. அதுவும் அந்தக் குறுகுறுப்பான முகத்தில் எந்த வடுவும் இல்லை. கீழ்ப்பாக எரிவின் வேதனையால், அவள் முகம் சுருங்குகின்றது.கீழுதட்டைப் பற்களால் கடித்துக்கொண்டு வேதனையை மனதினுள் அமுக்குகிறாள். அவளுக்கு வயது இருபது இருக்கலாம்.

இளமையின் சிங்காரமெல்லாம் நிறைந்த வயது.காற்றை வாரியிறைக்கும் மின்விசிறி அவள் உட லிற்கு இதந்தரவில்லை. எரிவு கூட,அவள் உடம்பை முனகலோடு நெளிக்கிறாள்.

முனகலும், நலிவும், மெலிவும், சோகமும், துயரமுமாய் அவள் கண்களிலே வரிக்றது அந்த ஆஸ்பத்திரி வார்ட்..

எத்தனை துன்பங்கள்! நீரிழிவு நோயால் காலிழந்த அம்மணிப் பாட்டியின் கரகரத்த ஓலம் இடது பக்கத்தில். மறுபக்கம், எரிகாயங்க ளால் உடல் நிறைந்த ஒருத்தியின் மௌன முனகல். அவள் சத்தத்தை விட, அவளின் நாற்றம்தான் அவளை நினைவூட்டும். அவர்களுக்கு நடுவில் அவள்-சிவகாமி.

'ஐயோ கடவுளே,எரிவோடு எரிவாய் என்னைக் கொண்டு போயிருக்கலாமே? ஏன் இப்படி வதைக்கிறாய்?' சிவகாமியின் இதயமும் கண்களும் விடுதலைக்காக ஏங்கித் தவிக்கின்றன.

யாரோ வருகிறார்கள்.,போகிறார்கள், நெஞ்சு நிறை துயரங்கள் தங்களின் பார்வையாளர்களிடம் பணிக்கப் படுகின்றன. வாதையோடு வேதனையைத் தாங்கி நின்ற முகங்களில், மகிழ்சியின் வேலைப்பாடு மின்னுகின்றன.

'சிவகாமி'.

உள்ளம் உடைபட்ட குரலில் ஓடி வருபவர்கள் அவளைப் பெற்றெடுத்தவர்கள். நெஞ்சம் துடிக்கத் தெருவோரம் நின்ற தவிப்பு மறைகிறது.

'ஏனம்மா அழுகிறீர்கள்?'

ஏதோ கேட்கவேண்டுமென்று கேட்கிறாள் சிவகாமி.வெறும் ஓசையாய் வெளிப்பட்ட கேள்வியை ஆராயவில்லை பெற்றவர்கள். அணியிழந்து மணியிழந்து, களையிழந்து கருகிய உடலாய்க் கிடக்கும் தங்கள் கண்மணியின் நிலையினால் நெஞ்சம் புழுங்குகிறார்கள்.

'சிவகாமி'

அன்பும் ஆதரவும் கலந்த அந்த சாந்தமான குரலைக் கேட்டுத் திரும்புகிறாள் சிவகாமி. ஊசி மருந்துடன் நிற்கிறாள் நேர்ஸ் மரியா..

'ஒரு ஊசி போடுவமா?'

கண் மட்டத்தில் பிடித்துக் காற்றை வெளியேற்றிவிட்டு ஊசி போடத் தயாராகின்றாள் நேர்ஸ் மரியா.

'ஓம் அம்மா.. இந்தக் கையில காலமை ஊசிபோட்டது. இப்ப உதிலை போடுறியளே.'

பயமும், அன்பு கண்ட துணிவும் மண்டியிடக் கேட்கிறாள் சிவகாமி.

மரியா சிரிக்கிறாள்.குழந்தையின் பூஞ்சிரிப்பு. குழந்தைத் தனமான சிவகாமிக்கு இரங்கிச் சிரிக்கிற சிரிப்பு. சிவகாமியின் முகம் களிப்புறினும், அதை மனத்துள் மறைத்துப் புன்னகையை முகத்தில் ஏற்றிக் கேட்கிறாள்.

'ஏனம்மா இன்னும் எத்தினை நாளைக்கு ஊசிபோடுகிறது?'

'கொஞ்ச நாளைக்குத்தானே, வருத்தம் மாறி,புண் எல்லாம் மாறியபின்.'

'புண்மாறுமா.. பொய்?'

'ஐயோ என்ரை ராசா இப்படிச் சொல்லாதயடி' தாய்மை அழுதது.

நிர்ச்சலனமாய் வெளியே 'சூனியத்தில்' சிவகாமி ஊடுருவுகிறாள். உயிரற்ற அந்தப் பார்வையில் மரியாவுக்கு ஏதோ உண்மை புலப்படுகிறது.

'ஆச்சி ஊசி போடுவமே?'

ஆச்சி அம்மணியிடமிருந்து பதிலுக்கு ஓலம் பிதுங்கிற்று.

'என்ரை முருகா, நான் என்ன கறுமம் செய்தனான்? காலையும் வெட்டிக் கைகையும் ஊசிக்கெண்டு பாழ்படுத்திப் போட்டேனே..'

நோயாளரைப் பார்க்க வந்தவர்கள் நேர்ஸ் மரியாவையும் அம்மணி ஆச்சி யையும் விடுப்புப் பார்க்கிறார்கள்.

'ஏனணை ஆச்சி, உனக்குப் புண் மாற வேணும்தானே. நீங்க மாட்டனென்டால் எனக்கென்ன? சரி நான் போறன். நீங்க என்னெட்டான செய்யங்கோ..' பொய்க் கோபத்தில் மரியாவின் முகம் மாறுகிறது.

அம்மணி ஆச்சியின் பொக்கை வாயில் சிரிப்பு குமிழ்கிறது. காலிழந்த துன்பம் வேறு, கைவலி மற்றொன்று.கனிவுடன் அம்மணிக் கிழவியைத் தடவுகையில் மரியா தன் ஆச்சியையும் நினைக்கிறாள். அவளின் ஆச்சி திரோசாவும் இவள் போலவே இருப்பாள்.

ஊசி வண்டி நகர்கிறது.

வெளியில் ஊதற்காற்று. சாரல் அடிக்கிறது. ஜன்னலுக்கு வெளியே பார்வை போகிறது.தூறல் மழையில் தலையின் சுமையோடு ஒருவன் செல்கிறான்.அவன் கஷ்டப்படுவதெல்லாம் தன் பிள்ளைகளுக்காகவிருக்கலாம். மரியாவின் மனக் கண்ணில் நீர் பனிக்கின்றது. உயிருடன் போராடிக் கொண்டிருக்கும் அந்தக் கடைசிக் கட்டில் நாகம்மாவின் மகன் போனகிழமை கேட்டான்.

'மிஸி.. 'இது' இப்படி எத்தனை நாளைக்கு இழுத்துக் கொண்டு கிடக்கும்?'

நெஞ்சிலும் நினைவிலும் மடியிலும் அன்பால் சீராட்டி வளர்த்த அவனின் தாய் நாகம்மாவிற்கு அவன் இட்ட பெயர் 'இது' ஆயிரம் விதமான உணர்ச்சிகளின் எழுச்சிகளை, ஏளனங்களை மன்னித்தவள் மரியா, இந்தப் பாசமற்ற கேள்விக்குரியவனை அவளால் மன்னிக்க முடியவில்லை. ஊருக்குப் பெரிய மனிதன் வேஷமிடும் நரிக்கூட்டத்தில் அவன் ஒருவன்.

வெற்றுணர்வாய், அந்நிமிடத்தின் இடைவெளி கழியச் செல்கிறாள். அந்தப் பக்கத்தால் வருபவர்கள் மூக்கைப் பிடித்துக்கொண்டு பரபரக்கிறார்கள். காரணம் அறியச் செல்கிறாள். ஒவ்வொருநாளும் நாகம்மா ஆச்சி செய்யும் திருவிளையாடல்.அருமையாக வாய்திறக்கும் குணதிசயமுள்ளவள் அவள்.அவளின் கட்டிலின் எல்லா இடமும் அழுக்காகிக் கிடக்கிறது.

ஊசி வண்டி தயங்குகிறது. இன்னொரு தாதியின் உதவியுடன்



துணையோடு வருகிறாள் மரியா.அழுக்கு அகற்றப் படுகிறது.

'மிஸ்' சிவகாமி அழைக்கிறாள். மரியா கண்களால் அவளை என்னவென்று கேடடாள்.

மரியாவின் கண்களில்தான் அவள் பாஷை இருக்கிறது என்பதை சில நாட்களுக்குள் அறிந்தவள் சிவகாமி.

'ஒரு தோடம்பழம் கரைத்துத் தாறிங்களோ?'

இருள் கவியும் நேரம்.பட்டென்று மின் அழுத்தியைத் தட்டுகிறாள் சிவகாமி. பளிரென்ற வெளிச்சத்தில் சிவகாமியின் கண்கள் குளமாயிருப்பது தெரிகின்றது.

'என்ன சிவகாமி.என்னேரமும் அழுதபடி, தெரியாமல் நடந்து போச்சுது, தெரிந்துபோய் நெருப்பில விழயில்லையே!

'தெரிந்து கொண்டு தீயில் விழவில்லை, வஞ்சகத்தில் விழுந்து விட்டேன்'. துயரம் வெடித்து குமுறிற்று. தனிமையின் தவிப்பு, உணர்ந்து கொண்ட துணையைக் கண்டதும் அழுது புலம்புகிறது.

'சிவகாமி அழாதேயும்,கடவுள் நல்லவர்.. இவளத்தோட தப்பினீர், முகம் தப்பினது அருந்தப்பு. கடவுளுக்கு நீர் நன்றி சொல்லவேண்டும்' மரியா ஆதரவுடன் தடவுகிறாள்.

'உயிரோட இருப்பதால அழுகிறேன். உயிர் போயிருந்தால் நிம்மதி'

'கர்த்தரே, இந்தச் சகோதரியின் வாழ்விற்குச் சஞ்சலத்தை நீக்கிச் சாந்தியையும்,சந்தோசத்தையும் வழங்கும்' மரியா யேசுநாதரை வேண்டுகிறாள்.சிவகாமி அழகழிந்த துன்பத்தால் மனம் குழம்புகிறாள்.சிவகாமிக்கு இருபது வயதுதான். அதற்குள்ளா இந்தக் கொடிய துன்பம்.!

'மிஸ்..மிஸ்ஸி' சட்டென்று ஒலி கேட்டுத் திரும்புகிறாள் மரியா.

மிஸ் வேதநாயகம்-சத்திர சிகிச்சைக்காக வந்த நோயாளி, இளம் பெண். குரலி லேயே கர்வமும், முகத்திலே அகம் பாவ மும் எழுதிவைத்தாற்போலத் தெரிகிறது.

'நாளைக்குத்தானே ஒப்பரேசன், இன்டைக்கு 'டென்னுக்' முதல் வயிறாரச் சாப்பிடலாம் என்டுதானே சொன்ன நீங்கள்?.

ஏதும் கேட்கவேண்டும் என்பதால் கேட்ட கேள்வி அது.சிவகாமியுடன் மிஸ் மரியா அன்பாகக் கதைப்பதைக் கண்டதும் மிஸ் வேதநாயகத்திற்கும் கட்டாயம் ஒரு தேவை வரும்.

இருள் எங்கும் பரவிவிட்டது.மிஸ் வேதநாயகத்திற்குத் தேவையான தகவல் களைச் சொல்லி விட்டு மரியா நகர்கிறாள்.

மரியா நேரத்தைப் பார்க்கிறாள். விடுதிக்குப் போகும் நேரமும் வந்து விட்டது.

'மிஸ்ஸி,.சிவகாமிக்குச் சுகம் வருமே? இண்டைக்கும் ரத்தம் கொடுத்தவை. நாளைக்கும் கொடுக்க வேணுமாம்.. யாரையும் ரத்தம் கொடுக்கச் சொல்லினமாம்'.

மிஸ் வேதநாயகம் கதை கிண்டுகிறாள். அந்தக் கதையில் இருந்த விஷம் நூறு பேரைக் கொல்லுமே. எரிந்து கருகிய சிவகாமி இன்னும் உயிரோடு வாழ வேண்டுமா என்று அவள்.நினைக்கிறாள்.

சிவகாமியை மரியா ஆதரவு ததும்பப் பார்த்தாள்.அவளின் பார்வைக்குச் சிவகாமி பதில் சொன்னாள்.

'சாகிறத்துக்கு நான் வேண்டுகிறேன் மிஸ்' **(16 ஆம் பக்கம் பார்க்க...)**

# செ.வே.காசிநாதனின்....

**(14 ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

சொல்லின் அர்த்தம் என்பது என்ன?

அது குறிக்கும் பொருளா?

அது சுட்டும் பயன்பாடா?

அது குறிக்கும் அகநிகழ்வா?

அது எம் அகத்தே உருப்பெற்றிருக்கும் படிமமா?

சொல் என்பது அது சுட்டும் சாரமா?

ஒவ்வொரு சொல்லுக்கும் ஓர் அர்த்தம் உண்டா?

எல்லாச் சொல்லும் பொருள் குறித்ததுவா?

அர்த்தம் என்று ஒரு வரைவிலக்கணம் தருதல் சாலுமா?

இந்தக் கேள்விச் சரங்கள் மொழியின் மூலத்தை நோக்கிப் பாய்கின்றன.

“மொழி ஒரு பரிவர்த்தனைச் சாதனம்” எனல் பொருந்துமா?

எமது மனதிலுள்ளவற்றைப் பிறருக்குத் தெரியப்படுத்துவதற்கே மொழி வேண்டும் என்று கூறுவது ஏற்புடையதா?

உங்கள் மனதில் என்ன உள்ளது என்று யாருக்குத் தெரியும்?

இரண்டு மனங்களுக்குக் கிடைக்கும் தரவுகள் ஒரே மாதிரி இருக்குமா?

மரம் ஒன்றைப் பார்க்கையில், அது பச்சை நிறம் என நாம் ஒப்புக்கொள்கிறோம் என்பது, உன்னுடைய பச்சை நிறமும் என்னுடைய பச்சை நிறமும் ஒன்று என நிரூபிக்குமா?

மொழி என்ற ஒன்று இல்லாமலேயே, புலன்களாலும் எமது மனத்தின் செயல்களாலும் ஏற்படும் அறிவு, உணர்ச்சி, எண்ணம், கற்பனை எல்லாம் எமக்குள் புதைந்துள்ளனவா?

மொழி இன்றியே இம்மன நிகழ்ச்சிகளை ஒருவன் கொண்டிருத்தல் சாத்தியமா?

இத்தகைய எண்ணற்ற கேள்விகளை இந்நூல் எழுப்பி, விற்கன்ஸ்ரைனின் ஒளியில் பதில் காண முற்படுகிறது.

சடத்தாலாகிய உடல், சூக்குமமான மனம் என்ற காட்டீசிய இருமை அல்லது காட்டீசிய துவிதம் (Cartesian Dualism) என்ற கருத்தியலின் மீது இந்நூல் ஐயங்களை, கேள்விகளை எழுப்புகிறது.

சடமான உடல் எப்படி சூக்குமமான மனதுடன் தொடர்பு கொள்கிறது?

உடலின் நிகழ்வுகளை எல்லாம் மனம் எப்படி அறிகிறது?

புலன்களால் அறிவது யார்?

கண் பார்க்கிறதா? அல்லது கண்ணும் பிறவும் சேர்ந்த உடலின் அகத்தே இருக்கும் நானா?

காலில் நோகிறதா? அல்லது உள்ளேயிருக்கும் எனக்கா?

“மனம், உடல் என இரண்டால் ஆனவர் நாம் என்பது உண்மையா? இல்லை, இல்லை. மனம், உடல் என இரண்டால் ஆனவர் நாம் என்பது பொய்யா? இல்லை, இல்லை. இந்நூலின் வாதங்கள் இட்டுச்செல்வது இந்த இடத்திற்கே. இறுதியில் விற்கன்ஸ்ரைன் சொல்வது போல, இது ஒன்றும் பெரிய கண்டுபிடிப் பல்ல; சென்ற வழியிற் கண்டவை சில நயமானவை. அவ்வளவே” என்று இந்நூல் கூற விழைவதற்கு முத்தாய்ப்பு வைக்கிறார் காசிநாதன் அவர்கள்.

“ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வரும் மானுட மொழியாடல், திட்டமிட்டு அமைக்கப்பட்ட ஒன்றல்ல. வெவ்வேறு இயல்புடைய, வளமுடைய, வளங்குறைந்த மக்கள், எப்போதும் ஒருமித்த திட்டமின்றி, ஆண்டாண்டு காலமாய் அந்தந்த நேரத் தேவைகளுக்கு ஏற்ப ஈடுபட்ட நடவடிக்கைகள், கண்ட கனவுகள், கொண்ட பயங்கள் என்பனவற்றால் எல்லாம் வளர்ந்த, சிதைந்த, சிக்கலான, பரந்த பெருநகர் இது. இங்கே விஞ்ஞானக் கல்லூரியும் இருக்கும், வேத பாடசாலையும் இருக்கும். கவிதையும் இருக்கும், விமர்சனம் எனப்படுபவையும் இருக்கும். அளந்து பார்க்கக்கூடிய ஆழமும் இருக்கும். அததற்குத் தேவையும் பயனும் மதிப்பும் உள் நமது பாட்டன், பாட்டிக்கும் முந்திய காலத்திலிருந்தே நிலைபெற்ற யதார்த்தங்கள் இவை” என்கிறார் காசிநாதன்.

நூற்றி ஐம்பது பக்கங்கள் கொண்ட இந்நூல் எளிய வாசிப்பிற்கு உரியதல்ல. ஆழ்ந்த கிரஹிப்பைக் கோரு வது. ஒவ்வொரு வரியையும் நின்று, நிதானித்து வாசித்து விளங்கி மேற்செல்ல முயல்தல் உசிதமானது. சில அத்தி யாயங்களை இடையே சென்று வாசித்தாலும் விளங்கு வதற்கு வழிசமைப்பதாய் அமைந்திருப்பது இந்நூலின் பலம்.

க்ரியா வெளியீடாக வந்திருக்கும் இந்நூலின் அட்டைப்படம் ஓவியர் கே.கே. ராஜாவின் அசத்தலான வடிவமைப்பில் தூக்கலாகத் தெரிகிறது. நேர்த்தியான பதிப்பில், கெட்டி மட்டையில், சுதர்சன் கிரபிக்ஸ் அச்சகத்தின் செம்மையான வேலைப்பாட்டில் நூல் சிறப்பாகவே வந்திருக்கிறது. ■

---

# சித்திரத்தில் பெண் எழுதி

**(15 ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

‘கர்த்தரே இருபது வயதேயான இவ ளுக்கு எவ்வளவு விரக்தி? இதைத் தீரும்’ மரியா பிரார்த்தித்தாள்.

‘என்னம்மா யாரும் ரெத்தம் கொடுக்க வந்தார்களா?’ சிவகாமியின் தாய் மௌ னமாக நின்றவள் மெல்லச் சொல்கிறாள்.

‘ஒருத்தன் வந்தான், கனகாசு கேட் கிறான்.அவனுக்கு நான் எங்க போவன்?’

‘மடுவில் மாதாவே, இப்படியொரு கொடுமையா? பதிலின்றி விரைகிறாள் மரியா.

நாகம்மாவின் இறுதி மூச்சுத்துடிக் கிறது.

மௌனத்தால், துன்பத்தை அமுக்கிய வைராக்கியம் பாய்ந்த முகத்தில் வெளிறல் பரவுகிறது.

‘இது’ எப்போது மேலே போகும்’ என்று கேட்ட மகன் கடைசி நேரத்திலும் அங்கு இல்லை. அந்தக் கட்டிலில் இருந்து அவளின் பிரேதம் அகற்றப்படுகையில் அந்த வார்ட்டின் சோகமயமான பெரு மூச்சு எல்லோர் நெஞ்சிலும் எழுந்தது.

‘இரத்தத்திற்கு ஒழுங்கு பண்ணிட்டம் அம்மா.’

நிறைவுடன் கூறிய தாயை மரியா நோக்கினாள்..சிவகாமியின் தாயின் காதை அலங்கரித்த தோடுகளைக் காண வில்லை.தோடுகளே இரத்தமாயிற்று!

மூக்கைத் தாண்டி நாடிவரை கூடியிருந்த “மாஸ்கை’ எகிறி மணக்கிற தசை நாற்றம்,சிவகாமியின் பாதியுடல் பச்சை இறைச்சியாய்த் தெரிகிறது. உதிரம் உருகி வடிகின்றது. சிதலும், ஊன நீரும், மணமும், புண்ணும், ஒவ்வொரு தரமும் சுத்திகரிக்கும் போதும் சிவகாமி என்னவிதமாகத் துடிக்கிறாள்.கண்களால் நோக்கி, இதயத்தால் தாங்கமுடியாத துடிப்பு அது.

‘நான்படும் வேதனை போதும், என்ரை கடவுளே என்னைக் கொன்றுவிடும்’ அவள் அழது துடித்தாள்.

‘வாழ முடியேல்லை என்டு சாக நினைச் சன், அது இப்படி வேதனையைத் தருகுதே’

சிவகாமியின் ஓலத்தில் எழுந்த குரலில் பட்டென்று உண்மை தெறித்தது போல் இருக்கின்றது. நெஞ்சில் அமுக்கி வைத்தருந்த உண்மை, எல்லாக் கட்டு களையும் மீறி வெளியே பிரவகித்ததோ?

‘சிவகாமி நீங்கள் விபத்தில் எரிய வில்லை, அப்படித்தானே?’ மரியாவின் தீட்சண்யமான பார்வை சிவகாமியை என்னவோ செய்கிறது.’எனக்கு மட்டும் சொல்’ என்று கட்டளையிடும் பார்வை. அவள் அந்த பார்வைக்கு அடிமையா னாள்.

‘மிஸ்ஸி.. உங்களுக்குச் சொல்லுறன். யாருக்கும் இதைச் சொல்லப்படாது, கெஞ்சிக் கேட்கிறன்.’ மரியாவின் காதுகளில் புளொரன்ஸ் நைட்டிங்கேல் தாயின் சத்திய வாக்கு ஒலிக்கிறது.

‘என்வசம் ஒப்புவிக்கப்பட்ட எந்தக் குடும்ப விஷயத்தையும் வெளியிட மாட்டேன்’.

‘நீ என்னிடம் சொல்லலாம்’ என்ற தோரணையில் மரியா சிவகாமியைப் பார்க்கிறாள்.

‘குடும்பத்தைபக் காப்பாற்ற வேலை செய்து வந்தேன், என்னை நான் கட்டுப் படுத்தி வந்தேன். ஏழ்மையும் இல்லா மையும் என் ஒழுக்கத்தை உயர்த்தி வைத்திருந்தது.வெளி மயக்கு, வெறும் வார்த்தையின் வேஷம், இவற்றின் முன் .. நான் தலைகீழாய் கவிழ்ந்து.. ஐயோ மிஸ்ஸி..’

சிவகாமி சரிந்து சரிந்து அழுது துடித்தாள். மரியாவுக்கு அந்த நிமிடம் நெஞ்சம் உடைந்தது. அந்தக் கள்ளம் கபடமற்ற பிஞ்சுமனம், இந்த ஏமாற்றத் தால், இந்தத் தவறால் தன்னை மாய்க்க முயன்ற கொடுமையை மரியா நினைத் தாள். இவள் இன்று தன் இதயத்தால். தன்னை மீறி அழுதாள். ஆனால் அந்தக் கண்களில் மீண்டும் சாந்தி தெரிந்தது.

‘சிவகாமி இதற்காக இப்படிச் செய்தாய்? விசர்ப்பிள்ளை. வாழ விடாதவன் முன் வாழ்ந்து காட்டாமல், இப்படியா செய்வது? வெறும் அன்பின் தோல்வியால் வாழ்க்கையை முடித்துக் கொள்வதா?’

‘அன்பு தோற்றால் வாழலாம், பண்பு தோற்றால் வாழமுடியுமா மிஸ்?’

மரியா அந்தச் சொற்களின் முன் பதில் சொல்ல முடியாது போனாள், உடைந்த இளமைக்கு என்ன தேறுதல் சொல்வது?

பழைய நினைவுகளில் சிவகாமி குமுறினாள்.

‘பாவம் குமர்ப் பெட்டை எரிவு தாங்காம அழுகிறாள்’ அம்மணி ஆச்சி தனது துக்கத்தையம் மீறி சிவகாமிக் காகத் துக்கப் பட்டாள்.

மத்தியானம் டியுட்டிக்கு விரைகிறாள் மரியா.மிஸ் வேதநாயகத்திற்கு ஒப்ப ரேசன் முடிந்து விட்டது.மயக்க மருந்தினால் உறங்குகிறாள்.வேதநாயகத்தை முன்னரே மரியா அறிவாள்.வாழ்ந்து கெட்டவள் வசதியால் மறைத்தவள். சிவகாமியைப்போல் மனச்சாட்சி இருந் தால் ஆயிரம் முறை கருகிச் செத்திருக்க வேண்டும். அவள் வாழ்கிறாள். உலகம் அவளின் பணத்தை மீறி எதுவும் சொல்லாமல் மௌனமாகி விட்டது.

சிவகாமி நன்கு உறங்குகிறாள். அவ ளின் நெற்றியில் மரியா கைவைக்கிறாள். சிவகாமியின் நெற்றி தணலாய் எரிகிறது. காய்ச்சல் அளக்கப் படுகிறது. நூற்று நான்கு டிகிரி. உடனடியாக டொக்டர் வருகிறார்.ஊசி மருந்து எழுதிக் கொடுத்து விட்டு அதை அவசரமாகப் போடும்படி சொல்கிறார்.

டொக்டரை மரியா பரிதாபமாகப் பார்க்கிறாள்.‘டிஸ்பென்ஸரியில் இந்த மருந்து இல்லையே டொக்டர்’

மரியாவின் குரலில் சிவகாமியின் ஏழ்மை பிரதிபலிக்கிறது. சிவகாமியின் தாய் அழைக்கப்படுகிறாள்.

‘அம்மா இதை வெளிக் கடையில உடனே வாங்கி வாருங்கள்’

‘எவ்வளவு காசு வரும் மிஸி?’

மரியா மௌனத்தால் அந்தத் தாயைப் பார்க்கிறாள்.விலையைக் கூறமுன் தாய் அங்கிருந்து போகிறாள்.

குளிர் பந்தனத்தை சிவகாமியின் நெற்றியில் போட்டபடி நிற்கிறாள் மரியா. மனக் குழப்பத்தைப் போலவே கண்களிலும் சஞ்சலம்.

யாரையோ தேடிக்கொண்டு ஒரு இளைஞன் அந்தப் பக்கம் வருகிறான்.

சிவகாமி வேதனையால் உழன்று கொண்டிருக்கிறாள். சிவகாமியைக் கண்டதும் அந்த இளைஞனின் முகத்தில் பேயறைந்த மாற்றம். அதே நேரம் வேத னையுடன் கண்களைத் திறந்த சிவகாமி தன் உணர்வுகளெல்லாம் ஒருங்குசேர மரியாவின் கைகளை இறுகப் பிடிக் கிறாள்.

‘மிஸ் வேதநாயகம்.’மரியாவிற்கு தள்ளி நின்ற அந்த இளைஞனின் குரல் தழும்பிக் கேட்கிறது’

‘பெட் நம்பர் எயிட்’

பதிலைச் சொல்லிக் கொண்டே சிவகாமியைப் பார்க்கிறாள் மரியா. சிவகாமியின் முகமெங்கும் வியர்வை தெறித்திருக்கிறது.

‘அவர் யாரைக் கேட்டார்?’

‘மிஸ் வேதநாயகத்தைக் கேட்டார்,ஏன் தெரிந்தவரோ?’

சிவகாமி தன்னை மறந்து விம்மினாள். குரல் உடைந்து அழுதது.

‘அவர்தான்..அவர்தான்.மிஸ்ஸி..’ மரியாவின் தலையில் ஆஸ்பத்திரி கவிழ்ந்த அதிர்ச்சி.

‘இவனா?’

நேர்ஸ் மரியா அவனைப் பார்த்தாள். ஒரு கொடிய மிருகத்தைப் பார்க்கும் வெறித்த பார்வை. தகப்பன் சம்மதிக்க வில்லை என்ற சாட்டோடு ஒருத்தியின் இளமையைச் சூறையாடிவிட்ட, இன் னொருத்திக்குக் காதலனாய், வஞ்சிக்கப் பட்டவளுக்கு முன் மனிதனாய் நிற்கி றானே..இவன் மிஸ் வேதநாயகத்திற்க ஏற்றவன். இருவரும் ஒரே அச்சு

‘சிவகாமி’ மரியா பெருமூச்செறிந் தாள்.

ஊசி மருந்துடன் எவ்வளவோ நேரம் கழித்து வருகிறாள் சிவகாமியின் தாய்..

‘அடையாளப் பாஸை உள்ள விட்டிட்டுப் போயிட்டன். அதால காவல்காரன் உள்ள வர விடமாட்டன் என்டிட்டான்’

சிவகாமியின் தாய் களைத்திருந்தாள்.

‘நீ காற்சட்டை போட்டவனோட நாலு இங்கிலிசில கதைத்துக்கொண்டு வந்திருந்தா வரமுடியாத நேரத்திலயும் உள்ளே வந்திருக்கலாம்’ தாய்க்குச் சொல்ல மரியாவுக்கு வாய் உன்னியது.

சிவகாமி புலம்புகிறாள்.

‘அம்மா, இருவது வருஷமும் நேர் மையா வாழ்ந்திட்டு உங்கட நம்பிக்கை யைக் கடைசில கெடுத்திட்டு.. அம்மோ..’ தாயால் தாங்கமுடியவில்லை. மகளை விளங்காமலே அவளும் அழுதாள்.

நேர்ஸ் மரியா அசையாது நின்றாள். அவளின் உயிர்நிறைந்த கண்களில் இன்று சவக்களை, அவளே செத்தவள்போல் நின்றாள்.

விடிகின்றது.

மரியா சிவகாமியின் வெறும் கட்டி லைப் பார்க்கிறாள். அக்கட்டிலில் விழுந்து அழவேண்டும் என்ற நெஞ்சத் துடிப்பு. ஆனால்,அவளுக்குரிய தன்னடக்கம் அதைத் தடுக்க நெஞ்சம் அழுகிறது.

அம்மணி ஆச்சியைத் தாண்டி மரியா செல்கிறாள்.எட்டாவது கட்டிலடியில் மிஸ். வேதநாயகத்துடன் ’அவன்’ நிற் கிறான்.

மரியா அவனைப் பார்க்கிறாள். மன்னிப்பற்ற பார்வை. *(1965)* ■


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடம்

**23.**




i) பென்சில் A இன் நீளத்தினை எழுதுக.

......................cm

ii) A,B பென்சில்களின் நீளங்களுக்கு இடையிலான வித்தியாசத்தினை மில்லிமீற்றரில் எழுதுக.

..................................mm

**24.** சங்கவி ஓரிடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து வடக்கு நோக்கி 50m சென்று தனது இடது பக்கமாகத் திரும்பி 100m சென்று கோயிலை அடைந்தாள். பின்னர் அதிலிருந்து இடது பக்கமாகத் திரும்பி 75m சென்று மீண்டும் இடதுபக்கமாகத் திரும்பி 100m சென்று குறித்த இடத்தை அடைந்தாள்.

i) சங்கவி பயணத்தை ஆரம்பித்த இடத்திற்கும் தற்போது உள்ள இடத்திற்கும் இடையிலான தூரம் யாது?

..................................................................................................

ii) பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து கோயில் எத்திசையில் உள்ளது?..........................

**25.** 4லீற்றர் 800 மில்லிலீற்றர் நீர் நிரப்பக்கூடிய தொட்டி ஒன்றில் $\frac{1}{3}$ ற்கு நீர் ஊற்றப்பட்டுள்ளது. அத்தொட்டியை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவை?

.....................l.................ml

**26.** பின்வரும் சிட்டையைப் பூர்த்தி செய்க.

| பொருள் | 1 kg இன் விலை | | அளவு | விலை | |
|---|---|---|---|---|---|
| | ரூபாய் | சதம் | | ரூபாய் | சதம் |
| அரிசி | 110 | 00 | 1500g | ....... | ....... |
| பருப்பு | ...... | ....... | 300g | 18 | 00 |
| சீனி | 145 | 00 | 500g | ........ | ....... |
| | மொத்தம் | | | ........ | ....... |

**27.**

| தோட்டம் | பலா | மா | வாழை |
|---|---|---|---|
| எண்ணிக்கை | 1235 | 999 | 2022 |


தோட்டம் ஒன்றில் உள்ள பயிர் வகைகளின் விபரம் அருகே தரப்பட்டுள்ளது.

1) தோட்டத்திலுள்ள பயிர்களின் மொத்த எண்ணிக்கை யாது? .......................................

2) தோட்டத்திலுள்ள பலா , மா ஆகியவற்றின் கூட்டுத்தொகையானது வாழையின் எண்ணிக்கையை விட எத்தனை அதிகம்?

..................................................................................................


**28.**



இச்சதுரத் தளவடிவத்தில் எத்தனை சமச்சீர்க் கோடுகளை வரையலாம்?

..................................................................................

**29.** மாணவர்கள் குழுவொன்று அதிகமாக விரும்பும் காலை உணவு தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.




i) மிகக் கூடுதலான உணவை விரும்பும் மாணவர்களுக்கும் தோசையை விரும்பும் மாணவர்களுக்கும் இடையிலான வித்தி யாசம் யாது?..........................................................

ii) இட்லியை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை 11 ஆகும். இதனை வரைபில் வரைந்து காட்டுக.

- **30 தொடக்கம் 59 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** "எனது உள அமைதியை எனது வீட்டாருக்கும் என்னால் பகிர்ந்தளிக்கமுடியும்" இது மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின்
1) 3ஆம் படிமுறை 2) 5ஆம் படிமுறை 3) 1ஆம் படிமுறை

**31.** உணவாகப் பயன்படும் இலைகளைக் கொண்ட தொகுதி.
1) பசளி, மா, பாகல் 2) அகத்தி, பூசணி, வல்லாரை
3) வல்லாரை, பொன்னாங்காணி, முருங்கை

**32.** பின்வருவனவற்றுள் ஊனுண்ணி எது?
1) கோழி 2) தும்பி 3) பூனை

**33.** பின்வருவனவற்றில் இலங்கைக்கே உரித்தான முலையூட்டி எது?
1) கலவத்தன் 2) புலத்ஹய்யா 3) சபன்கோழி

**34.** உலக மரபுரிமையாக கணிப்பும் பெற்றுள்ள இடம்
1) சிங்கராசவனம் 2) கசூர்னா கடற்கரை 3) காலிக்கோட்டை

**35.** தேசிய இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரம் கொண்டமைந்த விடை
1) கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, மாவட்டச் செயலகம்
2) பொலீஸ் நிலையம், மாவட்டச் செயலகம், பிறப்புச் சான்றிதழ்
3) பிறப்புச் சான்றிதழ், கடவுச் சீட்டு, அடையாள அட்டை

**36.** கண்டி தலதாமாளிகையில் தியவடனே நிலமே ஆகப் பதவி வகித்தவர்
1) கொங்காலேகொட பண்டா 2) கெப்பெட்டிப் பொல திசாவ
3) வண.எஸ்.மகிந்த

**37.** அனல்மின் உற்பத்திக்குப் பயன்படும் மூலப்பொருள்
1) சூரியஒளி 2) மசல் 3) நிலக்கரி

# ஆளுங்கட்சி பங்காளிகள் பகிரங்க கூட்டம் அரசின் மீது கடும் விமர்சனங்கள் முன்வைப்பு




கொழும்பு, ஒக். 31

கெரவலப்பிட்டி யுகதனவி மின் நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் அரசின் தீர்மானம் தொடர்பில் ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிரதான 11 கட்சிகளும் இணைந்து நேற்றுமுன்தினம் மக்கள சந்திப்பை நடத்தின.

'மக்களிடம் முறையிடுவோம்' என்ற தொனிப்பொருளில் இந்த மக்கள் சந்திப்பு பிட்டகோட்டே சோலிஸ் மக்கள் மன்ற கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ நீர்வழங்கல்துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண,ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, பாராளுமன்ற உறுப்பினர்களான வீரசுமன வீரசிங்க, அத்துரலிய ரத்தன தேரர், ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இதில் உரையாற்றிய தலைவர்கள் தெரிவித்ததாவது: -

### வாசுதேவ நாணயக்கார

"பெரும் நெருக்கடியான நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டணியில் இணைந்த எங்களுக்கு இந்த அரசின் செயற்பாடுகள் மற்றும் செல்லும் பாதை பெரும் பிரச்னையை ஏற்படுத்துவதாக அமைந்தது.

முதலில் எங்களுக்குத் துன்பமே ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து நாங்கள் அனைவரும் இணைந்து இதனை மாற்றுவதற்கு முடிவெடுத்தோம். இந்த அரசில் முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட சிலர் முடிவுகளை எடுத்து செயற்படுவதற்கு ஆரம்பித்துள்ளனர். இதனையடுத்து அரசுக்குள் ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறித்து எங்களுடைய நிலைப்பாடைத் தெரிவிப்பதற்கு ஆரம்பித்தோம்.

ஆனால், இதனை விட மோசமான பாதையை நோக்கிச் செல்வதை உணர்ந்தோம். குறிப்பாக, பொதுமக்களிடம் முறைப்பாடு செய்வதற்குத் தீர்மானித்தோம். அதன்படி, இது பொதுமக்களிடம் முறையிடும் நேரமாகும்" - என்றார்.

### அதாவுல்லாஹ்

"நாங்கள் யாரும் எதிர்க்கட்சியல்ல. ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரசைக் கொண்டுவருவதற்கு முன்னின்று நாம் செயற்பட்டோம். இங்குள்ள அனைவரையும் யார் என்று தெரியும். அதனால் நாங்கள் பொய்க் கூற வேண்டியதில்லை. உண்மையைக் கூற வேண்டும்.

அன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்னைச் சந்தித்தபோது, இந்த நாட்டை ஆட்சி செய்வதற்குத் தேவையான அரசமைப்பு வேண்டும் என்றே அவரிடம் கோரிக்கை விடுத்தேன். ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் கெரவலப்பிட்டி மாத்திரம் பற்றிப் பேசுவது பொருத்தமற்றது. நாட்டை ஆட்சி செய்வதற்கான அரசமைப்பை உருவாக்க வேண்டும்.

அன்றிருந்த ஏகாதிபத்திய அதிகாரம் தற்போது வேறு வடிவில் மீண்டும் இலங்கைக்குள் நுழைகின்றது. அன்று, ஒரே நாடு ஒரே சட்டம் என்றனர். ஆனால், இன்று ஒன்பது மாகாணங்களும் ஒரு மத்திய அரசும் இருக்கின்றன. ஒரே நாடு என்றால் அனைத்து மதங்களும் இல்லாது செய்வது என நினைக்கின்றனர். ஆனால், ஒரே சட்டம் என்பது ஒரே நாடாகும்.

சிங்கள மற்றும் முஸ்லிம்கள் மோத வேண்டியதில்லை. இந்த நாட்டின் சொத்துக்களைச் சூறையாடக் காத்திருப்போரே இனவாதத்தைத் தோற்றுவிக்கின்றனர்.

பிரபாகரனின் பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இந்தியா யுத்தம் செய்தன. இங்குள்ள சொத்துகளைச் சூறையாடுவதற்கே தவிர, எங்களுக்காக அல்ல. ஆகவே, எங்களுடைய சொத்துகள் முக்கியம். இன்று மன்னாரில் எரிவாயு இருப்பதாகக் கூறுகின்றனர். இப்போது எங்களுக்கு எரிவாயு தேவையா?.

நாங்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். எங்களிடையே இனவாதமில்லை. இந்த நாட்டைப் பாதுகாப்பதற்கும் நாட்டின் சொத்துகளைப் பாதுகாப்பதற்குமான வழியை நாங்கள் காட்டுவோம்" - என்றார்.

### திஸ்ஸ விதாரண

"எம்.சி.சி. உடன்படிக்கையில் கைச்சாத்திட்டால் எங்களுடைய நாட்டிலுள்ள பொருளாதாரத்தைத் தங்களுக்கு ஏற்றவாறு முன்னெடுப்பதற்கு அமெரிக்காவுக்கு வாய்ப்புள்ளது.

அதேபோன்று, சோபா உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தால் அமெரிக்காவின் யுத்த முகாமொன்றை நிறுவியிருக்க முடியும். எனினும், அதனையும் தடுத்தோம். ஆனால், தற்போது எல்.என்.ஜி. மின் நிலையத்தின் பங்குகளைப் பெற்றுக்கொண்டு எங்களுடைய பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அமெரிக்காவுக்கு வாய்ப்பளிக்கின்றோம். இதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்க முடியாது.

இந்தக் கெரவலப்பிட்டி மின் நிலையத்தின் பங்குகளை அமெரிக்காவுக்குக் கொடுப்பது எங்களுடைய நாட்டின் அழிவு பாதையின் முதல் படியாகும். இது குறித்து மக்களைத் தெளிவுபடுத்தி இதற்கு எதிராகக் குரல் கொடுப்பதே எங்களுடைய நோக்கமாகும். அனைவரும் ஒன்றிணைந்து ஒரே நாடு என்ற வகையில் இதற்கு எதிராகப் போராட வேண்டும்" - என்றார்.

### உதய கம்மன்பில

"அமெரிக்க நிறுவனத்துடன் கைச்சாத்திட்டுள்ள உடன்படிக்கையின் படி, யுகதனவி மின் நிலையத்தின் 40 பங்குகளையும் எதிர்காலத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய மின் நிலையத்தின் 49 வீத பங்குகளையும் அமெரிக்க நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

அங்கு உருவாக்கப்படும் புதிய மின் நிலையத்தின் முழு பகுதிக்கும் வாழ்நாள் முழுவதும் எரிவாயு வழங்கும் அதிகாரம் அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. எரிவாயு வழங்கும் அதிகாரத்தை அமெரிக்காவிடம் வழங்குவது பெரும் ஆபத்தாகும்.

2019ஆம் ஆண்டு இதற்கான யோசனை முன்வைக்கப்பட்டபோது, எரிவாயு வழங்கும் திட்டத்தை நாங்கள் யாரிடம் கொடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்தோம். எனினும், அமெரிக்க நிறுவனத்தின் முழு அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், மனுக்கோரலுக்கு சமூகமளிக்காத ஒரு நிறுவனத்துக்கு இவ்வாறானதொரு திட்டத்தை வழங்கியிருப்பது வரலாற்றில் முதல் தடவையாகும். இதுபோன்று, பிரேமதாஸ, சந்திரிகா மற்றும் ரணில் ஆட்சியில் நடந்ததில்லை.

இராணுவத்துக்குத் தண்டனை வழக்காவிட்டாலும் சமஷ்டி ஆட்சியைக் கொண்டுவராவிட்டாலும் பொருளாதாரத் தடை விதிப்போம் எனக் கூறிய அமெரிக்காவிடம் இதனைக் கொடுத்திருப்பதே மிகப் பெரும் ஆபத்தாகும். சர்வதேச நாட்டிடம் இந்த அதிகாரத்தை வழங்குவது ஆபத்து என்றால் எங்களை மிரட்டும் அமெரிக்காவிடம் வழங்குவது மிகவும் ஆபத்தாகும்" - என்றார்.

### தயாசிறி ஜயசேகர

"11 கட்சிகள் இணைந்து எங்களுடைய அரசின் சில சில செயற்பாடுகளுக்கு எதிராகப் போராட வேண்டியுள்ளது. ஆட்சியைக் கவிழ்ப்பது, வேறொரு அரசியல் அதிகாரத்தை உருவாக்குவது என்பது இதன் அர்த்தமல்ல.

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் ஜனாதிபதியும் அரசும் பெரும் நெருக்கடியிலுள்ளது. எனினும், எங்களுடைய கப்பலை எங்கும் மோதாது யாருக்கும் காயம் ஏற்படாதவாறு செலுத்த வேண்டும்.

எங்களுக்குப் பலத்தை கொடுத்த கட்சிகளின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே அவசியம். ஆனால், பலத்தை வழங்கிய கட்சிகளின் கருத்துகளுக்கு செவிசாய்க்காது தங்களுடைய கருத்துகளை மாத்திரம் கொண்டு செயற்பட்டால் அங்கு பிரச்சினை ஏற்படும். இதனை மக்களிடம் கூறுவதற்கே நாங்கள் வெளியில் வந்தோம். அரசுக்குள் பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இதனைத் தீர்ப்பதற்கு நாங்கள் பல தரப்பினரிடமும் பேச்சு நடத்தியுள்ளோம்.

இலங்கை பல இனத்துடன் யுத்தம் ஏற்படும் நிலைமைக்கு தள்ளிக்கொண்டிருக்கின்றது. சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் நாட்டுக்குள் பல முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இந்தநிலையில், எரிவாயு அதிகாரத்தை ஒரு நாட்டுக்கு வழங்குவதே ஆபத்தானது. மனுக்கோரலில் எடுக்காது, அரசுடன் பேச்சு நடத்தி பெற்றுக்கொள்வது வெட்கச் செயலாகும்.

நாட்டில் எரிவாயு எடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கும்போது, இவ்வாறு அமெரிக்காவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எரிவாயு அதிகாரத்தை நாங்கள் வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்காவிட்டால் நாடு எதிர்காலத்தில் ஈராக் அல்லது லிபியா போன்று மாறுவதைத் தடுக்க முடியாது.

இந்தியா மற்றும் அமெரிக்காவிற்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய அதிகாரத்தை நாட்டில் தலைதூக்க இடமளிக்க மாட்டோம்" - என்றார்.

### விமல் வீரவன்ஸ

"பெரும்பாலான அமைச்சரவைக் கூட்டங்கள் ஒன்லைனில் இடம்பெறுவதால் நேரில் சந்திப்பதைப் போன்றிருக்காது. இதனால் சமர்ப்பிக்கப்படும் பத்திரங்கள் தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு இடமிருக்காது.

இந்தநிலையில், எரிவாயு வழங்கும் அதிகாரம் அமெரிக்க நிறுவனத்திடம் வாழ் நாள் முழுவதற்கும் வழங்கப்பட்டுள்ளது. பொய்யாக 5 வருடங்கள் எனக் கூற வேண்டாம். எங்களுக்குத் தெரியாத எதிர்காலம் வரை அந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பத்திரிகையை வாசிப்பதற்கு அமைச்சரவையின் செயலாளருக்கே நேரம் கிடைக்கவில்லையாம். இது தொடர்பாக நிதி அமைச்சர் விளக்கமளித்தபோது, குறித்த விடயங்களில் இணக்கப்பாடு ஏற்பட்டது எனக் கூறப்பட்டது. ஆனால், இது தொடர்பாக எங்களிடம் பேச்சு நடத்தவில்லை. திருட்டுத் தனமாகவே இது கொண்டு வரப்பட்டது. இதனை நீதிமன்றத்திலும் சொல்வோம். எனினும், இவை அனைத்தையும் ஏற்றுக்கொண்டு அமைச்சுப் பதவிக்காக அமைதியாக இருக்க முடியாது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கொடுத்த மக்கள் ஆணையைக் கொள்ளையடிப்பதற்கு வழங்கவில்லை. இந்த எரிவாயு எதிர்காலத்தில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படலாம். இந்த எரிவாயு வழங்கும் முறையில் வெவ்வேறு மனுக்கோரல்களை வலுசக்தி அமைச்சு கோருவதற்குத் தீர்மானித்திருந்தது. ஆனால், எரிவாயு வழங்கும் அதிகாரம் எங்களிடமே இருந்தது.

எரிவாயு வழங்கும் முழு அதிகாரமும் அமெரிக்காவுக்குச் செல்வது எதிர்காலத்தில் பாரிய ஆபத்தாகும். இந்த அமைச்சு இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதே நாட்டில் பிறந்து, வாழ்ந்து இறப்போர் எங்களுடைய உடலை இங்கேயே புதைக்க வேண்டும். இந்த அரசை வீழ்த்துவது எங்களுடைய நோக்கமல்ல. மக்களின் வாக்களிப்புக்கமைய செயற்பட வேண்டும். மேலும், இரு உடன்படிக்கைகளையும் கைச்சாத்திடுவதற்கு இடமளிக்கக் கூடாது" - என்றார். (இ)

## விகிதாசார...

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர்.

இதன்மூலம் பாராளுமன்றமும், மாகாணசபைகளும், உள்ளூராட்சி மன்றங்களும் தமது பன்மைத்தன்மை வாய்ந்த பிரதிநிதித்துவம் மூலம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை கண்காணித்து சமநிலைப்படுத்தும் நிறுவனங்களாக ஜனநாயகத்தின் பேரில் செயற்பட முடியும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தமிழ்- முஸ்லிம் கட்சிகளான, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசு கட்சி, ரெலோ, புளொட்), தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் நேற்று கொழும்பில் சந்தித்து தேர்தல் முறை தொடர்பில் ஒன்றுபட்டு செயல்படத் தீர்மானித்தன.

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் இதன்போது பொதுவான நிலைப்பாடு எட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிறிதரன், சித்தார்த்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார், உதயகுமார், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சட்ட செயலாளர் ருஷ்டி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மதியூகராஜா, ஈ.பி.டி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் தவராசா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக எடுத்த தீர்மானம் ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இதன்படி,

பாராளுமன்றத்தினதும், மாகாணசபைகளினதும், உள்ளூராட்சி மன்றங்களதும் கட்சி அங்கத்துவ எண்ணிக்கை தொகுப்பு, வாக்காளர்கள் கட்சிகளுக்கு அளித்த வாக்கு ஆணையை அதிகபட்சமாக பிரதிபலிக்க வேண்டும்.

வெற்றி பெறும் கட்சி, அளிக்கப்பட்ட வாக்குகளில் தாம் பெற்ற வாக்குகளின் விகிதாசாரத்தைவிட, அதிக விகிதாசார எண்ணிக்கையில் ஆசனங்களை எடுத்துகொள்வது தவிர்க்கப்படவேண்டும்.

வாக்கு விகிதாசாரமும், சபை அங்கத்தவர் எண்ணிக்கை விகிதாசாரமும், சாத்தியமானளவில் ஒன்றை ஒன்று ஒத்துப்போக வேண்டும். இந்நிலைமையை விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ் மட்டுமே உறுதிப்படுத்த முடியும்.

உள்ளூராட்சி, மாகாண சபைகள், பாராளுமன்றம் ஆகிய மூன்று மட்ட தேர்தல்களுக்குமான சீர்திருத்தங்கள், தெரிவுக்குழுவினால் ஒரேவேளையில் தயார் செய்யப்பட்டு, ஒரே சட்டமூலத்தின் மூலம் அரசமைப்பு திருத்தமாக கொண்டு வரப்பட வேண்டும்.

ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபை தேர்தல்களை, முன்னுரிமை கொடுத்து, விகிதாசார முறையின் கீழ் நடத்த அரசாங்கம் உடனடியாக முன்வர வேண்டும்-என தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (அ)

## பங்காளிகளுடனான...

டால் வெளியேறுவதே பொருத்தமாக அமையும்."

-இவ்வாறு பங்காளிக்கட்சிகளுக்கு கடும்தொனியில் பதிலடி கொடுத்துள்ளது சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சி.

யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் அரசின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அரச பங்காளிக் கட்சிகளால் நேற்று முன் தினம் மக்கள் பேரவைக் கூட்டம் நடத்தப்பட்டது. இதன்போது மொட்டு கட்சியின் செயல்பாடுகள் கடுமையாக விமர்சிக்கப்பட்டன.

இந்நிலையிலேயே மொட்டு கட்சியின் உறுப்பினரும் அமைச்சருமான ரோஹித அபேகுணவர்த்தன பதிலடி கொடுத்துள்ளார். இந்தக் கூட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

"கூட்டணி அரசியலில் கூட்டு பொறுப்பு இருக்க வேண்டும். அரசுக்குள் ஒன்றையும், வெளியில் வேறொன்றையும் பேசக்கூடாது. சிறிலங்கா பொதுஜன பெரமுனதான் பிரதான கட்சி. நாய்தான் வாலை ஆட்டவேண்டும். வாலால் நாயை ஆட்டுவிக்கமுடியாது. திருமணம் பிடிக்கவில்லையெனில் விவகாரத்து பெறவேண்டும்." - என்றார். (அ)

## கிளாஸ்கோ...

மணிக்கு கிளாஸ்கோ சர்வதேச விமான நிலையத்தை அடைந்த நிலையில், பிரிட்டனுக்கான இலங்கை தூதுவர் சரோஜா சிறிசேன அம்மையார், ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினரை வரவேற்றார்.

காலநிலை மாற்றம் மற்றும் அதற்கு முகங்கொடுத்து செயற்படுவதற்காக நாடுகள் திட்டமிடும் வழிமுறைகள் தொடர்பாக ஆராயும் ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு இன்று தொடக்கம் நவம்பர் 12 ஆம் திகதி வரை, கிளாஸ்கோ நகரில் நடைபெறும். நவம்பர் 01 மற்றும் 02ஆம் திகதிகள், உலகத் தலைவர்களின் மாநாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

"காலநிலை மாற்றத்துக்கு எதிரான போராட்டத்தின் தீர்மானமிக்க சந்தர்ப்பங்கள்" என்று நடைபெறும் இம்மாநாட்டில், 197 நாடுகளின் அரச தலைவர்கள், அரச பிரதிநிதிகள், புத்திஜீவிகள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுமார் இருபத்தையாயிரம் பேர் கலந்துகொள்ளவுள்ளனர். பிரிட்டனில் இடம்பெற்ற மாநாடுகளில், இதுவே மிகப் பெரிய மாநாடாகக் கருதப்படுகிறது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், சுற்றாடல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, சூரியசக்தி, காற்று மற்றும் நீர்மின்சார உற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும், ஜனாதிபதியுடன் இவ்விஜயத்தில் இணைந்துள்ளனர். (அ)



# மீண்டும் தொற்று உயரலாம்!

## விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 31

பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலைமையில் மக்கள் சுகாதார வழிக்காட்டல்களுக்கு அமைவாக நடந்துகொள்ளாத காரணத்தினால், நாட்டில் மீண்டும் கோவிட் தொற்று பரவலாம் என விசேட மருத்துவ நிபுணர்களின் சங்கம் எச்சரித்துள்ளது.

பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பின்னர், மக்கள் அடிப்படை சுகாதார சட்டங்களை மீறி, பாதுகாப்பற்ற வகையில் செயற்பட்டு வருகின்றனர்.

இதனால், பச்சை நிற வலயங்களாக இருக்கும் நாட்டின் பகுதிகள் சிகப்பு நிற வலயங்களாக மீண்டும் மாறும் ஆபத்து இருப்பதாக சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் வருவது அதிகரித்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் இப்படியான நிலைமை ஏற்பட்டதால் பெருந்தொகையான அந்நிய செலாவணியை இழக்க நேரிடும் எனவும் பயணக் கட்டுப் பாட்டு சட்டங்கள் தேவைக்கு அதிகமாக தளர்த்தப்படுவது சிறந்த நிலைமையல்ல எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மேலும் 19 பேர் தொற்றால் மரணம்!

கொழும்பு, ஒக். 31

நாட்டில் நேற்று முன்தினம் கொரோனா தொற்றால் 19 பேர் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13,725 ஆக அதிகரித்துள்ளது.

# சிறுபான்மையினருடன் இணைய ஜே.வி.பிக்கு விருப்பமில்லையா?

## மனோ கணேசன் கேள்வி



கொழும்பு, ஒக். 31

சிறுபான்மையினருடன் இணைந்து செயல்பட ஜே.வி.பிக்கு விருப்பமில்லையா? என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் சிறுபான்மைக் கட்சிகளின் கருத்தாடல் நேற்று கொழும்பில் இடம்பெற்றபோது அவர் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

நேற்றைய நிகழ்வுக்கு ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அவர்கள் வராத நிலையிலேயே மனோ கணேசனினால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதேவேளை, நாட்டில் நிறைவேற்று அதிகாரம் உள்ளது. அது 20ஆவது திருத்தத்தின் ஊடாக வலுப்பெற்றுள்ளது. இந்த நிலையில், பாராளுமன்றத்தில் சிறுபான்மைக் கட்சிகளின், சிறுக்கட்சிகளின் கருத்துக்கள் பிரதிபலிக்க வேண்டும்.இது இல்லாதபோது ஏகாதிபத்திய வாதம் தலைதூக்கும் என்றும் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் தொகுதிக்கு பொறுப்புக்கூற கூடியவராக இருக்கக்கூடாது.அவர் நாட்டுக்கு பொறுப்புக்கூறக்கூடியவராக இருக்க வேண்டும். தேர்தலில் விருப்புத்தெரிவு என்பது அவசியமானது. இதன்போதே மக்களின் ஜனநாயகம் பாதுகாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் சீர்திருத்தங்கள் உள்ளூராட்சி சபை, மாகாணசபை மற்றும் பாராளுமன்றம் என்ற அனைத்து சபைகளுக்கும் ஒருங்கே கொண்டு வரப்படவேண்டும் என்றும் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

## மாகாணத்தடை...

னர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், பொது போக்குவரத்தை பயன்படுத்தும்போது சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## வன்முறைக்கு...

செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 5 வாள்கள், 2 மோட்டார் சைக்கிள் செயின், 6 பை கஞ்சா மற்றும் ஒரு கிராம் 650 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டனவென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கைது நடவடிக்கை நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

பழைய வீடொன்றில் வன்முறைக் கும்பல் ஒன்று வன்முறைக்கு தயாராகி வருவதாக பொலிஸாருக்குக் தகவல் கிடைத்தது.

அதன் அடிப்படையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து வீட்டை சுற்றிவளைத்து சோதனையிட்டபோது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்கள் 13 பேரும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (அ-02-03)

## மீண்டும் விக்கி...

துள்ளது.

'டான் தமிழ் ஒளி'யில் நேற்று இரவு ஒளிபரப்பான 'நெற்றிக்கண்' நிகழ்ச்சியில், கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம். கே.சிவாஜிலிங்கம் இதனை திட்டவட்டமாகத் தெரிவித்தார். நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மீண்டும் வடக்கு முதலமைச்சராக களமிறங்க விருப்பம் தெரிவித்துள்ளமை தொடர்பில் சிவாஜிலிங்கத்திடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர், தாம் ஆதரவு வழங்கப்போவதில்லை என உறுதிபடத் தெரிவித்தார்.

அத்துடன் சி.வி.விக்னேஸ்வரனுக்கு மக்கள் தற்போது அளித்துள்ள பொறுப்புக்களை அவர் சரிவர ஆற்ற வேண்டும் என்பது தமது விருப்பம் என்றும் சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டினார். (அ)

## குடாநாட்டில்...

வருகின்றது. இதனால் மறுஅறிவித்தல் வரை கரையோர மக்களை அவதனமாக இருக்குமாறு யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்திருந்தது.

தொடரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஆஸியை 8 விக்கெட்களால் வென்றது இங்கிலாந்து அணி!

டுபாய், ஒக். 31

ஜோஸ் பட்லரின் அதிரடி ஆட்டமும் இங்கிலாந்து வீரர்களின் அபார பந்துவீச்சும் கைகொடுக்க தான் சந்தித்த மூன்றாவது போட்டியையும் வெற்றி கொண்டது இங்கிலாந்து அணி. இதன் மூலம் கிட்டத்தட்ட அரையிறுதி வாய்ப்பை அந்த அணி உறுதி செய்துள்ளது.

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் - 12 சுற்றில் குழு 01இற்கான போட்டியில் நேற்றிரவு அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் பொருதின.

டுபாயில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிகொண்ட இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

அவுஸ்திரேலிய அணிக்கு வோர்ணர், அரோன் பின்ஞ் இணை தொடக்கம் கொடுத்தனர். முதல் பந்தில் ஓர் ஓட்டம் எடுத்த வோர்ணர் - அவர் எதிர்கொண்ட இரண்டாவது பந்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார்.

அரோன் பின்ஞ் (44 ஓட்டங்கள்) நிலைத்தாட, அடுத்து வந்த ஸ்மித் 1, மக்ஸ்வெல் 6, ஸ்ரொய்னிஸ் ஓட்டம் எதையும் பெறாமலே விரைவாகவே பெவிலியன் திரும்பினர்.

எனினும் மத்தியூவேட் (18), அஸ்ரன் அகர் (20) ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தால் அணி ஓரளவு போராடக்கூடிய ஓட்ட இலக்கை நிர்ணயித்தது.

20 ஓவர்களில் அவுஸ்திரேலியா அனைத்து விக்கெட்களையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் ஜோர்தன் 3 விக்கெட்களையும், கிறிஸ் வோக்ஸ், தைமல் மில்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

126 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 11.4 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதில், ஜோஸ் பட்லர் 5 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளை விளாசி 32 பந்துகளில் 71 ஓட்டங்களையும், பெயர்ஸ்ரோ 2 சிக்ஸர்களுடன் 16 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர். தொடக்கம் கொடுத்த ஜசன் றோய் 22 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் அஸ்ரன் அகர், அடம் ஷம்பா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக கிறிஸ் ஜோர்தன் தெரிவானார். (ஐ)



# தென்னாபிரிக்காவிடம் வீழ்ந்தது இலங்கை அணி!



சார்ஜா, ஒக். 31

பதும் நிஷங்கவின் அதிரடி ஆட்டமும் ஹசரங்கவின் தொடர் விக்கெட் வீழ்த்தலும் கைகொடுக்காமல் போக தென்னாபிரிக்க அணி இலங்கையை 4 விக்கெட்களால் வெற்றி கொண்டது.

தென்னாபிரிக்காவின் வெற்றிக்கு இறுதி ஓவரில் 16 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் லஹிரு குமாரவின் பந்தில் டேவிட் மில்லர் தொடர்ச்சியாக இரு சிக்ஸர்களை விளாச, 19.5ஆவது பந்தை எதிர்கொண்ட ரபாடா அந்தப் பந்தில் பௌண்ட்ரி அடித்து அணியை வெற்றிபெற வைத்தார்.

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரின் குழு 1இற்கான போட்டியில் நேற்று இலங்கை - தென்னாபிரிக்க அணிகள் மோதின. சார்ஜாவில் நடந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியில் விலகிய குயின்ரன் டி கொக் இந்தப் போட்டியில் களமிறங்கி, கறுப்பர்களின் வாழ்க்கை முக்கியம் அமைப்புக்கு ஆதரவு தெரிவித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு தொடக்கம் கொடுத்த பதும் நிஷங்க அதிரடியாக ஆடினார். ஆனால், மறுமுனையில் வந்த குசல் பெரேரா 7 ஓட்டங்கள், சரித் அசலங்க 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த வீரர்களும் வந்தவேகத்திலேயே ஆட்டமிழந்தனர்.

எனினும், 58 பந்துகளை எதிர்கொண்டு 3 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகளுடன் 72 ஓட்டங்களை அதிரடியாகக் குவித்து பிரெட்டோரியஸின் பந்தில் நோர்ட்ஜேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்த இலங்கை அணி 142 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் தப்ரைஷ் சம்சி, பிரிட்டோரியஸ் தலா 3 விக்கெட்களையும், நோர்ட்ஜே இரு விக்கெட்களையும் கைப்பற்றினர்.

143 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடியது தென்னாபிரிக்க அணி. தொடக்கம் கொடுத்த குயின்ரன் டி கொக் (12 ஓட்டங்கள்), ரீஷா ஹென்றிக்ஸ் (11) என பவர்பிளேயிலேயே வீழ்த்தப்பட்டனர். அடுத்துவந்த வான் டெர் டுசென் 16 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனார்.

எனினும் அடுத்து இணைந்த அணித்தலைவர் பவுமா, அய்டன் மார்க்ரம் ஆகியோர் ஓரளவு பொறுமையாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். மார்க்ரம் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 17ஆவது ஓவரை வீசிய ஹசரங்க முதல் பந்தில் பவுமாவையும் இரண்டாவது பந்தில் டுவைன் பிரிட்டோரியஸையும் ஆட்டமிழக்க செய்து ஹட்ரிக் சந்தர்ப்பத்தை பெற்றபோதும், மூன்றாவது பந்தில் அவரால் விக்கெட் எதையும் பெறமுடியவில்லை.

இறுதி ஓவரில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற 16 ஓட்டங்கள் தேவை என்ற நிலை காணப்பட்டது. அந்த ஓவரை லஹிரு குமார வீசினார். முதல் பந்தில் ரபாடா ஓர் ஓட்டம் பெற்றார். அடுத்த இரு பந்துகளிலும் சிக்ஸர்களை பறக்கவிட்ட மில்லர், நான்காவது பந்தில் ஓர் ஓட்டத்தை பெற்றார். 5ஆவது பந்தை ரபாடா பௌண்ட்ரிக்கு விரட்டவே 19.5 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 146 ஓட்டங்களைப் பெற்று தென்னாபிரிக்கா 4 விக்கெட்களால் வெற்றிபெற்றது.

இலங்கை அணியின் பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க 3 விக்கெட்களையும், துஷ்மந்த சாமீர 2 விக்கெட்களையும் பெற்றனர்.

போட்டியின் நாயகனாக தப்ரைஷ் சம்சி தெரிவானார். (ஐ)












இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX



11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : வீக் என்ட் மூவி-அட்டகாசம்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-திறமையாளர்களுக்கான களம்
**இரவு**
7.00 மணி : SPOTLIGHT - முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : செல்லாடுகளம்-இழுவை மடித்தொழிலினால் பாதிக்கப்படுவது மீனவர்கள் மட்டுமா?



10.00 மணி:-நேர்கொண்ட பார்வை- மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்



## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு